
www.alhasanath.lk

Desgn: Sinan

# அல்ஹஸனாத்

الحسنات إسلامية شهرية تصدرها الجماعة الإسلامية السريلانكية

மலர்: 40 இதழ்: 04 ஏப்ரல்: 2014 ஜு.அல்ஆகிரா: 1435




## கிறீமியா:

## அழிவை நோக்கிச் செல்லும் சர்வதேச ஒழுங்குகள்!

## இஸ்லாம் எனும் குகை நோக்கிய இளைஞர்கள்

## வீட்டுக்குள் ஒரு விவசாயப் பாடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

bcs The Chartered Institute for IT

HIGHER EDUCATION QUALIFICATIONS

New Batch Commencement

Certificate Level - 05th April

Diploma Level - 19th April

PGD Level - 20th April

bcs Accredited Course Provider

25% Discount for University Students and School Teachers

UGC APPROVED

New Batch Commencement

Semester 2 -

Sunday 06th April (8.30-5.30)

Monday 07th April (8.30-5.30)

Semester 4 -

Sunday 06th April (7.30-3.30)

Monday 07th April (8.30-5.30)

Semester 6 -

Sunday 06th April (7.30-12.00)

BIT

Bachelor of Information Technology

50% Discount for University Students

25% Discount for School Teachers

Sri Lanka's #1 For BIT

ESOFT

Shaping Lives, Creating Futures.

METRO CAMPUS KANDY

081 76 94 0 94 | 447, Peradeniya Road, Kandy.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم


**அல்குர்ஆன் விளக்கம்** 4-6
## வளமிக்க பஜ்ருடன் இணைந்து வளம் பெறுவோம்
மௌலவி எம்.எச்.எச்.எம். முனீர்

**அல்ஹதீஸ் விளக்கம்** 7-9
விபச்சாரத்திற்கு வழிவகுக்கும் முறையற்ற
## ஆண்-பெண் தொடர்பு
அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி)

**தஃவா களம்** 10-12
## இஸ்லாம் எனும் குகை நோக்கிய இளைஞர்கள்
இஸட்.ஏ.எம். பவாஸ்

## கட்டார்

13-16

17-20 **கிறிமியா**



"அதிகாலை நேரத்தின் மீது சத்தியமாக!
பத்து இரவுகள் மீது சத்தியமாக!
இரட்டை மீதும் ஒற்றை மீதும் சத்தியமாக!
செல்லும் இரவின் மீது சத்தியமாக!
அறிவுடையோருக்கு இனியும் சத்தியம் தேவையா, என்ன!"
(ஸூரதுல் பஜ்ர்: 1-5)


மலர்: 40 இதழ்: 04
2014 ஏப்ரல் | ஜு. அல்ஆகிரா: 1435
ISSN : 1391 - 460X

வெளியீடு:
இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி



தொடர்புகளுக்கு:
அல்ஹஸனாத்
77, தெமடகொட வீதி,
கொழும்பு-09, இலங்கை
தொலைபேசி :(011) 2689324,
தொலைநகல் :(011) 2686030
மின்னஞ்சல்: alhasanath@gmail.com
இணையதளம்: www.alhasanath.lk



**அந்நிஸா**

24-26 **ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழியல்லாஹு அன்ஹா)**

**மேலிருந்து தொடங்குதல்** 38

**வீட்டுக்குள் ஒரு விவசாயப் பாடம்** 21-23

**குரோதம்** 32-34
**ஆன்மிகம்** 35-36
**ஜம்இய்யா** 40-41
**ஸீரா** 47-49


**விலை விபரம்:**

**உள்நாடு:** தனிப் பிரதி: ரூபா 60.00 | வருட சந்தா: ரூபா 1050.00 | ஆறு மாதம்: ரூபா 525.00

**வெளிநாடு:** இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, சிங்கப்பூர், மலேசியா: 2550.00 |
மத்திய கிழக்கு நாடுகள்: 2600.00 | அவுஸ்திரேலியா, ஜப்பான், தென் கொரியா: 3300.00 |
இங்கிலாந்து, நியூசிலாந்து: 4000.00 | ஐக்கிய அமெரிக்கா, கனடா: 4700.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## INTERNATIONAL DIPLOMA IN SOFTWARE ENGINEERING

**Contents**
- Introduction to software
- Project management & requirement engineering
- Software developing process models & critical systems
- Object oriented system development
- Software testing
- Software maintenance and software cost estimation
- Risk management
- VB.Net
- C++
- Developing realtime softwares
- Software documentation

மேலதிக விபரங்களுக்கு 0777 91 25 97

**Duration:**
**3 months (Full Time)**

**Free** Soft Skill Training Program
Outbound Training Program

## 2016 AL COMMERCE STREAM WITH aat

**English Medium**

உயர் தரத்தில் Commerce இனை தெரிவு செய்யவிருக்கும் மாணவர்கள் இப்பாடநெறியினை தெரிவு செய்வதன் மூலம் குறித்த இரு வருடங்களில் AL தகைமையுடன் மேலதிகமான இன்னும் 05 தகைமைகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை பெறுகின்றனர்.

தமிழ், சிங்கள மொழியில் கற்ற மாணவர்களும் இப்பாடநெறியில் இணைந்து கொள்ளலாம். இவர்களுக்கு பிரத்தியேகமாக ஆங்கில மொழியை கற்றுக் கொள்வதற்கான வகுப்புகள் நடாத்தப்படும்.

## DIPLOMA IN NETWORK ADMINISTRATION

- Introduction To Networking
- Network Types & Topologies
- Work Group Practical
- Client server
- Installing Active directory
- Creating home folder
- NTFS Permission
- DHCP,DNS server
- Printer server

மேலதிக விபரங்களுக்கு 0777 44 62 52

**Duration:**
1 month (Full Time)
3 Months (Part Time)

**100% Practical Oriented**

## ஆங்கிலம் மற்றும் தகவல் தொழிநுட்பம்

## REAL ACCESS PROGRAM

இப்பாடநெறியின் மூலம் 5 தகைமைகளைப் பெறலாம்.

1) Dip in English
2) Dip in Computer Studies
3) Dip in Graphic Designing
4) Dip in Web Designing
5) Dip in Hardware

3 மாதம்
Weekly 05 Days
9:00 to 4:00

பாடநெறி ஆரம்பம்
April 21

சர்வதேச தரம் வாய்ந்த 2 சான்றிதழ்கள் உட்பட 05 DIPLOMA சான்றிதழ்கள் வழங்கப்படும்

## DIPLOMA IN SPOKEN ENGLISH

3 மாதம்
**Weekly 4 Days**
9:00 to 12:30/
12:30 to 4:00

4 மாதம்
**Saturday / Sunday**
9:00 to 2:00

மேலதிக விபரங்களுக்கு
0777 222 529


# GOLDEN COLLEGE

548, Peradeniya Road, Kandy. 0812 20 55 44 , 0777 912 597.

KANDY - 0777 222 529
HATTON - 0777 222 528
VAVUNIYA - 0777 222 527




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐக்கியமாக வாழ்வது சன்மார்க்கக் கடமை

*"தங்கள் மார்க்கத்தைப் பிரித்து, (பல) பிரிவினர்களாக ஆகிவிட்டனரே அத்தகையோரில் (நீங்கள் ஆகிவிட வேண்டாம்) ஒவ்வொரு பிரிவாரும் தங்களிடம் உள்ளதைக் கொண்டு சந்தோஷப்படுபவர்களாக இருக்கின்றனர்."* **(30: 32)**

*"நீங்கள் மார்க்கத்தை நிலைநிறுத்துங்கள்; நீங்கள் அதில் பிரிந்துவிடாதீர்கள்."* **(42: 13)**

*"(யூதர்களான) அவர்கள் தங்களுக்கிடையிலுள்ள பொறாமையால் தங்களிடம் அறிவு வந்த பின்னரே தவிர அவர்கள் பிரிந்துவிடவில்லை."* **(42: 14)**

*"அன்றியும் நீங்கள் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்படிந்து நடவுங்கள். மேலும் உங்களுக்குள் பிணங்கிக்கொள்ளாதீர்கள். அவ்வாறாயின் நீங்கள் தைரியத்தை இழந்துவிடுவீர்கள். மேலும் உங்கள் வலிமை குன்றிவிடும். ஆகவே நீங்கள் பொறுமையுடனிருங்கள். அல்லாஹ் பொறுமையுடையோர்களுடன் இருக்கிறான்"* **(8: 46)**

தேர்தல் காலம் முஸ்லிம்கள் அரசியல் ரீதியாகப் பிளவுபட்டு சேற்றையள்ளி வீசிக் கொள்ளும் காலம். மேல் மாகாண சபை, தென் மாகாண சபை ஆகியவற்றுக்கான தேர்தல் நடைபெறுகின்றது. முஸ்லிம்களும் பல்வேறு கட்சிகளிலும் போட்டியிட்டு, ஒருவருக்கெதிராக மற்றவர் வசைபாடிக் கொண்டிருக்கின்றனர்.

அல்லாஹுத் தஆலா தனது திருமறையிலே முஸ்லிம்களின் ஒற்றுமை பற்றிப் பல்வேறு வசனங்களினூடாக வலியுறுத்தியுள்ளான். இருந்தும் "பிரிவினை" என்பது ஷைத்தானின் ஆயுதமாக தொடர்ந்தும் இருந்து வருகின்றது.

"தரீக்காக்கள்" என்ற பெயர்களில் 50 ஆண்டுகளுக்கு முன் பெரும் உட்பூசல்கள் முஸ்லிம் சமூகத்தை ஆட்கொண்டிருந்தன. ஆனால், இன்று அந்நிலை இல்லை.

"ஜமாஅத்துக்கள்" என்ற பெயர்களில் இன்று அதே வாளைப் பயன்படுத்தி முஸ்லிம்களைச் சிதைத்துக் கொண்டிருக்கின்றான் ஷைத்தான். பல்வேறு ஜமாஅத்துக்கள் செயல்படுவது பிரச்சினையல்ல. ஏனெனில், நல்ல விடயங்களில் முஸ்லிம்கள் போட்டி போட்டுக் கொண்டு செயல்பட அனுமதியுண்டு. ஆனால், அதுவே சமூகத்தை இழிவுபடுத்துவதாயின், நிச்சயமாக அவ்வாறு செயல்படுபவர்களை அல்லாஹ் எச்சரிக்கின்றான்.

தேர்தல்களின் பின்னர், முஸ்லிம்களுக்கெதிரான இன வன்முறைகள் மீண்டும் தலைதூக்க இடமுண்டு. எனவே, அவ்வாறான வேளைகளில் முஸ்லிம்கள் இரு விடயங்களைக் கடைபிடிக்க வேண்டும் என அல்லாஹுத் தஆலா கட்டளையிடுகிறான். ஒன்று "ஒற்றுமை" மற்றையது "பொறுமை."

நிச்சயமாக முஸ்லிம்கள் தங்களுக்குள் பிளவுபட்டு, ஒருவரை ஒருவர் காட்டிக்கொடுக்கும் நேரமல்ல இது. உலகளாவிய ரீதியில் முஸ்லிம்கள் பெரும் சோதனையை எதிர்நோக்கியிருக்கும் இவ்வேளை, தலைமைத்துவத்துக்குக் கட்டுப்பட்டு, நிதானமாக, சிந்தித்துச் செயல்பட வேண்டிய நேரமிது.


சமூக ஒற்றுமைக்கான சில விதிகளை தலைமைத்துவங்கள் ஒன்றிணைந்து தீட்டி, அவற்றை தாங்களும் கடைப்பிடிப்பதோடு தங்கள் ஜமாஅத்தைச் சேர்ந்த இளம் ஆலிம்களுக்கும் கட்டுப்பாடுகளை விதித்தல் வேண்டும். எக்காரணம் கொண்டும் முஸ்லிம்களின் ஐக்கியத்தைக் குலைக்க முயலும் நபர்களை சமூகம் ஏதோ ஒரு வகையில் தண்டிக்க வேண்டும். விசேடமாக "காரசாரமான குத்பாக்களை நடத்தி, மிம்பரைப் பிரிவினைக்கான களமாக ஆக்குபவர்களை இயக்கங்கள் அங்கத்துவத்திலிருந்தும் வெளியேற்றி விட வேண்டும்.

அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள், தேர்தல் முடிந்த கையோடு அனைத்தையும் மறந்து, பழையனவற்றை அசைபோட்டுக் கொண்டிராமல், சமூக ஒற்றுமைக்காக உழைக்க முன்வர வேண்டும். ஏனெனில், முஸ்லிம்களின் எதிர்காலத்தை இருள் கவ்விக் கொண்டிருப்பதாகவே தென்படுகின்றது.

*"நீங்கள் யாவரும் (ஒன்று சேர்ந்து அல்லாஹ்வுடைய (வேதமாகிய) கயிற்றைப் பலமாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள், நீங்கள் பிரிந்துவிட வேண்டாம்."* **(3: 103)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வளமிக்க பஜ்ருடன் இணைந்து வளம் பெறுவோம்!

மௌலவி எம்.எச்.எச்.எம். முனீர், அதிபர், இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரி, புத்தளம்

***"அதிகாலை நேரத்தின் மீது சத்தியமாக! பத்து இரவுகள் மீது சத்தியமாக! இரட்டை மீதும் ஒற்றை மீதும் சத்தியமாக! செல்லும் இரவின் மீது சத்தியமாக! அறிவுடையோருக்கு இனியும் சத்தியம் தேவையா, என்ன!" (ஸூரதுல் பஜ்ர்: 1–5)***

அல்குர்ஆனின் 89ஆவது அத்தியாயமாகிய ஸூரதுல் பஜ்ரின் ஒளியில் பஜ்ருத் தொழுகை மற்றும் பஜ்ர் நேரம் குறித்து உரையாட முற்படுகின்றோம். அல்லாஹ்வின் விருப்பத்துக்குரிய அடியார்கள் அவனது குர்ஆனின் ஸூராக்களுடன், ஆயத்துக்களுடன் தொடர்பு கொள்ளும் போது அவனது தனித்துவமான அருளால் ஆழ்ந்த மதிநுட்பம் நிறைந்த கருத்துக்களைப் பதிவு செய்கின்றனர்.

கலாநிதி சலாஹ் சுல்தான் அவர்கள், ஸூரதுல் பஜ்ருடன் தனக்கு ஏற்பட்ட உறவின் விளைவாக ஸூரதுல் பஜ்ர் தனி மனித சீராக்கம் குறித்த பயிற்றுவித்தலுக்கும் சமூக சீர்திருத்தம் குறித்த அழைப்பியலுக்குமான 14 முறைமைகளை முன்வைக்கிறது என விளக்குகிறார். அதன் ஒரு பகுதியை இங்கு பகிர்ந்து கொள்கிறோம்.

ஸூராவின் ஆரம்ப வசனமாகிய "வல்பஜ்ர்" (அதிகாலை நேரத்தின் மீது சத்தியமாக) இறுதி வசனமாகிய "வத்ஹுலீ ஜன்னதி" (எனது சுவர்க்கத்தில் நுழைந்து விடு) ஆகிய இரண்டு வசனங்களுக்குமிடையே மிக நுட்பமான, ஆழமான தொடர்பு இருப்பதை உணர்கின்றேன். அது சுவர்க்கத்திற்கான எமது பாதையாகும். "எனது சுவர்க்கத்தில் நுழைந்து விடு" என்ற இறுதி வசனத்துக்கு முன்னால் "உனது இரட்சகனிடம் நீ திருப்தியுடனும் திருப்தியுடன் ஏற்கப்பட்டவனாகவும் திரும்பிச் செல்; என் அடியாருடன் இணைந்து கொள்" என்ற இரண்டு நிபந்தனைகளையிட்டு சுவர்க்கத்திற்கான பாதையைக் கூறுகிறது. அதுதான் பஜ்ரை கூட்டாக நிறைவேற்றுவதாகும்.

பஜ்ரை ஜமாஅத்துடன் நிறைவேற்றுதல் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தையும் சுவர்க்கத்தையும் பெற்றுக் கொள்வதற்கான எமது பாதையாகும். சுவர்க்கத்தில் நுழையச் செய்யும் பஜ்ர், ஜமாஅத்துடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது அதன் அடிப்படையாகும். சுவர்க்கத்தை நோக்கிய நகர்வு "என் அடியாருடன் இணைந்து கொள்" என்ற வசனத்துக்குள் அடைமானமாக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்விடயத்தில் அலட்சியமாக, பராமுகமாக இருக்கக் கூடாது என்பதையே இவ்வசனம் உறுதியாகக் கூறுகின்றது.

நிச்சயமாக ஜமாஅத்துடன் பஜ்ரை நிறைவேற்றுதல் மறுமையில் அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தையும் உலகில் மனவெழுச்சி, மன அமைதியையும் ஏற்படுத்தக் கூடியதாகும். "அமைதி கொண்ட ஆத்மாவே!" என்ற விழிப்புத் தொடர் இதனை நிறுத்துவதைக் காண்கின்றோம். 'நப்ஸுல் அம்மாரா' எனப்படும் அடங்காத, நெறிபிறழ்ந்த, அற்ப ஆசைகளால் நிறைந்து வழியும் மனோநிலையிலிருந்து 'நப்ஸுல் லவ்வாமா' எனப்படும் நிந்திக்கும் உள்ளம், தன்னைத் தானே குறை காணும் உள்ளம் என்ற நிலையை படிப்படியாக நோக்கிச் சென்று இறுதியில் அமைதி கொண்ட ஆத்மா (நப்ஸுல் முத்மயின்னா) என்ற உயர்ந்த நிலையை அடையவும் முஸ்லிமின் வாழ்வில் ஈமானைப் பலப்படுத்தவும் ஜமாஅத்துடன் கூடிய பஜ்ர் தவிர்க்க முடியாததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நப்ஸுல் அம்மாரா (அற்ப ஆசைகளை ஆளும் உள்ளம்) என்ற நிலையிலிருந்து நப்ஸுல் லவ்வாமா (நிந்திக்கும் உள்ளம், தன்னை ஒழுங்குபடுத்தும் உள்ளம்) என்ற நிலையை அடைய வேண்டுமாயின் பஜ்ரை ஜமாஅத்துடன் நிறைவேற்ற வேண்டும். இதனை இறைதூதர் முஹம்மத் (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவாகள் பின் வருமாறு தெளிவுபடுத்தினார்கள்:

"ஒருவர் தூங்கினால் அவரின் பிடரியில் ஷைத்தான் மூன்று முடிச்சுக்களை இடுகி றான். ஒவ்வொரு முடிச்சின்போதும் 'உனக்கு நீண்ட இரவுள்ளது. நீ தூங்குவாயாக' என்று கூறுவான். அவர் தூங்கி எழுந்து அல்லாஹ்வை நினைவுகூர்ந்தால் ஒரு முடிச்சு அவிழ்ந்து விடும். அவர் வுழூ செய்தால் இரண்டாவது முடிச்சு அவிழ்ந்துவிடும். அவர் தொழுதால் மூன்றா வது முடிச்சும் அவிழ்ந்துவிடும். உடனே அவர் சுறுசுறுப்பான, மகிழ்ச்சியான மனிதராக ஆகி விடுவார். அவர் தொழவில்லை என்றால் மன நிம்மதி அற்றவராக, சோம்பேறியாக ஆகி விடுகின்றார்." (அல்புகாரி)

இந்நிலையை அடையாதவர்கள் உள்ளக அழுக்குகளோடு, இந்த மார்க்கத்தைப் பின் பற்றி அல்லாஹ்வின் பிரதிநிதியாக அன்றைய பொழுதை ஏற்க முடியாத சோம்பேறியாக இருப்பார். பஜ்ரை ஜமாஅத்துடன் நிறைவேற்றி வரும் ஒருவர், அமைதியடைந்த உள்ளத்தை (நப்ஸுல் முத்மயின்னா) நோக்கி நகர்ந்து கொண்டிருப்பார். அந்த நகர்வை பஜ்ர் எவ்வாறு வழிநடத்துகிறது என நோக்குவோம்.

**01. ஏனைய தொழுகைகளுக்கு இல்லாத தனித்துவங்கள் பஜ்ர் நேரத்துக்கு உண்டு**

ஏனைய தொழுகைகளைக் குறிக்க கையா ளப்படும் ஸலாத் என்ற பதத்துக்கு பதிலாக அல்குர்ஆன் 'பஜ்ர்' என்ற பதத்தைப் பயன்படுத்தி தனித்துவப்படுத்தியிருப்பதை அவதானிக்கின்றோம்.

"நபியே சூரியன் சாய்ந்ததிலிருந்து இரவின் இருள் சூழ்ந்து கொள்ளும் வரை (ழுஹர், அஸர், மஃரிப், இஷா) ஆகிய தொழுகைகளையும் பஜ்ர் தொழுகையையும் (குர்ஆனில் பஜ்ர்) தொழுது வாருங்கள். ஏனெனில், பஜ்ர் தொழுகையானது மலக்குகள் கலந்து கொள்ளும் தொழுகையா கும்." (அல்இஸ்ரா: 78)

**02. நோன்பு ஆரம்பிக்கும் நேரம்**

இறைவன் மிகவும் விரும்புகின்ற ஈமானிய உணர்வுகளுடன் நன்றி உணர்ச்சியின் இரகசியமான தொழிற்பாடு அது. "நோன்பு எனக்குரியது. அதற்குரிய கூலியை நானே கொடுப்பேன். எனக்காக குடிப்பை, உணவை, ஏனைய உடலியல் தேவைகளை விட்டுவி டுகின்றான். நோன்பு ஒரு கேடயமாகும். நோன்பாளிக்கு இரண்டு சந்தோஷங்கள் உண்டு. ஒன்று நோன்பு துறக்கும் நேரம். மற்றையது தனது இரட்சகனை சந்திக்கும் நேரம். நோன்பாளியின் வாயிலிருந்து வரும் வாடை கஸ்தூரியை விட மணம் மிக்கதா கும்." (அல்புகாரி)

இறைநேசர்கள், முத்தகீன்கள், இறை ஞானத் தெளிவு பெற்றோர் தமது இறை வனை நோக்கிய பயணத்தை ஆரம்பிக்கும் நேரமே பஜ்ர். தனக்கும் தனது இரட்சக னுக்கும் மாத்திரமே தெரிந்த நோன்பு என்ற இபாதத்தின் துவக்கப் பொழுதும் இதுவே.

**03. பஜ்ர் உள ஆரோக்கியத்தின், உயிரோட்டத்தின், மனப் பலத்தின் மூலம்**

அல்லாஹ்வின் தூதர் இதனை இவ்வாறு கூறினார்கள்:

"உங்களில் ஒருவர் உறங்கும்போது பிடரியில் ஷைத்தான் மூன்று முடிச்சுக் களை இடுகின்றான். ஒவ்வொரு முடிச்சின் போதும் 'இரவு இன்னும் இருக்கிறது. உறங்கு' என்று கூறுவான். அவன் விழித்து அல்லாஹ்வை நினைவுகூர்ந்தால் ஒரு முடிச்சு அவிழ்கிறது. அவர் வுழூ செய்தால் மற்றொரு முடிச்சு அவிழ்கிறது. அவர் தொழுதால் மற்றொரு முடிச்சும் அவிழ்ந்து விடுகிறது. அவர் மகிழ்ச்சியுடனும் மன அமைதியுடனும் காலைப் பொழுதை அடைவார். இல்லையெனில் அமைதியற் றவராக, சோம்பல் நிறைந்தவராக காலைப் பொழுதை அடைவார்." (அல்புகாரி)

**04. பஜ்ர் ஒரு முஸ்லிமுடைய ஈமானின் யதார்த்த நிலைகளையும் அவனுக்குள் தோன்றும் நிபாக்கின் மாயைகளையும் அன்றாடம் மதிப்பீடு செய்யும் அளவீட்டுக் கருவி**

"நிச்சயமாக நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை வஞ்சிக்கின்றனர். எனினும், அல்லாஹ் அவர்களை வஞ்சித்து விடுகின்றான். அவர் கள் தொழுகையில் நின்றாலோ சோம்பேறி களாக நின்று மனிதர்களுக்கு காண்பிக்க

**நாங்கள் நபியவர்களிடம் இருந்தோம். பௌர்ணமி அன்று அவர்கள் நிலாவைப் பார்த்தார்கள். "நிச்சயமாக நீங்கள் உங்கள் இறைவனை இந்த சந்திரனைப் பார்ப்பது போல் பார்ப்பீர்கள். அவனைப் பார்க்கும் விடயத்தில் உங்களுக்கு எந்த இடையூறும் இருக்காது. சூரியன் உதயமாகும் முன் உள்ள ஸுப்ஹ்த் தொழுகையையும் அது மறையமுன் உள்ள அஸர் தொழுகையையும் நீங்கள் தொழுது வாருங்கள்" என்றார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்புகின்றார்கள். அவர்கள் வெகு சொற்பமானவர்களேயன்றி அல்லாஹ்வை நினைவுகூர்வதில்லை."

*(அந்நிஸா: 142)*

ஒரு முஃமின் தனது உயிரோட்டமிக்க பஜ்ர் தொழுகையின் மூலம் தனது ஈமானை, அதற்கு எதிரான பலவீன நிலைகளை துல்லியமாக மதிப்பீடு செய்து கொள்கின்றான். கலாநிதி அப்துல் காபி அவர்கள் ஒரு முஸ்லிமின் மதிப்பீட்டுத் தளங்களை பின்வருமாறு வகைப்படுத்துகின்றார்:

01. பஜ்ர் நாளாந்த மதிப்பீடு

02. ஜுமுஆ வாராந்த மதிப்பீடு

03. நோன்பு வருடாந்த மதிப்பீடு

04. ஹஜ் வாழ்க்கைக்கான மதிப்பீடு

05. பஜ்ர் அல்லாஹ்வைக் காண்பதற்காக அனுமதி வேண்டிய மன்றாட்டம்

நாங்கள் நபியவர்களிடம் இருந்தோம். பௌர்ணமி அன்று அவர்கள் நிலாவைப் பார்த்தார்கள். "நிச்சயமாக நீங்கள் உங்கள் இறைவனை இந்த சந்திரனைப் பார்ப்பது போல் பார்ப்பீர்கள். அவனைப் பார்க்கும் விடயத்தில் உங்களுக்கு எந்த இடையூறும் இருக்காது. சூரியன் உதயமாகும் முன் உள்ள ஸுப்ஹுத் தொழுகையையும் அது மறையமுன் உள்ள அஸர் தொழுகையையும் நீங்கள் தொழுது வாருங்கள்" என்றார்கள். (முஸ்லிம்)

அல்லாஹ் பற்றிய ஆழ்ந்த விளக்கம், அவ்விளக்கத்தினால் ஏற்பட்ட மிக உயர்ந்த கண்ணிய உணர்வு, அவன் மீது ஏற்பட்ட பயம், எல்லையில்லா நன்றியுணர்வு, இந்த மார்க்கத்தின்பால் கிடைத்த வழிகாட்டல் மற்றும் எண்ணிலடங்கா அருட்கொடைகளினால் ஏற்பட்ட அன்புணர்ச்சி, அவனைக் காண வேண்டும் என்ற உணர்வுடன் ஒரு முஸ்லிம் இருக்க வேண்டும். அதற்குரிய வழியை இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பஜ்ர் மற்றும் அஸர் தொழுகைகளில் கலந்து கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ளுமாறு கூறினார்கள்.

06. நம்பிக்கையை ஏற்படுத்தும் கிழக்கின் ஒளிக் கீற்றுக்கள்

மனிதர்கள் சோதனைகள், பிரச்சினைகள், அநீதி மற்றும் இழப்புகளுக்கு உள்ளாகி வாழ்க்கை முழுவதிலும் இருள் சூழ்ந்த நிலைகளை அவ்வப்போது தனி மனிதர்களாகவும் சமூகங்களாகவும் சந்திக்கின்றனர். ஆனால், இரவு எவ்வளவுதான் நீடித்தபோதும் காலை தோன்றியே தீரும். அது இருளைப் போக்கிவிடும். அவ்வாறே துன்ப, துயரங்கள் நீடிப்பவையல்ல என்பதை பஜ்ரின் ஒளிக் கீற்றுக்கள் உணர்த்தி நிற்கின்றன.

07. பஜ்ர் நரகத்திலிருந்து பாதுகாக்கக் கூடியது

அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கூறினார்கள். "சூரிய உதயத்திற்கு முன்னாலும் சூரிய அஸ்தமனத்துக்கு முன்னாலும் தொழுபவர் நரகில் நுழைய மாட்டார்."

(முஸ்லிம்)

எந்த முஃமின்தான் இந்த தெய்வீகப் பாதுகாப்பை இழக்க விரும்புவான். மறுமை நாளின் பதற்றம் நரகத்தின் பல்வேறுபட்ட தண்டனைகள், அதன் நெருப்புச் சங்கிலிகள், அதன் கொதிநீர், அதன் சீழ், விக்கிக் கொள்ளும் முள்ளாலான உணவு, எல்லாப் பக்கங்களிலிருந்தும் நிறைந்திருக்கும் இழிவுகளிலிருந்தும் தன்னைப் பாதுகாத்துக் கொள்வது எவ்வாறு என்பது அவனைச் சூழ்ந்திருக்கும் பெரும் பிரச்சினை. அதற்கு முன்னால் ஏனைய பிரச்சினைகள் ஒரு பொருட்டல்ல.

08. பஜ்ர் சுவர்க்கம் செல்வதற்கான உத்தரவாதம்

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். "பகலின் வெப்பம் குறைந்த இரண்டு நேரத் தொழுகைகளை (பஜ்ர், இஷா) யார் தொழுகின்றாரோ அவர் சுவர்க்கத்தில் நுழைவார்." (அல்புகாரி)

இது ஒரு தெய்வீகப் பிணை நிற்றல் ஆகும். எம்மில் யார்தான் சுவர்க்கத்தின் சுகந்தங்களை, அதன் ஆறுகளை, மரங்களை, மரங்களின் இலைகளுக்கிடையே இருந்து வரும் ஓசை நயத்தை, பூக்களை, பழங்களை, ஊற்றுக்களை, உயர்ந்த மாளிகைகளை, அதன் விரிப்புக்களை, ஹூருல் ஈன்களான கண்ணழகிகளை, அதன் மலக்குகளை, நபிமார்களை, முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை, நன்மாராயம் கூறப்பட்ட ஸஹாபாக்களை மற்றும் நல்லடியார்களைக் கண்டுகளித்து அவர்களுடன் வாழ, நிரந்தர வாழ்வைப் பெற்றுக் கொள்ள ஆசிக்காதிருப்பார்கள். அவற்றை அடைந்து கொள்வதிலிருந்து ஒரு முஸ்லிம் அலட்சியமாக நடந்து கொள்ள மாட்டான்.

09. பஜ்ர் மறுமை ஒளியின், பிரகாசத்தின் ஒரு மூலம்

மறுமை நாளில் சூரியன் சுருட்டப்பட்டு நட்சத்திரங்கள் ஒளி மங்கி இருள் சூழ்ந்த உலகுக்குள் மனிதன் எழுப்பப்பட்டிருப்பான். இருளுக்கு மேல் இருள் சூழ்ந்திருக்கும். மனிதர்கள் பாதை தெரியாது தத்தளித்துக் கொண்டிருப்பார்கள். அப்போது அல்லாஹ்வால் அருள்பாலிக்கப்பட்ட மனிதர்கள் வெளிச்சத்தில் இருப்பார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக புரைரா அல்அஸ்லமி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "பள்ளிவாசல்களை நோக்கி இருளில் நடந்து சென்றவர்கள் மறுமை நாளில் பூரண ஒளியில் இருப்பார்கள் என்று நன்மாராயம் கூறுங்கள்."

(அத்திர்மிதி)

(55ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபச்சாரத்திற்கு வழிவகுக்கும் முறையற்ற ஆண்-பெண் தொடர்பு

**அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி), விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரி, புத்தளம்

ஆண்-பெண் இரு பாலாரும் ஓர் இடத்திற்கு வருகை தராமலேயே தனித்திருப்பதற்கான வசதி வாய்ப்பை நவீன கால தொடர்பூடக சாதனங்கள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. இதுவும் அண்ணலார் தடுத்துவிட்ட ஹராமான செயற்பாடே. தொடர்பூடகங்களின், இலத்திரனியல் ஊடகங்களின் அதீத பாவனை நமது இளைய தலைமுறையினரின் ஆன்மிக விழுமியங்களையும், பண்பாட்டுப் பெறுமானங்களையும் கபளீகரம் செய்து வருகின்றது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஆழமாக விசுவாசித்தவர் திருமணம் முடிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட ஒரு பெண்ணுடன் அவளது மஹ்ரமான உறவினர் ஒருவர் இன்றி தனித்திருக்க வேண்டாம். அவ்விருவருடன் மூன்றாவது நபராக ஷைத்தான் இருக்கின்றான்."

- ஆமிர் இப்னுரபீஆ (ரழியல்லாஹு அன்ஹு, முஸ்னத் அஹ்மத் -

அல்குர்ஆன் 'அல்பவாஹிஷ்' என்ற பதத்தால் குறிக்கின்ற மானக்கேடான பாவமே விபச்சாரம். முன்னைய வேதங்கள் அனைத்தும் இதனை ஹராமாக்கியிருந்தன. இறுதியாக தீனுல் இஸ்லாமும் வன்மையாகக் கண்டித்து ஹராமாக்கிய துர்நடத்தையே விபச்சாரம். விபச்சாரம் ஒரு மனிதனது குடும்பக் கட்டமைப்பைத் தகர்த்து அழித்து விடுகின்றது. அவனது பரம்பரையை இல்லாதொழித்து விடுகின்றது. படுமோசமான சமூக நோய்கள் பரவுவதற்கும் தூண்டற் காரணியாக அமைகின்றது. பண்பாட்டு வீழ்ச்சிக்கு வித்திடுகின்றது. ஒரு முஸ்லிமின் குடும்பத்திலும், சமூகச் சூழலிலும் வேண்டத்தகாத நிகழ்வுகள் நடைபெறாமல் இருப்பதற்கு வருமுன் காப்போம் திட்டத்தை இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மேற்படி ஹதீஸில் முன்வைக்கின்றார்கள்.

இஸ்லாமிய வாழ்க்கை நெறி ஒரு பாவத்திற்கு அல்லது தீமைக்கு வழி வகுக்கின்ற எல்லா வாயில்களையும் இறுக மூடிவிடுகின்றது. இவ்வகையில் விபச்சாரத்திற்கு இட்டுச் செல்கின்ற ஒரு சிறு வாயிலைத்தானும் அது விட்டு விடாமல் மூடி விடுகின்றது. இது இஸ்லாத்தின் தனித்துவமான அணுகுமுறையாகும்.

"நீங்கள் விபச்சாரத்திற்கு நெருங்காதீர்கள். நிச்சயமாக அது மானக்கேடான பாவமாகவும் படுமோசமான வழியாகவும் இருக்கின்றது." (ஸூரா அல்இஸ்ரா: 32)

வளரிளம் பருவத்தினருக்கு மத்தியிலே உருவாகின்ற படுமோசமான தொடர்பாடலே இத்துர்நடத்தைக்கு வழிவகுக்கின்றது. இத்தொடர்பாடலின் முதற்புள்ளி திருமணம் முடிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்ட ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் பரஸ்பரம் பார்ப்பதாகும். பார்வையே காமத்திற்கு வழிவகுக்கும். ஆகவேதான் அல்குர்ஆன் முஃமினான ஆண்களுக்கும் பெண்களுக்கும் பார்வையைத் தாழ்த்திக் கொள்ளுமாறு பணிக்கின்றது. இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இத்தகைய பார்வையை விபச்சாரத்தின் ஒரு பகுதி என எச்சரித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து வளருகின்ற தொடர்புகளின் காரணமாக டீன் ஏஜ் வயதினர் ஆணும் பெண்ணும் தனித்திருப்பதற்கான ஏற்பாடுகளை தாமாகவே செய்து கொள்கின்றனர். இதன்போது அவர்களது உணர்ச்சிக் கொந்தளிப்பு வேகம் அவர்களது கற்பொழுக்கத்தைக் களங்கப்படுத்தி விடுகின்றது. உண்மையில் இத்தகைய ஆண்-பெண் இரு பாலாரும் தனித்திருக்கும் நிலையில் ஷைத்தானிய்யத் தம் அருகே இருந்து தமது காமப் பசிக்கு தீனி போடுவதை அவர்கள் முழுமையாக மறந்து விடுகின்றனர். இதன் பின்னர் உருவாகின்ற படுமோசமான விளைவுகளால் வாழ்வே கேள்விக்குறியாகின்றது. சிலபோது இத்தகைய டீன் ஏஜ் வயது இளைஞனும் யுவதியும் தற்கொலை செய்து கொள்கின்றனர். இவர்களது இந்த முறையற்ற தொடர்புகளால் சச்சரவுகள் ஏற்பட்டு குடும்பங்களின் மானம் காற்றில் பறக்கின்றது. தாங்கள் பெற்றெடுத்த பிள்ளைகளுடனான உறவை குடும்பங்கள் வேரறுத்துக் கொள்கின்றன.

இத்தகைய வேண்டத்தகாத விளைவுகள் உருவாகாதவாறு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் முன்வைக்கின்ற வருமுன் காப்போம் திட்டத்தை நமது குடும்ப சூழலிலும் சமூகச் சூழலிலும் பெற்றோரும் பொறுப்பு வாய்ந்த மனிதர்களும் அமுலுக்குக் கொண்டு வருவது மார்க்கக் கடமையாகும். அதேவேளை இது ஒரு சமூகத் தேவையும்கூட. வளரிளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இத்தொடர்பாடலின் முதற்புள்ளி திருமணம் முடிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்ட ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் பரஸ்பரம் பார்ப்பதாகும். பார்வையே காமத்திற்கு வழிவகுக்கும். ஆகவேதான் அல்குர்ஆன் முஃமினான ஆண்களுக்கும் பெண்களுக்கும் பார்வையைத் தாழ்த்திக் கொள்ளுமாறு பணிக்கின்றது. இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இத்தகைய பார்வையை விபச்சாரத்தின் ஒரு பகுதி என எச்சரித்தார்கள்.**

பருவத்தினரது கற்பொழுக்கத்தைப் பாதுகாப்பதற்கான முதல் நடவடிக்கையாக அவர்களது உள்ளங்களில் ஈமானை கருத்தியலாகப் பதித்துவிடாமல் அதனை ஓர் உணர்வாக விதைப்பதற்கான உளவள ஆலோசனைகளை முன்வைக்க வேண்டும். நாம் விளக்கத்திற்கு எடுத்துக் கொண்ட ஹதீஸின் முதல் பகுதி இதனையே எடுத்துரைக்கின்றது. எதிர்ப்பால் கவர்ச்சி என்பது இயல்பானது. அதனை நெறிப்படுத்த வல்ல முதல் தர சாதனமே ஈமான்.

முறையற்ற ஆண்- பெண் தொடர்புகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைதான் பெற்றோர், பாதுகாவலர்கள், ஆசிரியர்கள் முதலான பொறுப்பு வாய்ந்த மனிதர்களின் தொடர்ந்தேர்ச்சையான அவதானமும் மேற்பார்வையுமாகும். மஹ்ரமான உறவினர்களின் மேற்பார்வையிலேயே ஓர் ஆணும், ஒரு பெண்ணும் தனித்திருக்க அனுமதி உண்டு என்ற நபிகளாரின் கருத்து இதனை உறுதிபடுத்துகின்றது. இந்த நடவடிக்கை முதலில் குடும்பச் சூழலில் அமுலுக்கு வர வேண்டும். அதாவது, தான் பெற்றெடுத்த பிள்ளை ஆணாக இருப்பினும், பெண்ணாக இருப்பினும் அவர்கள் எதிர்ப்பாலாருடன் தொடர்பு கொள்வதன் விபரீதத்தை அவர்களுக்கு பெற்றோர் உணர்த்த வேண்டும். தாய்- தந்தை வழி மஹ்ரமான உறவுகளையும் அஜ்னபி உறவுகளையும் அவர்களுக்கு வேறுபடுத்தி விளக்குவது பெற்றோரின் கடமையாகும். உதாரணமாக "தந்தையின் சகோதரர்களது ஆண் மற்றும் பெண் பிள்ளைகள் உங்களுக்கு அஜ்னபியான சகோதர சகோதரிகள். எனவே, உடன் பிறந்த சகோதர, சகோதரிகளுடன் பழகுவதைப் போல நீங்கள் அவர்களுடன் பழக முடியாது" என்ற விளக்கத்தை வழங்க வேண்டும்.

குடும்பங்களில் நடைபெறும் திருமணம் போன்ற வைபவங்கள், விஷேட நிகழ்வுகளின்போது பருவ வயதை அடைந்த தமது பிள்ளைகள் அஜ்னபியான (திருமணம் முடிக்க அனுமதியளிக்கப்பட்ட) பிள்ளைகளுடன் தனித்திருப்பதை கண்டிக்க வேண்டும். அவ்வாறான சூழல் அமையாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். திருமண வீட்டில் நடைபெறுகின்ற சடங்கு சம்பிரதாயங்களுக்கும் விருந்துக்கும் முக்கியத்துவம் கொடுத்து கற்பொழுக்க விடயத்தில் பெற்றோர்கள் அலட்சிய மனப்பான்மையுடன் நடந்து கொண்டால் தமது பிள்ளைகளை அவர்கள் இழக்க நேரிடலாம். பயணங்களின்போதும் பெற்றோர் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

பருவ வயதை அடைந்த ஓர் ஆணும் ஒரு பெண்ணும் ஓர் இடத்தில் தனித்திருப்பதை மட்டும்தான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தடை செய்தார்கள் என்பதல்ல. ஆண்-பெண் இரு பாலாரும் ஓர் இடத்திற்கு வருகை தராமலேயே தனித்திருப்பதற்கான வசதி வாய்ப்பை நவீன கால தொடர்பூடக சாதனங்கள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. இதுவும் அண்ணலார் தடுத்துவிட்ட ஹராமான செயற்பாடே. தொடர்பூடகங்களின், இலத்திரனியல் ஊடகங்களின் அதீத பாவனை நமது இளைய தலைமுறையினரின் ஆன்மிக விழுமியங்களையும், பண்பாட்டுப் பெறுமானங்களையும் கபளீகரம் செய்து வருகின்றது.

இலத்திரனியல் ஊடகங்கள் குறித்த இரு பக்கப் பார்வையின்றியே நமது இளைய தலைமுறையினர் அதனைப் பயன்படுத்துவதில் தீவிரம் காட்டுகின்றனர். முறையற்ற ஆண்- பெண் தொடர்பை வளர்த்துக் கொள்கின்றனர்.

கையடக்கத் தொலைபேசி இன்று தகவல் பரிவர்த்தனைக்கு உதவுகிற நிலைக்கு அப்பால் ஆபாசத்தையும் அபத்தத்தையும் கொப்பளிக்கின்ற ஒரு வலுவான சாதனம் என்றால் அது மிகைப்படுத்தப்பட்ட கூற்றல்ல. இதனைப் பயன்படுத்தி ஒரு வாலிபனும் ஒரு யுவதியும் தனிமையில் இருக்க முடியும். குறுந்தகவல்களை தமக்கிடையே பரிமாற்றம் செய்யும்போதும் அவர்கள் தனிமையிலேயே இருக்கின்றார்கள். இவை அண்ணலார் தடைசெய்த காரியம் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. பெற்றோர் பருவ வயதை அடைந்து விட்ட தங்களது பிள்ளைகள் மேற்படி தொலைபேசியைப் பயன்படுத்த அனுமிதி வழங்கி விடுகின்றனர். அவர்கள் மீதுள்ள அதீத அன்பும் பாசமும் இவ்வாறான நிலைப்பாட்டுக்கு வருவதற்கு தூண்டுகோலாக அமைந்து விடுகின்றன. மேலும் பிள்ளைகள் தமக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி விடுவார்கள் என்ற பயமும் வீட்டில் தொலைபேசி நேர வரையறைகளைப் பேணாமல் அவர்கள் உரையாடுவதற்கு பெற்றோர் அனுமதிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே கம்பியூட்டர் மூலம் இணையதள தொடர்பை ஏற்படுத்தி இளம் வயதினர் தனிமைப்படுகின்றனர். தமக்கே உரிய பிரத்தியேக அறைகளில் சுயாதீனமாக மேற்படி சாதனங்கள் மூலம் இணையதளத்தில் பிள்ளைகள் உலாவருவதை பெற்றோரால் அறிய முடிவதில்லை. அவ்வாறே Facebook (முகநூல்) ஊடாக தனது பிள்ளை தனியானதோர் உலகத்தில் சஞ்சரிப்பதையும் பெற்றோரால் உணர்ந்து கொள்ள முடிவதில்லை.

Facebook என்பது ஒரு பஸார். அதில் பல நூறு பேர் வந்து போக முடியும். அதில் நல்லவர்களும் கெட்டவர்களும் இருக்க முடியும். வாழ்வில் ஒருபோதும் நேரடியாக சந்தித்திராத, முன் பின் அறிமுகம் இல்லாத ஒருவரை இந்த மர்ம உலகில் சந்தித்து தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் வளரிளம் பருவத்தினர் இறைதூதரின் பார்வையில் பாவம் செய்கின்றனர். சமூக வலைத்தளங்கள் குறித்த அகல் விரிவான சிந்தனை இல்லாத பெற்றோர் பிள்ளைகளின் வாய்ச்சவாடல்களுக்கும் நியாய வாதங்களுக்கும் முன்னால் சரணடைந்து விடுகின்றனர். ஈற்றில் அயோக் கியர்களின் மாய வலையில் சிக்கி பிள்ளைகளின் மானம் காற்றில் பறக்கின்றது. அந்தப் பிள்ளைகள் விரக்தியின் விளிம்பு நிலைக்குச் சென்று தங்களது பெறுமதியான வாழ்கையை முடித்துக் கொள்ளும் தீர்மானத்திற்கு வந்துவிடுகின்றனர்.

குடும்பச் சூழலில் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் பிள்ளைகள் தனிமைப்படுவதை பெற்றோர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும். தொடரான அவதானமும் மேற்பார்வையும் இன்றி ஓர் அந்நிய ஆணும் பெண்ணும் தனிமைப்படுதல் விபரீத விளைவுக்கு வழிவகுக்கும் என்பது அண்ணலாரின் முன்னெச்சரிக்கையாகும். பெற்றோர் தமது வீட்டுச் சூழலில் மேற்படி சாதனங்களைப் பயன்படுத்தும் பிள்ளைகளுக்கு அண்ணலாரின் இவ்வெச்சரிக்கையை முன்வைத்தல் வேண்டும். சமூக வலைத்தளங்களுக்கு அடிமையாகிக் கிடப்பதிலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டும். இவ்வகையில் கால நேர வரையறைகள் இன்றி இலத்திரனியல் ஊடகங்களுடனும் சமூக வலைத்தளங்களுடனும் பிள்ளைகள் தொடர்பு கொள்வதை தடுக்க வேண்டும். அதேவேளை, அவர்களுக்கு மாற்றீடுகளை அறிமுகம் செய்ய வேண்டும். அதாவது, காலை நேரத்தை பயனுள்ள வழியில் கழிக்கின்ற வகையில் நல்லதொரு சகவாசத்தை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். மேற்படி சாதனங்களையும் பிள்ளைகள் பயன்படுத்தும்போது பெற்றோர் அதனை இலகுவாக அவதானிக்க முடியுமான வகையில் பௌதிகச் சூழலை அமைத்துக் கொடுத்தல் வேண்டும்.

பிள்ளைகள் வீட்டுச் சூழலுக்குள் மட்டும் முடங்கிக் கிடப்பதில்லை. அவர்கள் பாடசாலைச் சூழலில் குறித்த சில மணித்தியாலங்களைக் கழிக்கின்றனர். இந்த சூழலில்கூட வளரிளம் பருவத்தைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் தனித்திருப்பதற்கான வசதி வாய்ப்புக்கள் அமையாமல் இருப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஆசிரியர் சமூகம் முன்னெடுக்க வேண்டும். கல்வி மேம்பாடு, புறக்கிருத்தியம், பரீட்சைப் பெறுபேறு முதலானவற்றுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற ஆசிரியர் சமூகம் மாணவர்களது கற்பொழுக்கம் தொடர்பில் முழுக் கவனம் செலுத்தல் வேண்டும். குறிப்பாக, கலவன் பாடசாலைகளில் வகுப்பறைச் சூழலில் மாணவர், மாணவியர் தனித்திருப்பதை ஆசிரியர் சமூகம் தடைசெய்ய வேண்டும். விளையாட்டுப் போட்டிகள், கலாச்சார நிகழ்வுகள், கண்காட்சிகள், சுற்றுலாக்கள் போன்ற நிகழ்வுகளின் போது மாணவ மாணவியர் சுயாதீனமாக தனித்திருப்பதற்கான சூழல் அமையாமல் இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்து விழிப்புணர்வுடன் மேற்பார்வை செய்ய வேண்டிய முழுப் பொறுப்பும் ஆசிரியர் சமூகத்தைச் சார்ந்ததே!

இவ்வாறே பிரத்தியேக வகுப்புக்களுக்கு பொறுப்பாக இருக்கும் ஆசிரியர்கள் தொழில் மையச் சிந்தனையைப் புறந்தள்ளி டீன் ஏஜ் வயதுப் பிள்ளைகளின் கற்பொழுக்க விவகாரத்திலும் கவனம் செலுத்த வேண்டியது மார்க்கக் கடமையாகும். குறித்த நேரத்திற்கு முன்னர் பிள்ளைகள் வகுப்புக்கு வருகை தருவதை தடை செய்வதன் மூலமும் வகுப்புக்கு வருகை தராமல் ஊர் சுற்றித் திரியும் மாணவர்கள் பற்றி பெற்றோரிடம் முறையிடுவதன் மூலமும் பருவ வயதை அடைந்து விட்ட மாணவ, மாணவியர் தனிமைப் படுவதை தடுக்க முடியும்.

திருமணம் நிச்சயிக்கப்பட்ட ஆணும் பெண்ணும்கூட தனிமையில் இருப்பதை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தடை செய்துள்ளார்கள். திருமண உடன்படிக்கையின் பின்னரே இவர்கள் கணவ- மனைவி என்ற அந்தஸ்தை அடைந்து கொள்கின்றார்கள். இந்நிலையை அடைவதற்கு முன்னர் அவ்விருவரும் மஹ்ரமான உறவினர்களின் மேற்பார்வையின்றி ஓர் இடத்தில் ஒன்று கூடுவதோ, தொலைபேசி மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலம் தொடர்பு கொள்வதோ ஹராமாகும்.

இறை தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது வருமுன் காப்போம் திட்டத்தை பெறுமானம் இழக்கச் செய்பவர்கள் நிச்சயமாக வாழ்வில் பல்வேறு சோதனைகளை சந்திக்க நேரிடும்.

***"அவருடைய (இறைதூதர்) கட்டளைக்கு மாறு செய்வோர் தமக்கு சோதனை ஏற்படுவதையோ தன்புறுத்தும் வேதனை ஏற்படுவதையோ அஞ்சிக் கொள்ளவும்."***

***(ஸூரா அந்நூர்: 63)***

ஆகவே, இறைதூதரை வாழ்வின் சகல துறைக்குமான முன்னுதாரணமாகக் கொண்டு வாழ்ந்து சுவனத்தைப் பெற்றுக் கொள்வோமாக! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாம் எனும் குகை நோக்கிய இளைஞர்கள்



இஸட்.ஏ.எம். பவாஸ், சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம் – மலேசியா

திக்யானுஸ் என்ற மன்னன் கிரேக்கத்தின் இஃப்பீஸஸ் என்ற நகருக்குச் சென்று அங்கு அப்போது தூய ஏகத்துவமாக இருந்த கிறிஸ்தவ மதக் கொள் கையை அழித்துவிட்டு சிலை வணக்கத்தைப் புதுப்பிக்க முற் பட்டான். சிலைகளுக்கு பிரா ணிகளைப் பலியிடுமாறும் பூஜைப் பொருட்களை சமர்ப் பிக்குமாறும் திக்யானுஸ் அங் கிருந்த கிறிஸ்தவ மக்களைப் பலவந்தப்படுத்தினான். அத னால் அவர்களுள் சிலர் கிறிஸ் தவக் கொள்கையைக் கைவிட வும் மற்றும் சிலர் ஆட்சியா ளர்களின் அநீதிக்குட்பட்டு கொடுமைகளைத் தாங்கவும் நேரிட்டது. இந்நிலையில், அரசாங்கப் பிரமுகர்களுக்குரிய மாளிகைகளில் வாழ்ந்துவந்த ஏழு இளைஞர்கள் பற்றி அர சனிடம் முறையிடப்பட்டது. அவர்கள் மறைமுகமாக கிறிஸ் தவ மதத்தைப் பின்பற்றுகிறார் கள் என்று அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது. அவர்களுக்கு கால அவகாசம் கொடுத்துவிட்டு ஊரை விட்டும் வெளியேறியி ருந்தான் அரசன். இதற்கிடையே அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு அருகிலிருந்த மலைக் குகையொன்றில் தஞ்சமடைந்தனர்.

### அவர்கள் இளைஞர்கள்

*"நிச்சயமாக அவர்கள் தம் இறைவன் மீது நம்பிக்கை கொண்டிருந்த இளைஞர்கள். நாம் அவர்களை நேர்வழியில் மேலும் மேலும் முன்னேறச் செய்தோம். சத்தியத்துக்காக அவர்கள் எழுந்து நின்று 'எவன் வானங்களுக்கும் பூமிக்கும் அதிபதியோ அவன்தான் எங்கள் இரட்சகன். அவனை விடுத்து வேறெந்தக் கடவுளையும் நாங்கள் அழைக்க மாட்டோம். அப்படிச் செய்தால் நாங்கள் வரம்பு மீறிய பேச்சைப் பேசியவர்களாவோம்' என்று துணிந்து கூறியபொழுது அவர்களின் இதயத்தை நாம் திடப்படுத்தினோம்." (18: 13-14)*

பொதுவாக அல்குர்ஆனின் வரலாறுகளை விவரிக்கும்போது கதாபாத்திரங் களின் வயதெல்லையை அல்லாஹ் குறிப்பிடுவதில்லை. ஆனால், ஸூரதுல் கஃபில் குகைவாசிகளைப் பற்றி கூறும்போது 'இளைஞர்கள்' என்று கோடிட்டுக் காட்டுகிறான்.

அவர்கள் தங்கள் உள்ளத்தில் மறைத்து வைத்துக் கொண்டும், வெளிரங்கமாக சிலை வணக்க முலாம் பூசிக் கொண்டும் அரச குடும்பங்களுக்குரிய மாளிகை உவந் தளித்த அனைத்து வசதிகளையும் அனுபவித்து வாழ்ந்திருக்கலாம். ஆனால், உயிர்த்துடிப்புள்ள அவர்களது ஆன்மாக்கள் தங்கள் இறைநம்பிக்கையை அரசனுக்கு முன்னால் பகிரங்கமாகப் பிரகடனம் செய்யத் தூண்டின. இதனை மேற்குறிப்பிட்ட வசனத்திலுள்ள قَامُوا (எழுந்து நின்றனர்) என்ற சொல் அவர் களது துணிச்சலைக் காட்டுகிறது. அவர்களது சிந்தனையும் தெளிவாகவே இருந்தது. அவர்கள் கூறினார்கள். *"எங்கள் சமூகத்தாராகிய அவர்கள் அவனையன்றி வேறு நாயனை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அவற்றின் மீது தெளிவான அத்தாட்சியைக் கொண்டுவர வேண்டாமா?" (18:15)*

### குகைத் தோழர்களின் திடவுறுதியும் அல்லாஹ்வின் அரவணைப்பும்

தமது இறை நம்பிக்கையைத் தற்காத்துக் கொள்ள தனியாக ஓரிடத்துக்கு ஒதுங் கிச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்று அவர்களுக்கு தோன்றியது. எனவே, ஓர் இளைஞர் கூறினார். *"அவர்களையும் அவர்கள் வணங்கும் அல்லாஹ் அல்லாத வற்றையும் விட்டு விலகி நீங்கள் குகையின்பால் ஒதுங்கிக் கொள்ளுங்கள். உங்களு டைய இறைவன் தன்னுடைய ரஹ்மத்திலிருந்து உங்களுக்கு விசாலமாகக் கொடுத்து உங்கள் காரியத்தில் உணவுப் பிரச்சினையையும் எளிதாக்கித் தருவான்." (18: 16)*

இளைஞர்கள் ஒரு கொள்கையை சரியாக உள்வாங்கினால் அவர்கள் எத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணத்துக்கும் தயாராகி விடுகிறார்கள் என்ற பேருண்மையை இது எடுத்துக் காட்டுகிறது. குகையில் தஞ்சம் புகுந்த அவர்கள் அல்லாஹ்வைச் சார்ந்து நிற்கிறார்கள்.

"எங்கள் இறைவனே! நீ உன்னிடமிருந்து எங்களுக்கு ரஹ்மத்தை அருள்வாயாக. இன்னும் நீ எங்கள் காரியத்தை சீர்திருத்தித் தருவாயாக" என்று கூறினார்கள். (18: 10)

அரசபீடத்தின் ஆணைப்படி மரண தண்டனைக்குரிய ஒரு குற்றத்தைப் புரிந்துள்ள அந்த இளைய நெஞ்சங்கள் தாங்கள் ஒதுங்கியிருக்கும் தளத்தை அவர்களது சமூகத்தினர் கண்டு கொண்டால் பெரும் அனர்த்தம் ஏற்பட்டு விடும் என்பதை அறிந்திருந்தார்கள். எனவே, அவர்கள் எல்லாவகையான முன்னெச்சரிக்கைகளையும் கருத்திற் கொண்டனர். அவர்களில் ஒருவர் கூறினார்.

"உங்களில் ஒருவரை இந்த வெள்ளிக் காசுடன் பட்டணத்துக்கு அனுப்புங்கள். அவர் தூய்மையான ஆகாரம் எதுஎன்பதை நன்கு கவனித்து உங்களுக்காகக் கொண்டு வரட்டும். மேலும் அவர் எச்சரிக்கையாக இருக்கட்டும். உங்களைப் பற்றி எவருக்கும் அவர் அறிவித்துவிட வேண்டாம். ஏனென்றால், அவர்கள் உங்களை அறிந்து கொண்டால் கல்லால் அடித்துக் கொன்று விடுவார்கள். அல்லது தங்களுடைய மார்க்கத்தில் உங்களை மீட்டி விடுவார்கள். பிறகு நீங்கள் ஒருபோதும் வெற்றியடைய மாட்டீர்கள்." (18: 19-20)

**இன்றைய இளைஞர்கள் தங்கள் இறை நம்பிக்கையையும் இஸ்லாமிய அடையாளத்தையும் பாதுகாத்து நாளையை தலைவர்களாக மாற விரும்பினால், அவர்கள் தேடி இணைய வேண்டியது ஒரு சிறந்த நட்பு வட்டமாக அல்லது ஓர் இஸ்லாமியக் கிராமமாக அல்லது ஓர் இஸ்லாமிய இயக்கமாக இருக்க முடியும்.**

இங்கு மார்க்கம் என்பதைக் குறிக்க 'தீன்' என்ற சொல் பயன்படுத்தப்படாமல் 'மில்லத்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில், அந்த சமூகத்தினர் தங்கள் மார்க் கத்தை தேசத்தின் அடையாளமாகக் கருதினர். அதாவது, அந்த மார்க்கத்தை விட்டுவிடுவது நாட்டுக்குப் புரியும் துரோகமாக நோக்கப்பட்டது.

சமூகத்தின் முழு அங்கீகாரத்துடனும் தங்களது சுகபோக வாழ்வைத் தொடராமல், பல்வேறு வகையான சோதனைகளால் சூழப்பட்டிருந்த நிலையில் உலக கவர்ச்சிகள் அனைத்திலிருந்தும் விலகி கரடுமுரடான குகையில் தஞ்சமடையச் சென்ற அந்த இளைய இதயங்கள் அல்லாஹ்வின் விசாலமான அருள்களை நுகர ஆரம்பித்தன. அல்லாஹ் இயற்கையாகவும் செயற்கையாகவும் சடரீதியாகவும் பல்வேறு ஏற்பாடுகளைச் செய்து கொடுத்து அவர்களைக் கண்காணித்தான்.

"ஆகவே, நாம் அவர்களை எண்ணப்பட்ட பல ஆண்டுகள் வரை அக்குகையில் தூங்குமாறு அவர்களுடைய காதுகளின் மீது திரையிட்டுத் தடையேற்படுத்தினோம்." (18: 11)

இவ்வாறு முன்னூறு வருட காலம் துயில் கொண்டெழுந்த அந்த இளைய முஃமின்களில் ஒருவர் கடைவீதிக்குச் சென்றதும் நிலைமை தலைகீழாக மாறி முழுமையாக இறை நம்பிக்கை கொண்ட ஒரு தூய தேசத்தையே கண்களால் பார்த்தார். அவர் அந்த சமூகத்தினரால் குகை வரையும் பின்தொடரப்பட்டார். குகையினுள் நுழைந்த அந்த இளைஞனும் ஏனைய அறுவரும் அப்படியே மரணித்துப் போனார்கள்.

## அர்த்தமற்ற வாதங்கள்

இந்த அதிசய வரலாற்றைப் படித்துவிட்டு சிலர் முன்வைக்கின்ற ஒரே வாதம் என்ன தெரியுமா? "அவர்கள் மூன்று பேர்தாம்; நான்காவது அவர்களுடைய நாய் என்று கூறுகின்றனர். இல்லை அவர்கள் ஐந்து பேர்; ஆறாவது அவர்களுடைய நாய் என்று மறைவானதை ஊகம் செய்து சிலர் கூறுகிறார்கள். இன்னும் சிலர் ஏழுபேர்; எட்டாவது அவர்களுடைய நாய் என்று சொல்கிறார்கள்." (18: 22)

அவர்கள் எத்தனை பேர் என்பதையோ அல்லது அவர்களுடைய நாய் எந்த நிறத்தையுடையது என்பதையோ அறிய முற்படுவது எந்த வகையில் கூடிய பயனைத் தரப்போகிறது? முழுக் குர்ஆனையும் படித்துப் பாருங்கள்! எங்கெல்லாம் அல்லாஹ் يَقُولُونَ (அவர்கள் கூறுகிறார்கள்) என்று சொல்கிறானோ அங்கெல்லாம் அவர்கள் கூறுவதை கடுமையாகச் சாடுகிறான். இவ்வாறு அவசியமற்ற வினா எழுப்பும் பழக்கத்தை மேற்கூறிய வசனத்தில் رَجْمًا بِالْغَيْبِ என்று கண்டிக்கிறான். ஒருவன் இருளில் இருந்து கொண்டு எல்லாத் திசைகளை நோக்கியும் கற்களை எறிவதை இந்தப் பிரயோகம் சித்திரிக்கிறது. இது التَّصْوِيرُ الْفَنِّي (சித்திரக் காட்சிப்படுத்தல்) என்று அரபியில் அழைக்கப்படுகிறது. முதலாவதாக இருளில் கற்களை எறிவது ஒருவனின் முட்டாள்தனத்தைக் காட்டுகிறது. இரண்டாவது, அதன் மூலம் அவன் இன்னொருவரைப் பாதிப்புக்குள்ளாக்க முடியும். மூன்றாவது, இலக்கை அடைந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனால் அதைத் தெரிந்து கொள்ள முடியாது. எனவே, அவர்களுடைய எண்ணிக்கை எத்தனை என்பதைக் கூறாமலிருக்க அல்லாஹ் தீர்மானித்தான்.

"நபியே! அவர்களுடைய எண்ணிக்கையை என்னுடைய இறைவன்தான் நன்கறிவான் என்று கூறுவீராக." (18:22)

**வரலாறு தொடர்கிறது.....**

மௌலானா அபுல் ஹஸன் அலி நத்வி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் ஸூரதுல் கஹ்ஃபுக்கான ஆய்வு நூலில் எழுதுகிறார்:

"குகைத் தோழர்களின் சரிதை அருளப்பட்டபோது ரோமாபுரி மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் எத்தகைய கொடுமையும் சர்வாதிகாரத்தையும் அந்த இளைஞர்கள் எதிர்கொண்டிருந்தார்களோ அதே சூழ்நிலையைத்தான் அன்றைய மக்கத்து முஸ்லிம்களும் எதிர்கொண்டிருந்தார்கள். இறை நம்பிக்கை கொண்ட அந்த இளைஞர்கள் தம் ஊரை விட்டும் வெளியேறி குகையில் தஞ்சமடைய முன்னர் எத்தகைய கால கட்டத்தில் வாழ்ந்தார்களோ அதே நிலையில்தான் மக்கத்து முஸ்லிம்களும் வாழ்ந்தார்கள். அதனைக் குர்ஆன் இப்படிக் கூறுகிறது.

"அந்த சூழ்நிலையை நினைத்துப் பாருங்கள். நீங்கள் மக்கா பூமியில் சிறுபான்மையினராகவும் ஒடுக்கப்பட்டவர்களாகவும் இருந்தீர்கள். பிற மக்கள் உங்களை இறாஞ்சிக் கொண்டு சென்று விடுவார்களோ என்று அஞ்சிக் கொண்டும் இருந்தீர்கள்" (8:26)

பிலால், அம்மார், கப்பாப், முஸ்அப், ஸுமைய்யா (ரழியல்லாஹு அன்ஹும்) போன்றோருக்கு நேர்ந்த துயரங்களைப் படித்துப் பார்த்தால் இது உங்களுக்குப் புரியும்."

குகைத் தோழர்களின் வரலாற்றைக் கற்றுக் கொடுத்த அல்லாஹ் தன் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) எத்தகையவர்களுடன் நற்புக் கொள்ள வேண்டும் என்பதையும் அறிவுறுத்தினான்.

"நபியே! எவர் தம் இறைவனுடைய திருப்பொருத்தத்தை நாடியவர்களாக காலையிலும் மாலையிலும் அவனைப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார்களோ அவர்களுடன் நீரும் பொறுமையாய் இருப்பீராக" (18:28)

இந்த ஸூறாவில் விவரிக்கப்படுகின்ற குகையை நாம் ஒரு சின்னமாகவே கருத முடியும். இன்றைய இளைஞர்கள் தங்கள் இறை நம்பிக்கையையும் இஸ்லாமிய அடையாளத்தையும் பாதுகாத்து நாளையை தலைவர்களாக மாற விரும்பினால், அவர்கள் தேடி இணைய வேண்டியது ஒரு சிறந்த நட்பு வட்டமாக அல்லது ஓர் இஸ்லாமியக் கிராமமாக அல்லது ஓர் இஸ்லாமிய இயக்கமாக இருக்க முடியும்.

இந்த தீனுல் இஸ்லாத்துக்கு நீடித்த நிலையையும் இந்த சமுதாயத்துக்கு உலகெங்கும் பரவி வாழும் பாக்கியத்தையும் அல்லாஹ் எழுதிவைத்து விட்டான். முற்கால சமூகங்கள் கடந்து வந்த திருப்பங்கள் யாவற்றையும் இந்த சமூகமும் கடந்தாக வேண்டும். மனித வாழ்க்கையில் ஏற்படும் பலம்- பலவீனம், பெரும்பான்மை- சிறு பான்மை, ஆமோதிப்பு- ஆட்சேபனை, வெற்றி- தோல்வி ஆகிய இயற்கையான பல நிலைகளையும் இந்த சமுதாயத்தின் சத்திய அழைப்பு சந்தித்தாக வேண்டும்.

அந்த அழைப்பைத் தாங்கிச் செல்ல எழுந்து நிற்கும் இளைஞர்கள் எங்கே? ■


# தன்வீர் அகடெமி

சிங்கள மொழியில் கல்வி பயிலும் முஸ்லிம் மாணவர்களிலிருந்து ஆலிம்களை உருவாக்கும் முன்னோடி உயர் கலாபீடமான தன்வீர் அகடமியின் புது மாணவர்கள் இணைத்துக் கொள்வதற்கான பதிவுகள் தற்போது நடை பெறுகிறது.

**தகைமைகள்**

- க.பொ.த. சா/த பரீட்சைக்கு 2012 அல்லது 2013ஆம் ஆண்டு சிங்கள மொழியினூடாக தோற்றியிருத்தல்.
- சிறந்த தேகாரோக்கியத்துடன் இருத்தல்.

**கால எல்லை**

- இக் கற்கை நெறியானது ஐந்து வருட வதிவிட முழு நேர கற்கை நெறியாகும்.

**இலவசம்**

- இப் பாடநெறியை தொடரும் உங்களுக்கு......

✓ அறபு, சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் நிபுணத்துவம்.
✓ க.பொ.த. உ/த பரீட்சைக்கு தயார்படுத்தல்.
✓ அல்ஆலிம் பரீட்சைகளுக்கு தயார்படுத்தல்.
✓ தர்மாச்சார்ய பரீட்சைக்கு தயார்படுத்தல்.
✓ தகவல் தொழில் நுட்பம்.
✓ தொழில் மற்றும் உயர் கல்விக்கான வழிகாட்டல்.

**போன்றவற்றை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.**

கவனிக்கவும்:- விடுதி மற்றும் உணவு வசதிகளுக்காக குறித்த ஒரு தொகைப் பணம் அறவிடப்படும்.

Contact:THE PRINCIPAL,
TANWEER ACADEMY, MINHATH MAWATHA,
THIHARIYA.

தொலைபேசி 033 2297371
077 3763830
071 6143725




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹம்மத் ஸகி பவுஸ் (நளீமி)
விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, மாதம்பை
zackymfm@gmail.com



# கட்டாரின் துணிச்சலான அரசியல் தீர்மானங்களும் ஜீஸிஸியின் (GCC) எதிர்காலமும்

**சர்வதேச இஸ்லாமிய எழுச்சியை வடிவமைப்பதிலும் அதனை வழிநடத்துவதிலும் அதற்குத் தேவையான வகைமாதிரிகளை கட்டமைத்துக் கொடுப்பதிலும் கட்டாரின் சமீபத்திய பங்களிப்புகள் காத்திரமானவை. சுருங்கச் சொன்னால், ஏனைய வளைகுடா நாடுகளை விட கட்டார் சர்வதேச இஸ்லாமிய அறிஞர்கள் மற்றும் முஸ்லிம் சமூகத்திற்கு மத்தியில் மிகவும் வரவேற்பைப் பெற்ற நாடாக மாறிவருகின்றது.**

சென்ற மாதம் சஊதி அரேபியா, பஹ்ரைன் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகள் கட்டாருக்கான தமது தூதுவர்களை மீள அழைத்துள்ளன. இந் நிகழ்வு செல்வந்த வளைகுடா (GCC) நாடுகளின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக நோக்கப்படுகிறது. மேலும் அந்நாடுகளின் எதிர்கால அரசியல் நகர்வுகளில் காத்திரமான மாற்றங்களை நோக்கி இட்டுச் செல்லுமளவுக்கு வலிமை மிக்கதாகவும் இதனை அரசியல் விற்பன்னர்கள் நோக்குகின்றனர். எனவே, அவ்வரசியல் பிளவுகளுக்குப் பின்னால் தொழிற்பட்ட இராஜந்திர மற்றும் கொள்கைசார் காரணிகளைப் பற்றியே இக்கட்டுரை அலசுகிறது.

**ஜிஸிஸியின் (Gulf Cooperation Council ) பின்புலம்:**

மத்திய கிழக்கில் 12 முஸ்லிம் பெரும்பான்மை நாடுகள் காணப்படுகின்றன. இவற்றில் பெரும் எண்ணெய் வளமும் செல்வ வளமும் கொண்ட 6 நாடுகள் ஒன்றிணைந்து 1981ஆம் ஆண்டு GCC என்ற அமைப்பை நிறுவின. இவ்வமைப்பில் சஊதி அரேபியா, கட்டார், பஹ்ரைன், குவைட், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமான் போன்ற நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இவ்வமைப்பு நிறுவப்பட்டதன் பின்னணியில் தொழிற்பட்ட முதலாவது நோக்கம், 1979ஆம் ஆண்டு ஈரானில் ஏற்பட்ட மக்கள் புரட்சி சர்வதிகார மன்னன் ஷாஹ்வினை விரட்டியடித்தமையாகும். அதாவது, ஈரானிய மக்கள் புரட்சியினால் தங்களது நாடுகளில் உள்ள மக்களும் தூண்டப்படலாம் என வளைகுடா மன்னர்கள் அச்சம் கொண்டார்கள். மேலும், ஈரானியப் புரட்சியை ஈரானிய அரசு ஏனைய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யலாம் என்பதையும் எண்ணெய் வளமிக்க நாடுகள் உறுதியாக நம்பின. இதன் விளைவாக, தங்களுக்கு மத்தியில் ஒரு பலமான கூட்டமைப்பை நிறுவுவதினூடாக ஈரானின் அரசியல் மாற்றத்தால் ஏற்படவிருக்கும் சவால்களை எதிர்கொள்ளும் நோக்குடன் வளைகுடா மன்னர்கள் இக்கூட்டமைப்பை உருவாக்கினர்.

அடுத்த கட்டமாக மத்திய கிழக்கை உலுக்கிய அரபு வசந்தம் GCC நாடுகளது தலைமைகளுக்கு பெரும் சவாலாக பரிணமித்தது. அரபு வசந்தத்தை எப்படியாது மடக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஜீஸிஸி நாடுகளின் மன்னர்கள் இரவு பகலாக திட்டம் தீட்டினார்கள். எகிப்தில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியும் லிபியாவில் தொடரும் நெருக்கடி நிலைகளும் ஈராக்கில் தொடரும் கொலைக்களங்களும் இத்திட்டத்தின் விளைவுகளாகும்.

**GCC அமைப்பிற்கும் கட்டாருக்குமிடையிலான முரண்பாடு**

கட்டாருக்கான தூதுவர்கள் மீள அழைக்கப்பட்டமை ஜீஸிஸி நாடுகளுக்கு மத்தியில் பல நாள் நிழலாகத் தொடர்ந்த பிளவை நிஜப்படுத்தியது. சஊதி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஹ்ரைன் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் இதற்கான நியாயத்தை கூட்டாகவே வெளியிட்டன. அதாவது, கட்டார் ஜீஸிஸி நாடுகளின் யாப்பிற்கு முரணாக செயற்படுகின்றது. பல தடவைகள் கட்டாருக்கு அபாய சமிஞ்சைகளை நாம் காண்பித்த போதிலும்கூட, அவர்கள் அதனை அலட்டிக் கொள்ளவில்லை. இதனால்தான் இத்தகைய விரும்பத்தகாத ஒரு முடிவை எடுத்தோம் என அந்நாடுகள் இணைந்து

**"கட்டாரின் வெளிநாட்டுக் கொள்கை தெளிவானது. கட்டார் உலகிலுள்ள சகல நாடுகளுக்கும் களமமைத்தக் கொடுக்கும் தேசம். யாருக்கும் சார்பா கவோ எதிராகவோ நிற்காது. எனவே, எந்த நாட்டினதும் அச்சுறுத்தலுக்குப் பயந்து எமது கொள்கைகளை நாம் மாற்றிக் கொள்ள மாட்டோம். மேலும் ஏனைய நாடுகள் எம்மைப் பழிவாங்க நினைத்தாலும், நாங்கள் அவர்க ளோடு முரண்பட்டுக் கொள்ளவும் மாட்டோம்"**

வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. "நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வளைகுடா நாடுகளின் கூட்டமைப்பில் உள்ள ஒரு நாடு இன்னொரு நாட்டின் விவகாரத்தில் தலையிடக் கூடாது. வளைகுடா நாடுகளின் ஸ்திரத்தன்மைக்கு அல்லது பாதுகாப்பிற்கு நேரடியாக அச்சுறுத்தும் எந்த நடவடிக்கைகளுக்கும் ஆதரவு அளிக்கவும் கூடாது என்ற ஜீஸிஸி அமைப்பிலுள்ள ஷரத்தை கட்டார் மீறியுள்ளது. மேலும், அண்மைக் காலமாக கட்டார் எகிப்தில் தடை செய்யப்பட்ட அமைப்பான இஃவானுல் முஸ்லிமூன் அமைப்பிற்கும் சிரியாவில் அஸதை எதிர்த்துப் போராடும் அமைப்புகளுக்கும் பண உதவிகள், இராஜதந்திர உதவிகளை வழங்கி வருகின்றது. கட்டாரின் இத்தகைய செயற்பாடுகள் மத்திய கிழக்கின் பாதுகாப்பை அச்சுறுத் துகின்றன" என சஊதியின் வெளிவிவகார அமைச்சர் தெளிவாகவே கூறியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த கட்டாரின் வெளிநாட்டமைச்சர், "கட்டாரின் வெளிநாட்டுக் கொள்கை தெளிவானது. கட்டார் உலகிலுள்ள சகல நாடுகளுக்கும் களமமைத்தக் கொடுக்கும் தேசம். யாருக்கும் சார்பாகவோ எதிராகவோ நிற்காது. எனவே, எந்த நாட்டினதும் அச்சுறுத்தலுக்குப் பயந்து எமது கொள்கைகளை நாம் மாற்றிக் கொள்ள மாட்டோம். மேலும் ஏனைய நாடுகள் எம்மைப் பழிவாங்க நினைத்தாலும், நாங்கள் அவர்களோடு முரண்பட்டுக் கொள்ளவும் மாட் டோம்" எனத் தெரிவித்தார். இதனையடுத்து சஊதி அரேபியாவின் வெளிநாட்டமைச்சர், "டோஹா தனது கொள்கையை மாற்றிக் கொள்ளாதவரை, அவர்களுடன் எந்த உறவுகளும் இல்லை" என ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

## ஏன் இந்த முறுகல்?

கட்டார் ஏனைய வளைகுடா நாடுகளை விட பாரிய ளவில் சிந்தனா ரீதியிலும் கொள்கை ரீதியிலும் அதன் பிராந்திய மற்றும் சர்வதேச இலக்குகள் விடயத்திலும் வித்தியாசப்படுகின்றது. பரப்பில் மிகச் சிறிய நாடாகவும் மக்கள் தொகையில் குறைவாகவும் இருந்தபோதிலும் மத்திய கிழக்கின் அரசியலைத் தீர்மானிப்பதில் கணிசமான



வலுச்சமநிலையை டோஹா கொண்டுள்ளது. அதிலும் குறிப்பாக, சர்வதேச இஸ்லாமிய எழுச்சியை வடிவமைப் பதிலும் அதனை வழிநடத்துவதிலும் அதற்குத் தேவையான வகைமாதிரிகளை கட்டமைத்துக் கொடுப்பதிலும் கட்டாரின் சமீபத்திய பங்களிப்புகள் காத்திரமானவை. சுருங்கச் சொன்னால், ஏனைய வளைகுடா நாடுகளை விட கட்டார் சர்வதேச இஸ்லாமிய அறிஞர்கள் மற்றும் முஸ்லிம் சமூகத்திற்கு மத்தியில் மிகவும் வரவேற்பைப் பெற்ற நாடாக மாறிவருகின்றது.

GCC அமைப்பில் பெரும் செல்வாக்குச் செலுத்தும் சஊதி அரேபியாவிற்கு நிகராக தீர்மானங்களை மேற்கொள்ளும் தரத்திற்கு கட்டார் வளர்ந்து விட்டது. இதனால், கட்டாரின் வேகமான நகர்வை ஏனைய வளைகுடா நாடுகள் ஓரக்கண் கொண்டு நோக்குகின்றன. எப்படியாது கட்டாரை முடக்க வேண்டும் என 1995களிலிருந்து வளைகுடா நாடுகள் முயற்சித்துக் கொண்டிருக்கின்றன. கடந்த இரண்டு தசாப்த காலமாக வளைகுடா மன்னர்கள் வெளிப்படுத்த முடியாமல் காழ்புணர்ச்சியை அடக்கிக் கொண்டிருந்தனர். இந்தப் பின்புலத்திலேயே கடந்த மாதம் கட்டாருக்கான தங்களது தூதுவர்களை மீள அழைத்ததனூடாக வளை குடா கட்டாரைப் பழிதீர்த்துக் கொண்டது. மாத்திரமல் லாமல், கட்டாருடனான எல்லா வகையாக பொருளாதார, இராணுவத் தொடர்புகளையும் சர்வதேசம் நிறுத்திக் கொள்ள வேண்டும் என அமெரிக்காவிடம் வளைகுடா மன்னர்கள் வேண்டிக் கொண்டுள்ளனர்.

## கட்டாரின் வெளிநாட்டுக் கொள்கை

கட்டாரின் வெளிநாட்டுக் கொள்கை ஏனைய வளை குடா நாடுகளை விட வித்தியாசமானது. பொதுவாக, வளை குடா நாடுகளது வெளிநாட்டுக் கொள்கைகள் அமெரிக் காவைச் சார்ந்ததாகவும் எண்ணெய் வருமானத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு தமக்கு சார்பான அரசியல் மாற்றங்களை சாதிப்பதற்கு ஏற்றதாகவும் வடிமைக்கப்பட்டுள்ளதாக கருதப்படுகின்றது. மேலும், தமது மன்னராட்சிக்கு அச்சுறுத்தலாக அமையும் எந்த இயக்கத்தையும் வளைகுடாவில் ஜனாநாயக மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் எனப் போராடும் எந்த அமைப்பையும் தலைதூக்க விடாது அடியோடு துவம்சம் செய்யும் திட்டங்களுக்கு வளைகுடாவின் வெளிவிவகார அமைச்சுகள் நிதி ஒதுக்கீடு செய்வதில் ஒருபோதும் கஞ்சத்தனம் காட்டியதில்லை. ஆனால், இவ்விடயத்தில் கட்டார் வேறு ஒரு நிலைப்பாட்டில் உள்ளது. டோஹா வெளிப்படையான வெளிநாட்டுக் கொள்கையையே பின்பற்றுகின்றது. யாரையும் தாக்குவதாகவோ அல்லது யாரையும் அளவுக்கு மீறி ஆதரிப்பதாகவோ அதன் வெளிநாட்டுக் கொள்கை இல்லை. முழுமையாக அமெரிக்காவைச் சார்ந்ததாகவோ அல்லது அமெரிக்காவுக்கு எதிரான அணியினருடன் கூட்டுச் சேர்ந்ததாகவோ இல்லை. வளைகுடாவின் ஏனைய நாடுகளுடன் உள்ள அதே உறவை கட்டார் தெஹ்ரான் மற்றும் அங்காராவுடன் பேணி வருகிறது. மறுபுறத்தில் வொஷிங்டனுடன் காணப்படும் அதே உறவை, மொஸ்கோ மற்றும் பிஜீங்குடன் கட்டார் பேணி வருகின்றது. சில இஸ்ரேலிய கம்பனிகள் கட்டாரினுள் இயங்குகின்றன. அதேவேளை, பலஸ்தீன போராட்டத்திற்கு நிதியுதவி அளிப்பதிலும் கட்டாரே முன்னணியில் நிற்கின்றது.

மேலும் ஏனைய வளைகுடா நாடுகள் அரபு வசந்தத்தை தங்களது மன்னராட்சிக்கு அச்சுறுத்தலாக நோக்கின. ஆனால், கட்டார் மன்னராட்சி நடைபெறும் நாடாக இருந்த போதிலிரும், மத்திய கிழக்கின் சர்வதிகாரிகளுக்கு எதிரான அரபு வசந்தத்தை ஆதரிப்பதில் முன்னின்று உழைத்தது. சர்வதிகாரத்தின் இரும்புக் கரத்தை சர்வதேசத்தின் முன்னால் விளம்பரப்படுத்துவதில் கட்டாரின் தேசிய தொலைக்காட்சியான அல்ஜஸீராவின் பங்களிப்பானது அரபு வசந்தத்திற்கான கட்டாரின் பங்களிப்பை படம்பிடித்துக் காட்டுவதற்கு போதுமான சான்றாகும். கட்டாரின் இத்தகைய வெளிநாட்டுக் கொள்கையை "Zigzag foreign policy" அல்லது "Balanced diplomacy" என சர்வதேச அரசியல் பகுப்பாய்வாளர்கள் அழைக்கின்றனர். மேலும் கட்டாரின் சமநிலை பேணும் இராஜதந்திரக் கொள்கைக்கு நீண்ட வரலாறும் உள்ளது என அவர்கள் எழுதுகின்றனர். ஏனெனில், *1880- 1920* களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் கட்டார் காலனித்துவவாதிகளான பிரித்தானியாவுடன் ஒப்பந்தங்கள் செய்திருந்தது போலவே, உஸ்மானிய சாம்ராஜ்ஜியத்துடனும் நெருக்கமான உறவையும் இராஜதந்திர தொடர்புகளையும் வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

> *கட்டாரை எப்படியாவது முன்னணி நாடாக மாற்ற வேண்டும் என்ற மன்னரின் சீர்திருத்த சிந்தனை (Reformative thinking). அதற்காக அவர் கொண்டிருக்கும் சமூக, அபிவிருத்தித் திட்டங்கள் பல சீர்திருத்தவாத ஜனநாயக தலைவர்களிடமுள்ள திட்டங்களை விட ஆழமானது"*

**கட்டாரின் தேசியக் கொள்கைகள்**

கட்டாரின் உள்நாட்டுக் கொள்கைகளும் ஒப்பீட்டு ரீதியில் ஏனைய வளைகுடா நாடுகளை விட மக்கள் நலன்களை மையப்படுத்தியாக அமைந்துள்ளன. *1995*ஆம் ஆண்டு கட்டார் மன்னர் ஆட்சி பீடமேறியது முதல் அதன் கல்வி, கலாசார மற்றும் சர்வதேச அரசியலில் அதன் வகிபாகத்தை உயர்த்துவதனை இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகிறார். காலத்திற்குக் காலம் அமைச்சரவையில் காத்திரமான மாற்றங்களை மேற்கொண்டமை பெரும் மக்கள் வரவேற்பை மன்னருக்கு பெற்றுக் கொடுத்தது.

மேலும் கடந்த வருடம் எவ்வித மக்கள் எதிர்ப்பும் இல்லாமல், ஆட்சியை தனது மகனுக்கு கைமாற்றியமை மத்திய கிழக்கின் மன்னராட்சி வரலாற்றில் ஆட்சியை ஒரு மன்னர் தனது சுயவிருப்பத்தில் விட்டுக் கொடுத்த முதல் அனுபவமாகும். மாத்திரமன்றி, மத்திய கிழக்கின் கல்வி, கலாசார மற்றும் பொருளாதாரக் குறிகாட்டிகளில் கட்டாரே பெரும்பாலும் முன்னணி வகிக்கிறது. உதாரணமாக, சஊதி அரேபியாவில் இளைஞர்களுக்கு மத்தியிலான வேலையற்றோர் வீதம் 20ஐ விட அதிகம் என ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. அதேவேளை, கட்டாரின் வேலையற்றோர் *1* விட குறைவானதாக பதியப்பட்டுள்ளது. கடந்த வருடங்களில் உலகின் பெரும் பணக்கார நாடுகள் பட்டியலில் கட்டார் பலமுறை தெரிவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. சர்வதேச அபிவிருத்திக் குறிகாட்டிகளுக்கு ஏற்ப மத்திய கிழக்கில் அரச மட்டத்தில் நிதி மோசடி குறைந்த நாடுகள் பட்டியலில் கட்டாரும் இடம் பிடித்திருக்கிறது. எனவேதான் Financial Times பத்திரி John Llod என்ற மத்திய கிழக்கு அரசியல் விற்பன்னர், "கட்டார் மன்னர் நூறு வீத மன்னாராட்சியின் அதிகார இன்பத்தை அனுபவிப்பவர். பாராளுமன்றமோ அல்லது எதிர்க்கட்சி அரசியலை நிறுவுவது பற்றிய நோக்கமே அவரிடம் இல்லை. ஆனால், கட்டாரை எப்படியாவது முன்னணி நாடாக மாற்ற வேண்டும் என்ற மன்னரின் சீர்திருத்த சிந்தனை (Reformative thinking), அதற்காக அவர் கொண்டிருக்கும் சமூக, அபிவிருத்தித் திட்டங்கள் பல சீர்திருத்தவாத ஜனநாயக தலைவர்களிடமுள்ள திட்டங்களை விட ஆழமானது" என்கிறார்.

**கட்டாரும் சர்வதேச அரசியல் ஆதிக்கமும்**

இயற்கை வாயு மற்றும் பெற்றோலிய ஏற்றுமதிகளால் கட்டார் 70 வீதத்திற்கும் அதிகமான வெளிநாட்டு வருமானத்தைப் பெறுகிறது. அதனை நாட்டின் அபிவிருத்தியையும் அதன் சர்வதேச அந்தஸ்த்தையும் உயர்த்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகளில் முதலீடு செய்வதில் கட்டார் தனித்துவம் பெறுகின்றது. இந்த வகையில் கட்டாரின் வருமானங்கள் இரண்டு பிரதான துறைகளில் முதலீடு செய்யப்படுகின்றன:

*01.* அல்ஜஸீரா தொலைக்காட்சி சேவை

*02.* சர்வதேச விளையாட்டுக் கழகங்கள்

அல்ஜஸீரா தொலைக்காட்சி சேவையின் பணிப்பாளர் கட்டார் மன்னராவார். கட்டார் அரசின் ஏகபோக சொத்தாக அல்ஜஸீரா ஊடக கருதப்படுகிறது. அதனை சர்வதேச சக்தியாக மாற்றுவதற்கு கட்டார் பல கோடி டொலர்களை வருடாந்தம் செலவிட்டு வருகிறது. இன்று அல்ஜஸீரா வளைகுடா நாடுகளது பாதுகாப்பிற்கும் அரசியல் ஸ்திரப்பாட்டுக்கும் அச்சுறுத்தலாக விளங்குகிறது என வளைகுடா நாடுகளது சம்மேளம் தெரிவித்துள்ளது. கட்டார் அல்ஜஸீரா தெலைக்காட்சி சேவையை மூடிவிட வேண்டும் எனவும் அவை வலியு றுத்தியுள்ளன.

அல்ஜஸீரா தொலைக்காட்சி சேவை இன்று மத்திய கிழக்கில் மட்டுமன்றி, சர்வதேச ஊடகங்களான CNN மற்றும் BBC போன்ற தொலைக்காட்சி சேவைகளுக்கு சவாலானதான மாறிவிட்டது. அரபு நாடுகளில் இடம்பெறும் அரசியல் மாற்றங்களை நேர்மையாக கையாள்வதிலும் அரபுலகின் கருத்து மாற்றத்தை நோக்கி மக்களை வழிநடத்துவதிலும் அல்ஜஸீராவின் பங்கு பாராட்டத்தக்கதாகும். அல்ஜஸீராவின் அரபு தொலைக்காட்சி சேவையை 40 மில்லியனுக்கும் மேற்பட்டோர் பார்வையிடுகின்றனர். மேலும் 220 மில்லியன் பேர் ஒவ்வொரு நாளும் ஆங்கிலச் சேவையை பார்வையிடுகின்றனர் என Philip Seib என்ற கொலம்பியப் பல்கலைக்கழக பேராசிரியர் தனது "The AlJazeera's effect" என்ற கட்டுரையில் தொட்டுக் காட்டுகிறார். மேலும் அல்ஜஸீரா "An improved solid journalism" (முதிர்ச்சியடைந்த உறுதிமிக்க ஊடகம் என வர்ணிக்கப்படுவதும் நோக்கத்தக்கது.

வளைகுடா மன்னர்களின் நீண்ட கால நண்பர்களான ஹுஸ்னி முபாரக், பின் அலி, கடாபி மற்றும் அலி ஸாலிஹ் போன்ற சர்வதிகாரிளுக்கு எதிராகக் கிளம்பிய அரபு வசந்தம் 'அல்ஜஸீராவின் புரட்சி' என வர்ணிக்கப்படுவதுண்டு. அத்துடன் அரபு வசந்தத்துடன் அல்ஜஸீரா எதிர்க் கட்சியற்ற அரபு மன்னர்களின் எதிர்க்கட்சியாகவும் ஊடக அரசாகவும் பரிமாணம் பெற்றுள்ளது என அரசியல் ஆய்வாளர்கள் ஆச்சிரியப்படுகின்றனர். மேலும், கட்டாரின் வெளிநாட்டுக் கொள்கையை விளங்கிக் கொள்ள விரும்புவோர் அல்ஜஸீராவைப் பார்வையிடுங்கள் என வேறு சில அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். கட்டார் புரட்சிகரமான வெளிநாட்டுக் கொள்கையைக் கொண்ட ஒரு நாடு என்பதனை தான் அல்ஜஸீராவை வைத்துப் புரிந்து கொண்டதாக John Llod என்பவர் Financial Times பத்திரிகையில் எழுதியுள்ளார்.

**விளையாட்டு இராஜந்திரம் (Sports diplomacy)**

சர்வதேச அரசியலில் தனது வலுச் சமநிலையை அதிகரித்துக் கொள்வதற்காக கட்டார் அரசு கையாளும் மற்றுமொரு ராஜதந்திரமே சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் தனது முதலீடுகளை அதிகரிப்பதாகும். இது குறித்து கட்டார் மன்னர் ஒருமுறை "ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் கிடைப்பதனை விட சர்வதேச ஒலிப்பிக் சபையின் நிர்வாகக் குழுவில் அங்கத்துவம் கிடைப்பது மேல்" எனக் குறிப்பிட்டிருந்தார். குறிப்பாக, பல சர்வதேச கால்பந்தாட்ட கழகங்களுக்கு கட்டார் நிதியுதவியளித்து வருகிறது. பிரான்ஸின் முன்னணி கழகமொன்றை கட்டார் விலைக்கு வாங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மேலும் பார்ஸிலோனா கால்பந்தாட்டக் கழகத்தின் உத்தியோகபூர்வ ஆடையில் கட்டார் அரசுக்குச் சொந்தமான கம்பனியொன்றின் இலட்சினை பொறிக்கப்பட்டுள்ளது. வருடத்திற்கு 30 மில்லியன் டொலர்களை அக்கழகத்திற்கு கட்டார் அரசு வழங்குகி வருகிறது.

இன்னும், உலகப் புகழ்பெற்ற சைக்கிள் ஓட்டப் போட்டியான "டுவர் டீ பிரான்ஸ்" நிகழ்ச்சியில் பங்கு கொள்ளும் அனைத்து வீரர்களும் போட்டியில் பங்கு கொள்தவற்காக கட்டார் விமானச் சேவையில் இலவசமாக பயணிப்பதற்கான ஓர் உடன்படிக்கையையும் கட்டார் அரசு கைச்சாத்திட்டுள்ளது. மேலும் 2008- 2011 இடைப்பட்ட காலத்தில் சர்வதேசத்தைப் பாதித்த பொருளாதார நெருக்கடி நிலையின்போது ஆர்ஜன்டீனாவின் கால்ப் பந்தாட்ட கழகங்களுக்கும் தேசிய வீரர்களுக்கும் கட்டார் அரசு முழுமையாக நிதியுதவி அளித்தமையும் நோக்கத்தக்கது. இதுவே சர்வதேச கால்ப்பந்தாட்ட சம்மேளம் 2022ஆம் ஆண்டு சர்வதேச கால்ப்பந்தாட்டப் போட்டியை நடத்துவதற்கு கட்டாருக்கு அனுமதி வழங்கியதன் பின்புலமாகும்.

**கட்டாரும் இஸ்லாமியவாதிகளும்**

ஏனைய வளைகுடா நாடுகளை விட கட்டார் தனது தேசத்திற்குள் அதிகமாகவே கருத்துச் சுதந்திரத்தை அளித்துள்ளது. இதனால் பல சிந்தனைப் போக்குகளைக் கொண்டவர்களும் அதனைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இதனைப் பயன்படுத்திக் கொள்வதில் இஸ்லாமியவாதிகள் முன்நின்கின்றனர். தற்போது பல இஸ்லாமியவாதிகளின் அதிகமான செயற்பாடுகள் கட்டாரை மையப்படுத்தியதாகவே அமைந்துள்ளன. குறிப்பாக, கலாநிதி யூசுப் அல்காளாவியை கட்டார் அரசு அரச செலவில் பாராமரிக்கின்றது. ஆனால், அவர் வெளியிடும் கருத்துக்கள் கட்டார் அரசின் கருத்தாக இருக்க மாட்டாது. மாற்றமாக, அவரின் சொந்தக் கருத்தாகவே கொள்ளப்பட வேண்டும் என கட்டார் அரசு தெளிவாகவே அறிவித்துள்ளது.

(56ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறீமிஆ:

## அழிவை நோக்கிச் செல்லும் சர்வதேச ஒழுங்குகளும் அரபுலக ஆர்ப்பாட்டங்களின் வெளியுலக பரவலும்!

ஏ. அப்துல் மலிக்

விளாடிமிர் புடின் ஒரு தொழி சார் உளவாளி. இப்பணிக்காக ஜேர்மன் மொழியைக் கற்றுத் தேர்ந்த கே.ஜி.பியின் ஒற்றர். தற்போது ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைக்கு எவ்வித மதிப்பும் இல்லை என்பதை இவரும் நிரூபித்துள்ளார்.


### அழிவை நோக்கிச் செல்லும் சர்வதேச ஒழுங்கு

இதுவரை ஐ.நா. சபையினால் இஸ்ரேலுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட அனைத்து தீர்மானங்களையும் அமெரிக்கா Veto Powerஐப் பயன்படுத்தி ரத்துச் செய்துள்ளது. 2003ஆம் ஆண்டு அமெரிக்கா ஈராக் மீது தொடுத்த போர் பொய்யின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டது. சத்தாம் ஹுஸைனிடம் பாரிய அணு ஆயுதங்கள் உள்ளதாகப் பொய் கூறி அமெரிக்கா ஈராக்கினுள் புகுந்து கொலை வெறியாட்டம் ஆடியது. இந்தப் பொய்யை ஏற்க மறுத்த பிரான்ஸ், ஈராக் மீதான ஆக்கிரமிப்பை வன்மையாகக் கண்டித்தது.

ஐ.நா. பாதுகாப்பு சபையை பலவீனப்படுத்தியமை, சுயாதிக்க நாடுகளின் சுதந்திரத்தைத் தகர்த்தெறிகின்றமை, மனித உரிமைகளை அத்துமீறுகின்றமை, உலக வர்த்தகப் பகிர்வில் சுயநலம், அப்பட்டமான மனித உரிமை மீறலில் ஈடுபடும் ஆட்சியாளர்கள் தனது நலன்களுக்கு ஆதரவளிக்கும்பட்சத்தில் அவர்களுக்கு பக்கபலமாக இருத்தல், சுயநலனுக்காக ஒரு நாட்டுக்குள் புகுந்து மக்களிடையே இன, குழு வாதங்களை தோற்றுவித்தல், ஜனநாயகம் பேசிக் கொண்டே ஜனநாயகத்தை காலால் மிதிக்கும் இராணுவ ஆட்சியாளர்களுக்கு மறைமுகமாக துணைபுரிதல்... என்பவற்றையெல்லாம் அமெரிக்காவே ஏனைய உலக வல்லரசுகளுக்கு கற்றுக் கொடுத்துள்ளது.




எகிப்தில் ஆர்ப்பாட்டம் நடத்தும் மாணவர்களை நாளாந்தம் கொலை செய்துவரும் ஜெனரல் ஸீஸி, இஸ்ரேலினால் 'மகத்தான மனிதராக' பிரகடனப்படுத் தப்பட்டுள்ளார். மக்கள் புரட்சி பரவ விடாது தடுத்த 'பெரும் மகான்' என மக்கள் எழுச்சி மீது அச்சம் கொண்ட மன்னர்களும் இவரைப் பாராட்டி வருகின்றனர்.



சுயாதிக்க நாடுகளுக்குள் இராணுவ ரீதியாக புகுந்து, அரசாங்கங்களை மாற்றுவதற்கு சர்வதேச சட்டத்தில் எவருக்கும் அனுமதியில்லை. ஆனால், அமெரிக்காவே இந்த முன்மாதிரியையும் அறிமுகம் செய்திருக்கிறது. இது சர்வதேச சட்டத்தை சீர்குலைக்கும் செயல் என தென்னாபிரிக்கா ஐ.நாவின் பொதுச் சபைக் கூட்டத்தில் அமெரிக்காவை கடிந்து கொண்டது.

ஈராக்கினுள் தனது திட்டங்கள் வெற்றியளிக்காதபோது ஷீஆ- ஸுன்னி பிரச்சினையை கிளறிவிட்டே அமெரிக்கா, தனது இலக்கை எட்டியது. ஈராக்கினுள் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றபோதிலும், அரபு ஸுன்னிகளுக்கு எதிராக


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போர் தொடுத்துள்ள ஷீஆ பிரிவு பிரதமர் நூரி அல்மாலிக்கிற்கு அமெரிக்கா நிபந்தனையற்ற ஆதரவு வழங்கி வருகிறது.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷரீப் ஐ.நா.வின் பொதுச் சபை கூட்டத்தில் பாகிஸ்தானின் உள்ளே அமெரிக்கா நடத்திவரும் ஆளில்லா விமானத் தாக்குதல்களை நிறுத்துமாறு கோரியிருந்தார். “அமெரிக்காவின் இத்தாக்குதல்கள் சர்வதேச சட்டங்களுக்குப் புறம்பானவை. இதன் மூலம் அப்பாவிப் பொதுமக்கள், பெண்கள், சிறுவர்களே கொல்லப்படுகின்றார்கள்'' என ஐ.நா. சட்ட வல்லுனர்களும் குற்றம் சுமத்தியுள்ளனர். ஐ.நா. செயலாளர் பான் கீ மூன்கூட ஆளில்லா விமானத் தாக்குதல்கள் சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டே இடம்பெற வேண்டும் என ஆதங்கத்துடன் கூறி வருகிறார். ஆனாலும், அமெரிக்காவின் அத்துமீறிய ஆளில்லா விமானத் தாக்குதல்கள் தொடர்கின்றன.

இஸ்ரேல் பலஸ்தீனர்களின் ஆக்கிரமிக்கப்பட்ட நிலப்பரப்புகளில் சட்டவிரோத யூதக் குடியேற்றங்களை மேற்கொண்டு வருவதற்கு எதிராக கண்டனம் தெரிவித்து, பொருளாதாரத் தடைகளையும் அறிவித்துள்ள ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா சர்வதேச நீதி ஒழுங்கிற்கு குந்தகம் விளைவிப்பதையும் ஏற்றுக் கொண்டுள்ளது.

சூடான் அதிபர் உமர் ஹஸன் அல்பஷீர் யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டுளார் என ஐ.நா. பாதுகாப்பு சபை குற்றம் சுமத்தியுள்ளது. அவருக்கு எதிராக சர்வதேச யுத்தக் குற்ற நீதிமன்றம் பிடியாணை பிறப்பிக்க, ஐ. நா. பாதுகாப்பு சபையே உத்தரவிட்டுள்ளது. பொது மக்களைக் கொலை செய்தார் என்பதுவே அவருக்கு எதிரான குற்றச்சாட்டாகும். ஆனால், இன்று எகிப்தில் ஜெனரல் அப்துல் பத்தாஹ் ஸீஸி அமைதியான ஆர்ப்பாட்டக் காரர்களைக் கொன்று குவித்து வருகின்றாரே! மக்கள் தெரிவு செய்த ஜனாதிபதியை, ஜனநாயக அரசைக் கவிழ்த்து விட்டாரே! ஐ.நா. பாதுகாப்பு சபையில் அவருக்கு எதிராக அமெரிக்கா யுத்தக் குற்றப் பிரேரணையை ஏன் கொண்டு வரவில்லை?

உமர் ஹஸன் அல்பஷீர் மேற்குடன் குறிப்பாக, அமெரிக்காவுடன் இணங்கிப் போகாத காரணத்திற்காக அவர் யுத்தக் குற்றவாளியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார். அவர் ஐரோப்பா, அமெரிக்காவுக்கு சென்றால் உடனடியாக கைதுசெய்யப்படுவார். ஆனால், எகிப்தில் ஆர்ப்பாட்டம் நடத்தும் மாணவர்களை நாளாந்தம் கொலை செய்து வரும் ஜெனரல் ஸீஸி, இஸ்ரேலினால் ‘மகத்தான மனிதராக’ பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார். மக்கள் புரட்சி பரவ விடாது தடுத்த ‘பெரும் மகான்’ என மக்கள் எழுச்சி மீது அச்சம் கொண்ட மன்னர்களும் இவரைப் பாராட்டி வருகின்றனர். ஜனநாயகம், மனித உரிமைகள், மக்கள் விருப்பம் அனைத்தும் வாயினால் பேசுவதற்கே சிறப்பானது. தனது நலன்களையும் இஸ்ரேலையும் பாதுகாக்க வேண்டுமானால், அரபு மக்களின் அபிலாசைகளை அடக்கி, அவர்களைக் கொலை செய்வதற்கும் தயங்காத ஒருவரே அமெரிக்காவுக்குத் தேவை. ஸீஸி இப்பணியை சிறப்பாக ஆற்றி வருகிறார்.

யுத்தக் குற்றப் பிரேரணை விவகாரத்தில் அமெரிக்காவும் ஐ.நா. பாதுகாப்பு சபையும் குருட்டு நீதி செலுத்தி வருகின்ற நிலையில், சர்வதேச சட்டங்களின் மதிப்பு எப்போதோ உடைந்து விட்டது.

பலமிருந்தால் சட்டத்தை மீற முடியும் என்பதை அமெரிக்கா நடைமுறைப்படுத்திக் காட்டியுள்ள நிலையில், அடுத்த வல்லரசான சீனாவும் தனது பலத்தை நிரூபிக்கத் துவங்கியுள்ளது. கிழக்கு சீனக் கடற்பரப்பு பாதுகாப்பு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசம் ஆகும். ஜப்பான், தென் கொரியா மற்றும் சீனாவுக்கிடையில் அமைந்துள்ள கிழக்கு சீனக் கடற்பரப்பு பல தசாப்தங்களாக சர்ச்சைக்குரிய பிரதேசமாகவே இருந்து வருகிறது. சர்வதே சட்டங்களின் பிரகாரம், இப்பிரச்சினை நீதியாக தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், 2013 நவம்பரில், இப்பிராந்தியத்தில் வேறு நாட்டு விமானங்கள் பறக்க முடியாத வகையில் சீனா தனது விமானப் பாதுகாப்பு வலயமாக இதனைப் பிரகடனப்படுத்தியது. ஜப்பானும் தென் கொரியாவும் இதற்கெதிராக குரல் கொடுத்தபோதும், சர்வதேச சட்டம் இதற்கு அனுமதிக்க மாட்டாது என அமெரிக்கா ஆரவாரம் செய்தபோதும் சீனாவின் நிலைப்பாட்டை எவராலும் அசைக்க முடியவில்லை.

ஆயுதப் பலமிருந்தால் எதுவும் செய்ய முடியும் என்பதை இஸ்ரேலும் நிரூபித்திருக்கிறது. லெபனானின் ஷஃபா விவசாய நிலங்கள், சிரியாவின் கோலான் குன்றுகள், பலஸ்தீன் மீதான ஆக்கிரமிப்பு... என இஸ்ரேல் தனது வல்லாதிக்கத்தை நிலைநிறுத்தியுள்ள நிலையில், ரஷ்யா போன்ற வல்லரசுக்கு சர்வதேச சட்டம் கசக்கி வீசப்படும் கடதாசி போன்று மாறி விட்டது. முஸ்லிம் நாடுகளின் விவகாரங்களில் மாத்திரம் ஐ.நா. பாதுகாப்பு சபையை தண்டனைக்கான, அநீதிக்கான ஒரு சபையாகவே வல்லரசுகள் பயன்படுத்தி வருகின்றன. வல்லரசுகளுக்குள் பிரச்சினை உருவாகும்போது, ஐ.நா. பாதுகாப்பு சபை வெறுமனே கூடிக் கலைகிறது.

### அமெரிக்காவை மிகைக்கும் புடின்!

விளாடிமிர் புடின் சரிந்துபோன சோவியத் யூனியனை மீண்டும் கட்டியெழுப்ப முயற்சிக்கிறார் என்பது எப்போதோ வெளிச்சத்துக்கு வந்த உண்மை. 2005ஆம் ஆண்டு உஸ்பெகிஸ்தான் அமெரிக்காவுக்கு வழங்கியிருந்த கர்ஷி கானாபாத் விமானத் தளத்திலிருந்து அமெரிக்கா வெளியேற வேண்டுமென உஸ்பெகிஸ்தான் கட்டளையிட்டது. உஸ்பெகிஸ்தான் சோவியத் யூனியனிலிருந்து சுதந்திரம் பெற்றிருந்தாலும் அதன் மூக்கணாங் கயிறு ரஷ்யாவிடமே உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தனது ஆதரவு ஜனாதிபதியை விலக்கிய உக்ரைன் நாட்டுக்கு தகுந்த பாடம் கற்பிப்பேன் எனும் தோரணையில் களமிறங்கியுள்ள புடின், உக்ரைனின் கிறீமிஆவை இராணுவப் பலம் கொண்டு துண்டாடியுள்ளார். கிறீமிஆவின் 24 வீத உக்ரைனியர்களதும் 12 வீத தாத்தாரியர்களதும் நிலை கேள்விக்குறியாகியுள்ளது.**

ஜோர்ஜியாவும் சோவியத் யூனியனிலிருந்து சுதந்திரம் பெற்று 2006ஆம் ஆண்டில், நேட்டோவுடன் (வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள்) இணைந்து கொள்வதாக அறிவிப்புச் செய்தது. இதனை இலக்காகக் கொண்டே 1991இலேயே ரஷ்யா, பெலரூஸ், உக்ரைன் என்பவற்றினால் உருவாக்கப்பட்ட 'சுதந்திர நாடுகளின் பொதுநலவாயம்' அமைப்பின் பாதுகாப்புச் சபையிலிருந்து விலகி அதன் பொருளாதார கூட்டுறவுச் சபையில் மாத்திரம் அங்கம் வகிக்க விருப்பம் தெரிவித்தது. நேட்டோ அமெரிக்கா தலைமையிலான ஓர் இராணுவ அமைப்பாகும். ரஷ்யாவின் எல்லையுடன் நேரடியாக தொடர்பு கொண்டுள்ள எந்த வொரு நாடும் நேட்டோவில் அங்கத்துவம் பெறுவது தனது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதை புரிந்து வைத்துள்ளார் விளாடிமிர் புடின்.

2008இல் புடின் அரசுக்கும் ஜோர்ஜியாவுக்குமிடையில் இடம்பெற்ற யுத்தத்தின் பின்னர், ஜோர்ஜியாவின் அப்காஸியா பிராந்தியமும் தெற்கு ஒஸ்ஸேஸியா பிராந்தியமும் பிரிக்கப்பட்டு ரஷ்யாவினுள் கொண்டு வரப்பட்டன. தற்போது இவை இரண்டுமே ரஷ்யாவுடன் இணைக்கப்பட்டு விட்டன. முன்னாள் சோவியத் ரஷ்ய நாடுகளை இணைத்து ஐரோப்பிய ஒன்றியம் போன்ற ஒரு பொருளாதார கலாசார, அரசியல், இராணுவ அமைப்பை உருவாக்கும் திட்டத்தையும் புடின் அண்மையில் வெளியிட்டுள்ளார்.

உக்ரைனும் நேட்டோ நோக்கி நகர்வது தெளிவாக புலப்பட்டுள்ளது. ரஷ்யாவில் தங்கியிருப்பதை தவிர்க்க, ஐரோப்பிய ஒன்றியத்துடன் பூரண பொருளாதார, வர்த்தக உடன்படிக்கையை மேற்கொள்ள உக்ரைன் தயாராகி வருகிறது. இதனைத் தடுத்து பொருளாதார ஒப்பந்தத்தை தன்பக்கம் கடத்திக் கொண்டுவரவே புடின் திட்டமிடுகிறார். தனக்கு முழுமையாக ஆதரவு வழங்கி வந்த உக்ரைன் அதிபர் விக்டர் யினோக்கோவிச்சை வைத்து, ஐரோப்பிய ஒன்றியத்துடனான ஒப்பந்தத்தை ரத்து செய்தார். ஆனால், யினோக்கோவிச்சுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் உக்கிரமடைந்தபோது, உக்ரைன் பாராளுமன்றம் அரசியல் யாப்பின் பிரகாரம் ரஷ்ய சார்பு யினோக்கோவிச்சை பதவி நீக்கியது.

ரஷ்யா மீது பொருளாதார தடை விதிக்கப்பட்டால் அது உக்ரைனுக்கே மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும். 2009இல் தற்போதைய எதிர்க் கட்சித் தலைவரும் அன்றைய உக்ரைன் பிரதமருமான யூலிஆ ரைமோஷின்கோ விளாடிமிர் புடினுடன் முரண்பட்டுக் கொண்டபோது, ரஷ்யாவிலிருந்து உக்ரைனுக்கு ஏற்றுமதியாகும் வாயுவை புடின் நிறுத்தி விட்டார். அதனையடுத்து உக்ரைனின் முழுப் பொருளாதாரமும் ஆடிப்போய் விட்டது. இந்நிலையில், வாயுத்தடையை மீண்டும் ஆயுதமாகப் பயன்படுத்துவதாக புடின் எச்சரித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் பொருளாதார தடைகளை விதிக்கும்போது, ரஷ்யாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் ரஷ்ய வாயுவும் தடைப்படும் அபாயமும் உண்டு. பின்லாந்து, எஸ்ரோனியா மற்றும் லெத்வியா முதலான நாடுகள் ரஷ்யாவிலிருந்து நேரடியாக வாயுவைப் பெற்று வருகின்றன. பெலரூஸ் வழியாக ஐரோப்பாவின் லிதுவேனியா மற்றும் போலாந்துக்கும் ரஷ்யாவின் வாயு ஏற்றுமதியாகிறது. உக்ரைன் வழியாக ஸ்லோவாகியா, ரோமானியா, ஹங்கேரி, போலந்து முதலானவற்றுக்கும் Baltic கடல் வழியாக ஜேர்மனிக்கும் விளாடிமிர் புடின் வாயுவை ஏற்றுமதி செய்து வருகின்றார். பிரான்ஸூம் ரஷ்ய வாயுவை கொள்வனவு செய்கிறது. ரஷ்யா பிற நாடுகள் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க இந்த வாயு சக்தி மாத்திரமே போதுமானதாகும்.

**கிறீமிஆ**

அமெரிக்க வரலாற்றாசிரியர் டேனியல் பைப்ஸ், ரஷ்யாவின் 144 மில்லியன் சனத் தொகையில் 21-23 மில்லியன் பேர் முஸ்லிம்கள் எனவும் அவர்கள் 15 வீதம் எனவும் மதிப்பீடு செய்துள்ளார். முஸ்லிம்களின் சனத்தொகை இதனை விடவும் அதிகம் என்போரும் உள்ளனர். இவர்களில் தாத்தாரிய அடிப்படையைக் கொண்ட முஸ்லிம்கள் 5.5 மில்லியன் பேர் ஆகும். இரண்டு மில்லியன் பேர் ரஷ்ய தாதரிஸ்தான் மாநிலத்தில் வாழ்கின்றனர். உஸ்பெகிஸ்தான், கஸகஸ்தானில் வாழும் முஸ்லிம்களை கிறீமிஆவுடன் இணைத்தால், உலகில் மொத்தமாக ஏழு மில்லியன் தாத்தாரிய முஸ்லிம்கள் இருப்பர்.

அரபு அரிச்சுவடியே தாத்தாரிய மொழியின் அத்திவாரமாகும். துருக்கி மொழிக் குடும்பத்தின் ஒரு பகுதியாக இருந்த இம்மொழிக்கு மஷார், காஸான், சைபிரிய என மூன்று மொழிப் பாவனைகள் (Dialects) உள்ளன. முஸ்லிம்கள் இப்பிராந்தியத்தை "கிறம்" என்றே அழைக்கின்றனர். அரபு மொழியிலும் 'கிறம்' என்றே பிரயோகிக்கப்படுகிறது.

1521இல் 'கிறம்' உஸ்மானிய கிலாபத்தின் ஒரு மாநிலமாக காணப்பட்டது. 'பக்ஷி ஸறாய்' அதன் தலைநகரமாக விளங்கியது. 1678இல் ரஷ்யர்கள் கிறீமிஆவை சுற்றிவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைத்தபோதும், 96 வருடங்களின் பின்னரே கிறீமிஆ வீழ்ச்சி கண்டது. 1783இல் அது ரஷ்ய ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது.

1883இல் ஒன்பது மில்லியன் முஸ்லிம்கள் கிறீமிஆவில் வாழ்ந்துள்ளனர். 1941 ஆகும்போது எட்டு இலச்சத்து ஐம்பதாயிரம் பேராக குறைக்கப்பட்டனர். ரஷ்ய பெரும் பான்மையினரை குடியமர்த்தும் பணியில் ரஷ்யா ஈடுபட்ட போது, கொல்லப்பட்ட முஸ்லிம்களை விட துரத்தப்பட்ட வர்களே அதிகம். 1944இல் ஸ்டாலின் நான்கு இலட்சம் கிறீமிஆ தாத்தாரிய முஸ்லிம்களை மிருகங்களை ஏற்றும் புகையிரதப் பெட்டிகளில் அடைத்து சைபீரியாவுக்கும் உஸ்பெகிஸ் தானுக்கும் நாடு கடத்தினான். கிறீமிஆவில் 1940இல் ஆயிரத்து இருநூறு பள்ளிவாசல்கள் காணப்பட்டன. இன்று அங்கு ஏழு பள்ளிவாசல்கள் மாத்திரமே உள்ளன. 1991இல் உக்ரைன், சோவியத் யூனியனிலிருந்து சுதந்திரம் பெற்றபோது துரத்தப்பட்ட முஸ்லிம்கள் சிலர் கிறீமிஆவுக்கு வர அனுமதிக்கப்பட்டனர்.

2001ஆம் ஆண்டு கணிப்பீட்டின் பிரகாரம், கிறீமிஆவில் இன்று 12 வீதமானோர் முஸ்லிம்களாகவும், 24 வீதமானோர் உக்ரைன் மொழி பேசுவோராகவும் ஏனையோர் ரஷ்ய மொழி பேசுவோராகவும் உள்ளனர். அங்கு தற்போது சுமார் இரண்டரை இலட்சம் முஸ்லிம்கள் உள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. உக்ரைனின் அதிகூடிய சுயாட்சிப் பிரதேசமாகக் காணப்பட்ட கிறீமிஆவில் கடந்த 24 வருடங்களாக முஸ்லிம்கள் ஓரளவு சுதந்திரத்துடன் வாழ்ந்து வருகின்றனர். ஆனால், அங்குள்ள தாத்தாரிய முஸ்லிம்கள் மீண்டும் ரஷ்ய ஆதிக்கத்தின் கீழ் வருவதற்கு தயங்குகின்றனர். ரஷ்யாவுடன் கிறீமிஆவை இணைப்பது தொடர்பாக புடின் எதேச்சதிகாரமாக மேற்கொள்ளும் சர்வஜன வாக்கெடுப்பில் தாம் பங்குகொள்வதில்லை என தாத் தாரிய முஸ்லிம்களின் தலைவர் றிப்அத் ஷுபறொவ் அறிவித்திருந்தார். ஆனால், சர்வதேச சட்டம், சர்வதேச எச்சரிக்கை பொருளாதாரத் தடை, ஐ.நாவின் வேண்டுகோள் அனைத்தையும் உதறித்தள்ளி விட்டார் விளாடிமிர் புடின்.

உக்ரைனிய மக்களின் விருப்பத்தின் பேரிலேயே உக்ரைனிய பாராளுமன்றம் அறுதிப் பெரும்பான்மையுடன் யினோகோவிச்சை பதவி நீக்கம் செய்தது. தனது ஆதரவு ஜனாதிபதியை விலக்கிய உக்ரைன் நாட்டுக்கு தகுந்த பாடம் கற்பிப்பேன் எனும் தோரணையில் களமிறங்கியுள்ள புடின், உக்ரைனின் கிறீமிஆவை இராணுவப் பலம் கொண்டு துண்டாடியுள்ளார். கிறீமிஆவின் 24 வீத உக் ரைனியர்களதும் 12 வீத தாத்தாரியர்களதும் நிலை கேள் விக்குறியாகியுள்ளது.

வல்லரசுகள் சிறிய நாடுகளை அடக்கும் போக்கு கடந்த இரு தசாப்தங்களில் கணிசமான அளவு பெருகியிருக்கிறது. ஐ.நா. சபை கட்டியெழுப்பிய தனி நபர்களுக்குள்ள சுயா திக்க கொள்கை (Sovereignty) தூள் தூளாக நொறுக்கப் பட்டுள்ளது. ஐ.நா. பாதுகாப்பு சபை வீட்டோ அதிகாரம் கொண்ட ஐந்து நாடுகளின் கைகளில் விளையாட்டுப் பொம்மையாக ஆடிக் கொண்டிருக்கின்றது. தனக்கு எதிராக, உக்ரைனுக்கு சார்பாக ஐ.நா. பாதுகாப்பு சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை ரஷ்யா வீட்டோ அதிகாரத்தின் மூலம் ரத்துச்செய்து விட்டது. சீனா ரஷ்யாவுக்கு ஆதரவ ளித்து வாக்கெடுப்பில் பங்கு கொள்ளவில்லை. வல்லரசுகள் சிறிய நாடுகளை இவ்வாறு தொடர்ந்தும் அடக்கி ஒடுக்கினால் ஐ.நா. சபையின் அத்திவாரமே தகர்ந்து, உலக ஒழுங்கே கேள்விக்குறியாகும் நிலை தோன்றலாம்.

### தனி மனித எழுச்சி

அரபுலக புரட்சிகள் முழு உலகிலும் ஓர் உண்மையை நிறுவியுள்ளன. எந்த வல்லரசு யாரை ஆட்சியாளராகக் கொண்டு வந்தாலும், ஆட்சியாளர்கள் அநீதியிழைத்தால் அவர்களின் ஆசனத்தை உலுக்கும் சக்தி மக்களுக்கு உண்டு என்பதுவே அந்த யதார்த்தமாகும். உயிர் போனாலும் அநீதிக்கு எதிராக குரல் கொடுக்கின்ற ஆர்ப்பாட்டங்களுக்கு பொது மக்கள் தயாராகவே உள்ளனர். வெனிசூலா, தாய் லாந்து, உக்ரைன் என்பவற்றில் வெளிக்கிளம்பியுள்ள ஆர்ப்பாட்டங்கள் எல்லாமே சமூக நீதி, வளப்பகிர்வு, சமத்துவம் அனைத்தும் பொது மக்களுக்கு கிடைக்க வேண்டும் என உரத்துச் சொல்கின்றன. ஆட்சியாளர்கள் ஆடம்பர வாழ்க்கையில் மிதப்பதை மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்பதற்கு அரபுலக ஆர்ப்பாட்டங்களே முன்னுதாரணங்களாகும்.

உலகில் எந்த மூலையில் யாருக்கு அநீதி இழைக்கப் பட்டாலும் அதற்கு எதிராக முதலில் குரல் கொடுக்க வேண்டியவர்கள் முஸ்லிம்கள். அரபு வசந்தம் இடம்பெற்ற நாடுகள் அனைத்துமே சர்வதிகாரிகளின் பிடியிலேயே காணப்பட்டன. இனிமேல், இந்நாட்டு ஆட்சியாளர்களின் அட்டகாசத்தை எந்த தனி மனிதனும் சகித்துக் கொள்ள மாட்டான். அரபுலகில் தனி மனிதன் மாறிவிட்டான். சமூக நீதி கிடைக்கா விட்டால் உயிரைத் துச்சமாக மதித்து வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தே தீருவான். இதன் பிறகு ஹுஸ்னி முபாரக், கதாபி, ஸெய்னுல் ஆபிதீன், பஷ்ஷார் அல்அஸத் போன்ற எவரும் ஆட்சி பீடத்தில் சக்கரவர்த் திகளாக அமரவே முடியாது.


அநீதியைக் கண்டும் காணாமலிருக்கும் சூழலை, தனி மனிதனை எந்த ஆட்சியாளராலும் உருவாக்க முடியாது என்பதை எகிப்தில் ஜெனரல் ஸீஸிக்கு எதிராக தொட ரும் ஆர்ப்பாட்டங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

(55ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அஷ்ஷெய்க் அப்துல் ஹலீம் (நளீமி) B.A**
**நிறுவனர், குடும்ப வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கான மத்திய நிலையம்**
cfcglanka@gmail.com



# வீட்டுக்குள் ஒரு விவசாயப் பாடம்

நம் நாட்டுக்கு அறிமுகமில்லாத ஒரு விடயம்தான் நான்கு பருவ கால மாற்றங்கள். பருவங்கள் மாறி மாறி வருகின்ற நாடுகளில் இருக்கின்ற மனிதர்கள் காலநிலையில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கேற்ப தமது நடைமுறைகளிலும் பழக்க வழக்கங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்கின்றனர். அப்படி ஏற்படுத்தும்போதுதான் அவர்களால் வாழ்க்கையை சுமுகமாகக் கொண்டு செல்ல முடிகின்றது.

நம் நாட்டில் பருவ மாற்றங்கள் இல்லாதுபோனாலும் நமது வாழ்க்கையில் பருவ மாற்றங்கள் ஏராளமாகவே நிகழ்கின்றன என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மையாகும். காலநிலையில் ஏற்படும் மாற்றங்களுக்கு சரியாக ஈடுகொடுக்கத் தவறும் பட்சத்தில் பலத்த அபாயங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படுவது போல வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்களுக்கு சரியாக ஈடுகொடுக்கத் தவறும்போதும் பல்வேறு பாதகமான நிலைமைகள் ஏற்படுகின்றன.

வாழ்க்கையில் ஏற்படும் அத்தகைய மாற்றங்களைப் பற்றியும் அவற்றுக்கு சரியாக ஈடுகொடுப்பதற்காக செய்ய வேண்டியவை என்ன என்பது பற்றியும் சுருக்கமாக விளக்க முயற்சிப்பதுதான் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

காலநிலையில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் அந்த மாற்றங்களுக்கேற்ப செய்ய வேண்டிய மாற்றங்கள் பற்றியும் விவசாயம் செய்கின்றவர்களிடம் கேட்டால் நன்றாகச் சொல்வார்கள். என்னென்ன காலங்களில் என்னென்ன பயிரிட வேண்டும், எப்படிப் பராமரிக்க வேண்டும் என்பன போன்ற விடயங்களெல்லாம் அவர்களுக்கு அத்துப்படி. ஒரு விவசாயி தான் பயிரிடும் நிலம் பற்றியும் காலநிலை பற்றியும் களைகள் பற்றியும் நன்கு தெரிந்து வைத்திருப்பான்.

மனித உறவுகளிலும் அத்தகைய விடயங்கள் காணப்படுகின்றன. பருவ மாற்றங்கள் ஏற்படுகின்றபோதும் நிலத்தின் தன்மையில் ஏற்படுகின்ற மாற்றங்களின்போதும் களைகள் முளைக்கின்றபோதும் விவசாயி தனது முயற்சியாலும் உழைப்பாலும் அந்த சவால்களை வெற்றி கொண்டு இறுதியில் பயிரை அறுவடை செய்கின்றான். அதே போன்று வாழ்க்கையையும் ஒருவர் நோக்குகின்றபோது தடைகளையும் சவால்களையும் தாண்டி ஒவ்வொரு கட்டத்திலும் மகிழ்ச்சியை அறுவடை செய்யலாம்.

**இம்மையில் மட்டுமல்ல, மறுமையிலும்கூட தொடரப் போகும் குடும்ப வாழ்க்கையை ஆரம்பிப்பவர்கள் அது பற்றிய தெளிவான அறிவுடனும் புரிதல்களுடனும் இல்லை என்பது கசப்பான உண்மையாகும். அது போகப் போக சரி வரும் என்ற பழைய பல்லவியைத் தொடர்ந்தும் மீட்டி மீட்டியே நிறையக் குடும்பங்கள் பிரிந்து விட்டன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறந்த அறுவடைக்கான முதலாவது ஆலோசனை: மாற்றங்கள் பற்றிய அறிவு**

வாழ்க்கையில் மனிதன் எதனையுமே அது பற்றிய அறிவு இல்லாமல் செய்வதில்லை. ஏதோ ஒரு வகையில் சம்பந்தப்பட்ட விடயத்தைப் பற்றிய அறிவு கட்டாய மாகத் தேவைப்படுகின்ற காலமிது. ஒரு தொழில் செய்வ தாக இருந்தாலும் சரி, ஏதாவதொரு வேலையைச் செய் வதாக இருந்தாலும் சரி அது பற்றிய அறிவின்றி அதனைச் செய்யும்போது அதில் குளறுபடிகளும் சிக்கல்களும் தோன்றுகின்றன.

நிலைமை இப்படியிருக்க, மிகப் பெரும்பாலான மனிதர்கள் அறிவோ தெளிவோ சரியான புரிதல்களோ இன்றி செய்கின்ற ஒரு வேலைதான் திருமணமாகும். இம்மையில் மட்டுமல்ல, மறுமையிலும்கூட தொடரப் போகும் குடும்ப வாழ்க்கையை ஆரம்பிப்பவர்கள் அது பற்றிய தெளிவான அறிவுடனும் புரிதல்களுடனும் இல்லை என்பது கசப்பான உண்மையாகும். அது போகப் போக சரி வரும் என்ற பழைய பல்லவியைத் தொடர்ந் தும் மீட்டி மீட்டியே நிறையக் குடும்பங்கள் பிரிந்து விட்டன.

திருமணம் முடித்த புதிதில் இருக்கும் பருவம் சிறிது காலத்தில் மாறுகின்றது. அதன் பின்னர் குடும்ப வாழ் வில் இன்னுமொரு பருவ காலம் ஆரம்பிக்கின்றது. குழந்தை பிறந்தவுடன் வேறொரு பருவம் ஆரம்பமாகின்றது. வாழ்க்கை நகர நகர பருவங்கள் மாறி மாறி வருகின்றன. எப்படி ஒரு விவசாயி பருவ மாற்றங்களுக்கு ஏற்ப பயிர்க ளைப் பராமரிப்பதில் மாற்றங்களை மேற்கொள்கின்றானோ அது போன்று இங்கும் சிந்திக்கின்ற பாங்கில், புரிந்து கொள்கின்ற விதத்தில், கலந்துரையாடுகின்ற முறை யில்... என்று அனைத்திலும் மாற்றங்கள் தேவைப் படு கின்றன. அப்போதுதான் நீங்கள் குடும்ப வாழ்வின் அறு வடையாக எதிர்பார்க்கின்ற மகிழ்ச்சி தொடர்ந்தும் பாது காப்பாக நீடிக்கும். இல்லாதபோது திடீர் கோடையால் அல்லது மாரியால் பயிர்கள் அழிந்து நாசமாவது போல வாழ்க்கையிலிருந்து மகிழ்ச்சியும் நிம்மதியும் காணாமல் போய் விடும்.

சிலவகையானபிரச்சினைகள் வரும்போது உங்களிடம் அது தொடர்பான போது மான விளக்கம் இல்லாவிட்டால் எப்படி ஒரு விவசாயி துறைசார் உதவியை நாடுகின்றானோ, அதே போன்று நீங்களும் தேவையான உதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அது உங்களது குடும்ப அங்கத்தவர்களாக இருக்கலாம், ஆலிம்களாக இருக்கலாம், நம்பிக்கையுள்ள நண்பர்களாக இருக்கலாம், யாராகவும் இருக்கலாம். ஆனால், அவர்கள் குறிப்பிட்ட விடயத்தில் புலமையுள் ளவர்களாக இருக்க வேண்டும். பலர் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை பல் வைத்தியரிடம் சென்று தமது பற்களை தொடர்ந்தும் ஆரோக்கியமாக வைத்துக் கொள்வ தற்கான வழிகாட்டல்களைப் பெற்றுக் கொள்வார்கள். குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டு தமது உடல் நிலை பற்றிய தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வார்கள். ஆனால், தமது குடும்ப வாழ்க்கை பற்றி எவ்வித கரிசனை யுமற்று வருடக் கணக்கில் இருந்து விடுவார்கள்.

**நீங்கள் உங்களது கணவனையோ அல்லது மனைவியையோ அவர் உங்களுக்கு மட்டுமே உரியவர். அவரால் ஏனைய குடும்ப உறுப்பினர்கள் எந்தப் பயனும் அடையக் கூடாது என்று நினைப்பவராக இருந்தால் உங்களுக்கு வாழ்க்கை பற்றிய மிக முக்கியமான பாடம் தெரியாது என்பதுதான் அர்த்தமாகும்.**

உண்மையில் பிரச்சினைகள் வந்தால் குடும்ப வாழ்க்கை தோல்வியடைந்து விட்டது என்று அர்த்த மில்லை. ஏனென்றால், பிரச்சினைகளை சந்திக்காதவர்கள் இவ்வுலகில் யாருமில்லை. ஆனால், பிரச்சினைகள் வரும்போதும் அது தொடர்பான அறிவைப் பெற்று அதனை நல்ல முறையில் தாண்டிச் செல்ல முயலாதவர்கள் நிச்சயமாக வாழ்க்கையில் தோல்வியடைந்தவர்களே!

**சிறந்த அறுவடைக்கான இரண்டாவது ஆலோசனை: நிலத்தைப் பண்படுத்துங்கள்**

எவ்வளவு சிறந்த நிலமாக இருந்தாலும் அதனை உரிய முறையில் கவனிக்காதபோது அதனால் பெறப்ப டுகின்ற பயன் குறைவானதாகவே இருக்கும். சிலபோது பண்படுத்தாமல், களை பிடுங்காமல் பசளையை இட்டால் நிலம் செழிக்கப் பெய்கின்ற மழையே அந்தப் பசளை களைக் கழுவிச் சென்று விடும்.

இதே போன்றுதான் உறவுகள் என்று வருகின்ற போதும் பசளைகளைக் கழுவிச் செல்கின்ற மழைகள் அவ்வப்போது பொழிகின்றன. உறவுகள் சரியான முறையில் கவனிக்கப்படாதிருக்கும்போது எவ்வளவு நெருக்கமானவர்க ளாக இருந்தாலும் அந்த நெருக்கத்தால் கிடைக்க வேண்டிய சந்தோஷம் கிடைக்காமல் போய்விடு கின்றது.

நிலத்தைப் பண்படுத்துவதற்கு கத்தி, மண்வெட்டி, முள்ளுக் கரண்டி என்பவற்றைப் பயன்படுத்துவார்கள். உறவுகளைப் பண்படுத்துவதற்கு எதனைப் பயன்படுத்தலாம் என்று நீங்கள் கேட்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிகின்றது. தயவுசெய்து மேலே சொன்னவற்றைப் பயன்படுத்தி விடாதீர்கள். அப்புறம் நிரந்தரமாகவே அறுவடை நாசமாகிவிடும். அழகான வார்த்தைகள், உற்சாகமூட்டும் கலந்துரையாடல்கள், அவ்வப்போதான தனிமைகள், அடிக்கடி இடம்பெறும் தொடுகைகள், பரஸ்பர உதவிகள், அடுத்தவர் வேலைகளில் பங்கெடுத்தல்... முதலானவைதான் உறவுகளைப் பண்படுத்தும் ஆயுதங்கள். இவற்றையெல்லாம் பயன்படுத்தாமல் நீங்கள் உங்களது வாழ்க்கையில் மகிழ்ச்சியை எதிர்பார்த்தீர்களென்றால் அது எப்படியான எதிர்பார்ப்பு என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

ஆம், ஒரு விவசாயி தனது நிலத்தைப் பண்படுத்துவதற்கு எப்படி நேரம் ஒதுக்கிக் கொள்வானோ அதே போன்று நீங்களும் உங்களது உறவுகளைப் பண்படுத்த நேரம் ஒதுக்குங்கள். ஆனால், ஒரு சின்ன வித்தியாசம். விவசாயத்துக்கு ஒரு போகத்துக்கு ஒரு முறை பண்படுத்தினால் போதும். ஆனால், வாழ்க்கையில் மகிழ்ச்சியை அறுவடையாக எதிர்பார்ப்பவர்கள் எந்நாளும் இந்த வேலைக்கு நேரம் ஒதுக்கியே ஆக வேண்டும். கொஞ்ச நாள் தவறிப் போனால் அதன் பாதகமான விளைவை நீங்கள் உடனடியாக காண்பீர்கள்.

**சிறந்த அறுவடைக்கான மூன்றாவது ஆலோசனை: பழம் கனிந்தால் பறித்து விடுங்கள்**

நீங்கள் காய்கறிச் செடிகளை நட்டிருக்கின்றீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். பருவ மாற்றங்களுக்கேற்ப பராமரிப்பில் கவனம் செலுத்தியிருக்கின்றீர்கள். நிலமும் நன்றாகப் பண்படுத்தப்பட்டே அவை நடப்பட்டிருக்கின்றன. இப்போது நிச்சயம் அந்தச் செடிகள் நன்றாக வளர்ந்திருக்கும். பச்சைப் பசேலென்று செழிப்பாக உள்ள அந்தச் செடிகளைப் பார்த்து நீங்கள் பூரித்துப் போவீர்கள். ஆனால், காய்கறிகள் குறிப்பிட்ட பருவத்தை அடைந்தும் நீங்கள் அவற்றை பாவனைக்கு எடுக்கவில்லையென்றால் ஒன்றில் அவை அளவுக்கதிகம் முற்றி பாவனைக்கு உதவாததாக மாறிவிடும் அல்லது அழுகிப் போய் விடும். அது மட்டுமல்ல, குறித்த செடிகளில் அடுத்த முறை விளைச்சல் குறைவாகவே இருக்கும்.

இதே போன்றுதான் குடும்பத்திலும் கணவன்-மனைவி மற்றும் பிள்ளைகளிடத்தில் காணுகின்ற நல்லவற்றை பிரயோசனமானவற்றை உடனுக்குடன் பாராட்டி ஊக்கப்படுத்தாதபோது அதனால் அடுத்தவர்கள் அடையக்கூடிய பிரயோசனம் இல்லாமல் போவதுடன் எதிர்காலத்தில் குறித்த நலவுகள் அவர்களிடத்தில் வெளிப்படாமல் போகக்கூடிய அபாயமும் இருக்கின்றது.

ஆரம்பத்திலிருந்து கடுமையாக உழைத்த ஒரு விவசாயி அறுவடை நேரத்தில் சோம்பல் பட்டு உட்கார்ந்து விட்டால் அந்த வருட அறுவடையும் பாழாகி அடுத்த வருட விளைச்சலுக்கும் பாதிப்பு ஏற்படுவது போலவே குடும்ப வாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் வெற்றியளிக்கத் தொடங்கும்போது முயற்சிகளைக் குறைத்து நலவுகளைப் பாராட்டாமல், ஊக்கப்படுத்தாமல் ஓய்வெடுக்க முயல்கின்றபோது உங்களது முயற்சிகள் வீணாவது அப்போதைக்கு மட்டுமல்ல, நாளை மீண்டும் மகிழ்ச்சி தொலைந்து போகக்கூடிய வாய்ப்பிருக்கின்றது. ஏனெனில், கனிந்த பழத்தை நீங்கள் பறிக்கவில்லை. எனவே, அது இப்போது அழுகிப்போய் விட்டது.

**சிறந்த அறுவடைக்கான நான்காவது ஆலோசனை: வளர இடம் கொடுங்கள்**

எம்மில் பெரும்பாலானோர் விடுகின்ற ஒரு முக்கியமான தவறுதான் பரந்த நிலப்பரப்பில் நட வேண்டிய ஒரு மரத்தை ஒரு குறுகிய சாடியில் வளர்ப்பதாகும். சவால்களிலிருந்தும் ஆபத்துக்களிலிருந்தும் தப்பிப் பிழைத்து, ஆழ வேரூன்றி, அகலக் கிளை பரப்பி ஒரு மரம் வளர்கின்றபோது அதனால் கிடைக்கின்ற பயனையும் அப்படி வளரக்கூடிய மரத்தை சாடியில் வைத்து அதன் வளர்ச்சிக்குத் தடை போடும்போது அதனால் கிடைக்கும் பயனையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

உறவுகள் என்று வருகின்றபோது அது ஒரு மிகப் பரந்த சாம்ராஜ்யம். அங்கு கணவனுக்கும் மனைவிக்குமிடையிலான உறவு மட்டுமல்ல, இன்னும் பல நூற்றுக்கணக்கான உறவுகள் இருக்கின்றன. அல்லாஹு த்தஆலா மனிதர்களை அடுத்தவர்களுக்குப் பயனளிக்கும் வகையிலேயே படைத்திருக்கின்றான். அன்பு, பாசம், அரவணைப்பு, உதவி, ஒத்தாசை என்பவையெல்லாம் கணவனுக்கும் மனைவிக்குமிடையில் மாத்திரமே இருக்க வேண்டும் என நினைக்கும் சகோதர, சகோதரிகள் எம்மத்தியில் இருக்கின்றார்கள். இது அத்தகையவர்களுக்கான செய்தி.

நீங்கள் உங்களது கணவனையோ அல்லது மனைவியையோ அவர் உங்களுக்கு மட்டுமே உரியவர். அவரால் ஏனைய குடும்ப உறுப்பினர்கள் எந்தப் பயனும் அடையக்கூடாது என்று நினைப்பவராக இருந்தால் உங்களுக்கு வாழ்க்கை பற்றிய மிக முக்கியமான பாடம் தெரியாது என்பதுதான் அர்த்தமாகும். உங்கள் வீட்டு முற்றத்தில் இருக்கின்ற மா மரத்தை முற்றத்திலேயே வைத்திருந்தால் அதனால் பலரும் பயனடைவர். ஆனால், நீங்கள்தான் அதிகம் பிரயோசனமடைவீர்கள். அதனையே நீங்கள் அது உங்களுக்கு மட்டுமே உரியது என்று வீட்டுக்குள் கொண்டுவந்து வைத்தால்???

நான்கு ஆலோசனைகளையும் நடைமுறைப்படுத்திப் பாருங்கள். அப்புறமென்ன உங்கள் வீட்டில் எல்லா நாளும் மகிழ்ச்சிதான். ■

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழியல்லாஹூ அன்ஹா)



## நேர் சிந்தனையும் கீழ்ப்படிதலும்

ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) இந்த திருமணத்திற்கு மறுப்புத் தெரிவித்தபோது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) "அவ்வாறு கூற வேண்டாம்; அவரைத் திருமணம் செய்து கொள்வீராக" என்றார்கள். அதற்கு ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) "அல்லாஹ்வுடைய தூதரே! நான் அதுபற்றி சிந்தித்துப் பார்க்கிறேன்" என்றார்.

▶ பாத்திமா ஸைனப் பின்த் பவாஸ்

அல்குர்ஆனில் பெயர் பதியப்பட்டுள்ள ஒரே யொரு நபித் தோழரான ஸைத் இப்னு ஹாரிதா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை ஜாஹிலிய்யாக் காலத்தில் உக்காஸ் சந்தையில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) விலை கொடுத்து வாங்கி, விடுதலை செய்து, தமது வளர்ப்பு மகனாகவுமாக்கி கண்ணியம் செய்தார்கள். மக்காவில் அவர் ஸைத் இப்னு முஹம்மத் என்றே அழைக்கப்பட்டார். ஸைத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் தந்தை 'கல்ப்' கோத்திரத்தைச் சேர்ந்த ஹாரித் இப்னு ஷுரஹ்பீல் என்பவராவார். அவரது தாய் 'பனூ மஆன்' கோத்திரத்தைச் சேர்ந்த ஸுஃதா பின்த் தஅலாப என்ற பெண்மணியாவார்.

ஸைத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு திருமணம் செய்துவைக்க முற்பட்டபோது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) தமது மாமியாரான உமைமா பின்த் அப்துல் முத்தலிப் அவர்களின் புதல்வி ஸைனப் பினத் ஜஹ்ஷ் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களை மணமகளாகத் தெரிவு செய்தார்கள். குறைஷிகளில் பனூ ஹாஷிம் கோத்திரத்தைச் சேர்ந்த அழகும் அந்தஸ்தும் நிறைந்த ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) ஏற்கனவே பல குறைஷி வாலிபர்கள் தன்னை திருமணம் செய்ய முன்வந்தும் மறுத்த நிலையில் தான் ஓர் உயர்குல ஆடவரையே மணமுடிக்கவுள்ளதாகக் கூறினார். ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) மட்டுமன்றி, அவரது குடும்பத்தினரும் இந்த திருமணத்திற்கு சம்மதிக்கவில்லை.

இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கிறார்: ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) இந்த திருமணத்திற்கு மறுப்புத் தெரிவித்தபோது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) "அவ்வாறு கூற வேண்டாம்; அவரைத் திருமணம் செய்து கொள்வீராக" என்றார்கள். அதற்கு ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) "அல்லாஹ்வுடைய தூதரே! நான் அதுபற்றி சிந்தித்துப் பார்க்கிறேன்" என்றார். இவ்வாறு அவர்கள் இருவரும் உரையாடிக் கொண்டிருக்கும்போது பின்வரும் வசனத்தை அல்லாஹ் இறக்கினான்:

"அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஒரு காரியத்தைப் பற்றி கட்டளையிட்டு விட்டால் அவர்களுடைய அக்காரியத்தில் வேறு அபிப்பிராயம் கொள்வதற்கு ஈமான் கொண்டுள்ள எந்த ஆணுக்கோ பெண்ணுக்கோ உரிமையில்லை. ஆகவே, அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவரேனும் மாறு செய்தால் நிச்சயமாக அவர்கள் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருக்கிறார்கள்." (33: 36)

பின்னர் ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) "அல்லாஹ்வுடைய தூதரே! நீங்கள் அவரை எனக்கு திருமணம் செய்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறீர்களா?" என்று கேட்க "ஆம்" என்றார் நபிகளார். அப்போது



noolaham.org | aavanaham.org

ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) "அப்படியானால் நான் அல்லாஹ்வின் தூதருக்கு மாறு செய்ய மாட்டேன். அவரை மணமுடிக்கிறேன்" என்றார். (தஃப்ஸீர் இப்னு கதீர்)

இப்னு ஸஅத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் கூற்றுப்படி, ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) "நான் அவரை அங்கீகரிக்க மாட்டேன். நான் பிறப்பில் குறைஷியர்களைச் சேர்ந்தவள்'' என்று ஆரம்பத்தில் மறுப்புத் தெரிவித் தபோதே வசனம் (33:36) இறங்கியது. பின்னர் ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) மட்டுமன்றி, அவரது முழுக் குடும்பத்தினரும் அதற்கு சம்மதித்தனர். முஜாஹித், கதாதா, இக்ரிமா (ரஹிமஹுமுல்லாஹ்) ஆகியோரும் மேற்கூறிய வசனம் ஸைத் (ரழியல்லாஹு அன்ஹு) மற்றும் ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) ஆகிய இருவரின் விடயமாகவே அருளப்பட்டது என்று கூறியுள்ளனர்.

இந்தத் திருமண பந்தத்தின் மூலம் அல்லாஹ்வுடைய தூதர் மனிதர்கள் அனைவரும் சம அந்தஸ்த்தில் உள்ளவர்கள். அவர்களது சிறப்பை வேறுபடுத்திக் காட்டுவது இறையச்சமும் நற்செயல்களுமேயாகும் என்ற அல்குர்ஆனின் கோட்பாட்டை வலியுறுத்த விரும்பினார்கள். அந்தத் தருணம்வரை விடுதலை செய்யப்பட்ட அடிமைகள் தங்கள் எஜமானர்களைவிட தாழ்ந்தவர்களாகவே கருதப்பட்டனர். இவ்வாறு அரபிகளின் வரலாற்றில் ஓர் இருண்ட பக்கம் தலைகீழாகப் புரட்டப்பட்டு ஒளிமயமான பக்கம் திறக்கப்படுவதற்கு முழுமையாகத் துணை செய்தார் ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா).

காலப்போக்கில் ஸைத் (ரழியல்லாஹு அன்ஹு), ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) ஆகியோருக்கிடையிலான இல்லற வாழ்வு மகிழ்ச்சிகரமானதாக இருக்கவில்லை. நபிகளாரின் நெருங்கிய, நேசத்துக்குரிய தோழர் என்ற வகையில் ஸைத் (ரழியல்லாஹு அன்ஹு) மீண்டும் மீண்டும் நபிகளாரிடம் வந்து தனது மனைவி பற்றி புகார் செய்ய ஆரம்பித்தார். அப்போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ஸைத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் ஸைனபை விவாகரத்துச் செய்யாமல் தொடர்ந்தும் மனைவியாக வைத்துக் கொள்ளுமாறு கட்டளையிட்டார்கள். ஏனெனில், அரபிகள் வளர்ப்பு மகனின் மனைவியை சொந்த மகனின் மனைவி போன்றே கருதி வந்தனர். எனவே, ஸைத் (ரழியல்லாஹு அன்ஹு) தனது மனைவியை விவாகரத்துச் செய்தால் அவ்விதவைப் பெண்ணை வளர்ப்பு மகனின் தந்தைக்கு திருமணம் செய்ய முடியாது என்பதே அறியாமைக்கால அரபிகளின் வழக்கமாக இருந்தது. ஸைத் (ரழியல்லாஹு அன்ஹு) விவாகரத்துச் செய்துவிட்டால் தாமே ஸைனபை மறுமணம் செய்ய வேண்டிவரும் என்று கருதிய நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களால் சமூகத்தின் விமர்சனங்களை அதிக காலத்திற்கு தாமதப்படுத்த முடியவில்லை.

"நபியே! எவருக்கு அல்லாஹ் அருள்புரிந்து நீரும் அவர் மீது அருள் புரிந்தீரோ அவரிடத்தில் 'நீர் அல்லாஹ்வுக்குப் பயந்து உம் மனைவியை விவாகரத்துச் செய்துவிடாமல் உம்மிடமே நிறுத்தி வைத்துக் கொள்ளும் என்று சொன்னபோது அல்லாஹ் வெளியாக்க இருந்ததை மனிதர்களுக்குப்பயந்து நீர் உம் மனதில் மறைத்து வைத்திருந்தீர். ஆனால், அல்லாஹ் அவன்தான் நீர் பயப்படுவதற்கு தகுதியுடையவன். ஆகவே, ஸைத் அவளை விவாக விலக்கு செய்து விட்ட பின்னர் நாம் அவளை உமக்கு மணம் செய்வித்தோம்." (33: 37)

இவ்வாறு அந்தப் பிழையான சித்தாந்தத்தையும் தகர்த்தெறிய அல்லாஹ் தன் தூதரையே தெரிவு செய்தான். இமாம் ஸைனுல் ஆபிதீன் அலீ இப்னு ஹுஸைன் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளிக்கையில் "ஸைனப் தம் மனைவிகளில் ஒருவராக வருவார் என்பதை அல்லாஹ் தன் தூதருக்கு உணர்த்தி விட்டான். ஆனால், ஸைத் நபியவர்களிடத்தில் முறைப்பாடு செய்ததும் அல்லாஹ்வை அஞ்சிக் கொண்டு அவருடன் வாழுமாறு கூறினார்கள். அவ்வேளையில் அல்லாஹ் "நான் ஸைனபை உமக்குத் திருமணம் செய்து வைக்க இருப்பதை அறிவித்திருந்தேன். ஆனால், நீர் ஸைத் விவாகரத்து செய்வதை தடுத்தபோது அல்லாஹ் வெளியாக்க இருப்பதை மறைத்து விட்டீர்'' என்று குறிப்பிடுகிறார்.

(இப்னுஜரீர்)

அல்லாமா ஆலூஸி (ரஹிமஹுல்லாஹ்) அவர்களும் இதுபோன்ற தொரு விளக்கத்தைக் கொடுத்துள்ளார்.

"ஒரு நல்லம்சத்தை நோக்கிய நகர்வைக் கைவிடுவதற்காக இது அல்லாஹ் வெளிப்படுத்திய அதிருப்தியாகும். அதாவது, நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ஸைதிடம் எதுவும் கூறாமல் அமைதியாக இருந்திருக்க வேண்டும்; அல்லது அவர் விரும்பியதை செய்யுமாறு கூறியிருக்க வேண்டும். நீர் ஸைனபைத் திருமணம் செய்வீர் என்று நான் அறிவுறுத்தி இருந்தும் ஏன் ஸைதிடம் மனைவியை வைத்துக்

**ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) அல்லாஹ்வுடைய தூதரின் ஏனைய மனைவிகளுக்கு மத்தியில் "உங்கள் அனைவரையும் உங்களுடைய குடும்பத்தினரே திருமணம் செய்து வைத்தார்கள். ஆனால், என்னை ஏழு வானங்களுக்கு அப்பாலிருந்து அல்லாஹ்வே மணமுடித்து வைத்தான்" என்று கூறினார்கள் என வந்துள்ளது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் என்று கூறினீர்." (ரூஹுல் மஆனீ)

ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) இத்தா காலத்தைப் பூர்த்தி செய்த பின்னர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) தம் நேசத்துக்குரிய ஸைத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களையே அனுப்பி திருமணம் பேசுமாறு கூறினார்கள். அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கிறார்.

ஸைத் (ரழியல்லாஹு அன்ஹு) சென்று "ஸைனபே! நான் உமக்கு நற்செய்தியுடன் வந்துள்ளேன். அல்லாஹ்வின் தூதர் உம்மைத் திருமணம் செய்வதற்காக என்னிடம் செய்தி அனுப்பினார்கள்" என்று கூறினார். அப்போது ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) "நான் இது பற்றி அல்லாஹ்விடம் முறையிடாமல் எதுவும் செய்ய மாட்டேன்" என்று கூறிவிட்டு தொழுகைக்காகச் சென்றார். அவ்வேளையில் *33: 37*வது வசனம் இறங்கியதும் நபியவர்கள் ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் வீட்டுக் கதவைத் தட்டாமலேயே உள்ளே நுழைந்தார்கள். (முஸ்லிம், அஹ்மத், நஸாஈ)

புகாரியின் அறிவிப்பில், ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) அல்லாஹ்வுடைய தூதரின் ஏனைய மனைவிகளுக்கு மத்தியில் "உங்கள் அனைவரையும் உங்களுடைய குடும்பத்தினரே திருமணம் செய்து வைத்தார்கள். ஆனால், என்னை ஏழு வானங்களுக்கு அப்பாலிருந்து அல்லாஹ்வே மணமுடித்து வைத்தான்" என்று கூறினார்கள் என வந்துள்ளது.

இந்தத் திருமணம் மூலம் அல்குர்ஆன் ஒரு புதிய கோட்பாட்டை முன்வைத்தது. ***"முஃமின்களால் சுவீகரித்து வளர்க்கப்பட்டவர்கள் தம் மனைவிமார்களை விவாகரத்துச் செய்துவிட்டால் அவர்களை வளர்த்தவர்கள் அப்பெண்களை மணந்து கொள்வதில் யாதொரு தடையுமிருக்கக் கூடாது என்பதற்காக இது நடைபெற்றே தீர வேண்டிய அல்லாஹ்வின் கட்டளையாகும்." (33: 37)***

அண்ணலாரின் இந்தத் திருமணம் அன்றிலிருந்து இன்றுவரை இஸ்லாத்தின் எதிரிகளால் கொச்சைப்படுத்தப்படுகிறது. அன்று இத்திருமணத்தை மொத்த சமூகமும் ஓர் அசாதாரண அம்சமாகவே நோக்கியது. முனாஃபிக்கள் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) தனது மகனின் மனைவியை மணந்துள்ளார் என்று கதை பரப்பினர். இந்தத் திருமணம் பற்றி விவரிக்கின்ற ஸூரா அஹ்ஸாபின் ஆரம்ப வசனங்களில் வளர்ப்புப் பிள்ளைகள் அவர்களது சொந்தத் தந்தையின் பெயராலேயே அழைக்கப்பட வேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ***"உங்களுடைய சுவீகாரப் பிள்ளைகளை உங்கள் புதல்வர்களாக அல்லாஹ் ஆக்கிவிட மாட்டான்... எனவே அவர்களை அவர்களின் தந்தையரின் பெயர்களைச் சொல்லி அழையுங்கள்." (33: 4-5)*** அதேபோன்று, இந்தத் திருமணம் பற்றிய முடிவுரையிலும் ***"முஹம்மத் உங்கள் ஆடவர்களில் எவருக்கும் தந்தையாக வரவில்லை" (33: 40)*** என்று குர்ஆன் விளக்குகிறது.

ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய மகனின் மனைவியல்ல; ஸைத் (ரழியல்லாஹு அன்ஹு) அவருடைய மகனுமல்ல; அவர் ஹாரிதின் மகன்.

அரபிகளின் சமூகத்தில் ஆழப் பதிந்து, நிலைபெற்று, அங்கீகாரத்தைப் பெற்றுள்ள ஒரு சிந்தனைப் போக்கை மாற்றிக் காட்டுவது நடைமுறையில் ஓர் இலகுவான காரியமல்ல என்பதை வரலாற்றைப் படிப்பவர்கள் எளிதில் விளங்கிக் கொள்வர். தனது இரு திருமண பந்தங்கள் மூலமும் வரலாற்றில் இருள் மண்டிக் கிடந்த இரு பக்கங்களை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்ட இறைத் தூதருக்கு தோள் கொடுத்தார் ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள். ■

Hotline: 077 ...

INSIGHT

Insight Job Bank

www.insightjobs.org

**Management Trainees WANTED**

Dynamic young Management Trainees (Male) are wanted

For **Business Enterprises**
**Education Institutions &**
**Community Based Organizations**

**Minimum Qualification**
Degree of a recognized university
Good personality, excellent PR and leadership skills
Good IT skills
Age below 25

Selected candidates will be provided a formal training leading to Diploma in Management conducted by the Insight Institute of Management & Technology

To apply please send your CV to
insightjobbank@gmail.com
within seven days



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم

# الكلية الإصلاحية العربية

# இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி - மாதம்பை

## DIPLOMA IN ARABIC & ISLAMIC STUDIES
## கற்கை நெறிக்கான புதிய மாணவர் அனுமதி - 2014

### கற்பிக்கப்படும் பாடங்கள்

- இக்கற்கை நெறியின் போது அல்குர்ஆன், ஹதீஸ், பிக்ஹ், அகீதா, அரபுமொழி, இஸ்லாமியக் கலைகள், ஆங்கில மொழி, தகவல் தொழில்நுட்பம், போன்ற பாடங்களுடன் G.C.E. உயர்தரப் பரீட்சைக்கான கணக்கீடு, வியாபாரக்கல்வி, பொருளியல் ஆகிய பாடங்களும் கற்பிக்கப்படும்.

**இக்கல்லூரியிலிருந்து 2013ம் ஆண்டு முதன் முறையாக G.C.E. (A/L) பரீட்சைக்கு வர்த்தகத்துறையில் தோற்றியோரில் 93% ஆனோர் சித்தியடைந்துள்ளனர்.**

### கற்கை நெறிக் காலம்

- மூன்று வருடங்கள் (3 years)

### அனுமதிக்கான அடிப்படைத் தகைமைகள்

- G.C.E. (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 5 பாடங்களில் C தரச்சித்தியுடன் தமிழ், உட்பட குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
- 1996/01/01ம் திகதிக்குப்பின்னர் பிறந்திருத்தல்.

### விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் Diploma என டைப் செய்து 0777345367 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு 20.04.2014ம் திகதிக்கு முன்னர் SMS பண்ணவும்.

மேலதிக விபரங்களுக்கு :

**ISLAHIYYH ARABIC COLLEGE**
Chandrik Silva Mawatha, Old Town, Madampe
Tel: 0773171718, 0775052735, 0715262026
Fax: 032 2247786 Email: islahiyyah@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்தின் வடுக்கள்!



ஒரு மறதியில் ஓராயிரம்
நினைவுகள் - அவனுக்கு
ஒரேயொரு நம்பிக்கையில்
ஒரு கோடி துரோகம் கண்டான்
ஒவ்வோர் இழப்பிலும்
பலமுறை இறந்து போனான்
கண்ணீர் கூட - அவனையே
விண்ணப்பம் செய்கிறது
தண்ணீர் வேண்டுமென...
புன்னகை, வாழ்க்கை
தொலை தூரம் நின்று
எட்டிப் பார்க்கிறது
புதைக்கப்பட்ட
மனித நேயம் - மீண்டும்
நிலத்தைப் பிளந்து
தளிர் விட்டு விருட்சமாகி
நிழல் தருமா..,? என்ற ஏக்கத்தோடு...
ஆனாலும்
ஆங்காங்கே தெரிவதெல்லாம்
இன்னும்- அக்கினியின்
அடையாளங்களே
வாழ்வளிப்பதாகக் கூறி
வாழ்வையழித்த- சோகம்
இறுதியாய் இழக்கக் காத்திருக்கும்
உடலையும் உயிரையும்
பிடித்துக் கொண்டு


காலம் தந்த காயத்தின்
வடுக்களோடு...வேறோர்
அகதி வாழ்வோடு
கரையொதுங்குகிறான்
மீண்டும்- மீண்டும் இழந்து
இறந்து போவதற்காய்...

**ஸுல்பிகா இத்ரீஸ்**
**களுத்துறை**

# ஓர் ஒலிவ் மரத்தின் ஒப்பாரி

யூதனே!
மனிதர்களை மாய்த்தாய்
மழலைகளைக் கொன்றாய்
மழை நீர் தாங்கிகளையும் தகர்த்தாய்
மரங்களைக் கூட விட்டு வைக்க மாட்டாயா?

முஸ்லிமின் சொத்து
உனது பூர்வீகச் சொத்தென
மரங்களையும் திருடுகிறாய்
திருட்டைப் புனிதமாக்கிய உன் மூட புனிதர்கள்
மறந்து விட்டனரோ
நானல்ல உன் நண்பன்
கர்கத்தே உன் நண்பனென




உனக்காய் காய்ப்பதை விட
உன் ஷெல் மழையில் நானும்
நனைந்திருக்கக் கூடாதா!?
உனக்காய் உயிர்த்திருப்பதை விட
உன் பீரங்கிக்கடியில் நானும்
நசுங்கியிருக்கக் கூடாதா!?

பொறுத்திரு ஒரு நாள் வரும்
நானும் குரல் கொடுப்பேன்
என் பின்னால் ஒரு யூதன்
ஒளிந்திருக்கின்றானென...

**இம்தாத் பசர், புத்தளம்**

# எப்போது புரியும்?



அற்ப சுகங்கள்
நிறைந்த உலகில்
எம் நினைவுகள்கூட
நிலைப்பதில்லை

வாழ்வின் மணித்தியால
ஞாபகங்கள் கூட
சொற்ப கனவுகளாய்...

சொற்ப நொடிப் பொழுது கூட
திரும்பி வராத
மாய உலகில்
மணிக்கணக்காய்...


செல்போன்களின்
துணை தொட்டு
அந்நிய உறவுகளோடு
அருவெறுப்பின்றி...

மாநபி சொன்னதை
விளங்கிட மறுப்பது
உன் கேள்விப் புலனது
கேள்வியற்றுப் போனதுவோ!

**அரபா ரஸ்ஸாக் - புத்தளம்**

# ஸந்தூக்

ஏசி போட்ட காரில்
போன அந்தக் கல்பு
இலவசமாய் மஹ்ஷரின் 'வீசா'
வாங்கிச் செல்கிறது
இலேசாக தென்றல் வருட
சந்தூக்கில்...!



தோள் கொடுக்க
பலரும் காத்திருக்க
மையித்தாய் கபன்
அணிவிக்கப்பட்டு
கவனமாய் வைக்கப்படுகிறது
கடைசி நேர சந்தூக்கில்...!

எரிபொருள் செலவில்லை
எட்டி கை நீட்ட
எவருமில்லை
'ட்ரபிக் ஜேம்' அங்கில்லை
'சிக்னலுக்கு' காத்திருக்க
தேவையில்லை சந்தூக்கில்...!

பல விழிகள் கசிய
சில உதடுகள் இறைஞ்ச
நாலைந்து பேர்
தோளில் சுமக்க
நகர்கிறது மெதுவாக
மண்ணறை நோக்கி
சந்தூக்கில்...!

**நதா அக்ரம்,**
**கெகுணகொல்ல தேசிய பாடசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனின் நீதி எமக்கே சாத்தியம்

அரசியல் சூதாட்டத்தில் இறைவனையும்
இணைத்து விட்டனர்
சாலைநெடுகிலும் அணிதிரண்ட
இளைஞர் படையணியோ
தொண்டை கிழிய கோஷமெழுப்புகிறது
"நாரே தக்பீர் அல்லாஹு அக்பர்"

ஈமானை விற்று வழங்கிய
வக்கற்ற வாக்குறுதிகளிலும்
மேடைப் பேச்சுகளிலும்
சலித்துப்போன சனங்களிடம்
வாக்குகளை வேட்டையாட
சிறு தீனியே அடிக்கல் நாட்டு விழாவாம்.

இனி அடுத்த தேர்தலின்
போதுதான்
அந்தப் பக்கம் வருவாராம் தலைவர்
மறைந்துபோன விடிவெள்ளியின்
பெயரை விற்று இலாபம் தேடும்
தந்திரமான கூட்டம் அது!
மறுமையை மறந்து இம்மையில்
இன்பம் தேடும்
இத்துப்போன கூட்டம் அது!
மறை வழங்கும்
மரண எச்சரிக்கையை மறந்து
பெரும் புள்ளிகளிடம் பேரம் பேசும்
பொல்லாத கூட்டம் அது!

சிவப்புக் கயிற்றில் சிக்குண்டு
மஞ்சள் காமாளை நோயினால்
அவதியுறும்
மக்களின் மௌனக் குரலுக்கு
அல்லாஹ் ஒருவனே துணை நமக்கு!

துஆ எனும் ஆயுதம் தரித்து
இறைவனிடம் இறைஞ்சுவோம்!
இன்ஷா அல்லாஹ்
இறை நீதி எமக்கே சாத்தியம்!

**இர்பியா ஷரீப்**
**இலங்கை சட்டக் கல்லூரி**

# உயிர்ப்பிப்போம்!

நெறிகளில் நேர்வழி சென்று
நீதியை வாழ்வில் கொண்டு
அறியாத சமூகத்திற்கு
அறிவு புகட்டி நின்று
பெரியதொரு மாற்றம் கண்ட
பெருமானாருக்கு ஸலாம் சொல்வோம்!

உதயத்தின் ஒவ்வொரு பொழுதும்
உயர்வானவன் அல்லாஹ் தந்த
வேதமாம் அல்குர்ஆனின்
வழியிலே செல்ல வேண்டும்
அதுதான் வாழ்க்கை என்ற
அண்ணலாருக்கு ஸலவாத் சொல்லுவோம்!

இறைவனின் தூது வர்களில்
இறுதியாய் வந்த நபியின்
குறை விலாத கருணையாலே
கூடிய கூட்டத்தோடு வணங்கும்
இறைவன் ஒருவன் என்ற
இனியவர்க்கு துஆச் செய்வோம்!

சோதனைகள் பலகண்ட போதும்
சோர்ந்திடாது பொறுமையாகி நபியின்
சாதனைதான் இஸ்லாம் நாளும்
சகத்தினிலே வளரக் கண்டோம்
ஆதலாய் சேர்ந்து ஒன்றாய்
அவ்வல் கலிமாவை உயிர்ப்பிப்போம்!

**ஏ. எம். கஸ்புள்ளா**
**சின்னக் கிண்ணியா**

# அடியானே அறிந்துகொள்

பணம் படைத்தவன்
அனுபவித்துச் செல்லவும்
பட்டினி கிடப்பவன்
யாசித்துவிட்டு செல்லவுமல்ல வாழ்க்கை
படைக்கப்பட்ட பணியறிந்து - நீ
பயன்தரும் பலரையும் தீனுக்காக
பயிற்றுவிக்கும் புனிதனாக வேண்டும்
பண்புடைய அடியானாயும்
பலமுள்ள சீரிய சிற்பியாயும்
பாரினிலே பரிணமித்து - நாளைய
பண்பட்ட சமூகத்தின் - இன்றைய
பயிற்றுவிப்பாளனாக நீ மாற வேண்டும்!

சாதித்த சாதனைகள் பலதோடு
உருவம் அமைத்துனக்கு
உயிர் கொடுத்தனுப்பிய - உன்
படைப்பாளனை சந்தித்து - நீ
சுவனத்து சுபசோபனம் பெற வேண்டும்

மீண்டுமில்லை வாழ்க்கை வரம்
ஒருமுறைதான் மனிதப் பிறவி
உணர்ந்துழைக்க எழுந்திடு
உனக்கிதற்கு அவகாசமோ
இறுதி மூச்சு வரைதான்!

**ஷபீஹா ஷேக் தாவூத்**
**ஆஇஷா சித்தீக்கா கலாபீடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**CCNA**
200-120
Cisco Certified Network Associate
Real Cisco Routers for Practicals

**CCNP**
Route / Switch / T-shoot
Cisco Certified Network Professional

**CCNA**
Voice
Cisco Certified Network Associate
Cisco IP Phones for Practicals

**CCIE**
CISCO CERTIFIED CCIE Training
Routing & Switching
Voice By
Mr. Harith Kariapper
#8661 (Quadruple CCIE)
Winnet (UK & Canada)

**PHP MySQL**
For Software / Web Developers

Special ONEDAY Training

**CCTV Camera**
Installation & DDNS Configuration

**PABX Intercom**
Cabling & Intercom Connecting

**Copper & Fiber**
Network Cabling & Management

Hardware Engineering
Network Administration
Entry Level Training for CCNA & MCSA

**MCSA 2012**
Server 2012
70-410 70-411 70-412

**MCSA Windows 8**
70-687 70-688

Special Discounts on Group Registration

4 DAYS Residential Workshop
Workshop Hotline - 0777-825789
Food & Accommodation Provided

- Fiber & Copper Cabling by 3M Lanka
- CCTV Camera with DDNS (Remote Access)
- PABX Intercom System with Cabling
- Wireless & Security
- Access Control & Alarm Systems

Microsoft Partner · cisco · Microsoft · vmware · STORAGE + · MySQL

ONE PLACE FOR YOUR PROFESSIONAL CERTIFICATIONS

மிகச்சிறந்த தொழிற்கல்வியினைப் பெற உள்ள ஒரேயொரு நிறுவனம்

**LOCATIONS**
We have a Nation wide branch network. You can join your nearest Branch.

**LAB FACILITIES**
Our Labs are fully equipped with real equipment. You can get a real environment experience.

**LECTURE PANEL**
Our lectures are highly qualified and industrial experienced.

**LOWEST CHARGES**
Our course fees structures are less but high quality training

**WinSYS NETWORKS®**
High-Tech Computer Training & Consulting Centre!

Address : 14. Schofield Place, Kollupitiya, Colombo-03
Telephone : 011-2589567 011-2589568
Online : www.winsys.lk info@winsys.lk

BRANCHES
KANDY : 0777-807630
COLOMBO : 0777-259927
BATTICALOA : 0777-832871
JAFFNA : 0777-825789




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Graphic Designing

Total Training of Creating Quality Graphics Using Latest Designing Software

Adobe

- Adobe Photoshop
- Adobe Illustrator
- Adobe InDesign
- CorelDRAW

- All the softwares & Tutorials will be Provided
- All the Subjects will be 100% Practicals
- Individual Attention to all the Students
- Individual Computers will be provided

CorelDRAW X4

■ Course Fee:- 9500/=

## Web Designing

Total Training of Creating Attractive Websites Using the Latest Softwares

- Adobe Photoshop
- Adobe Dreamweaver
- Flash Animations
- HTML & PHP (Basics)
- Domain Registration
- Uploading Website

■ After the training you will be able
■ to create your own website & Publish

■ Course Fee:- 15000/=

## AutoCAD 2D & 3D Drafting

### 2D Drafting

- Introduction to AutoCAD
- Toolbars, Menus, and Dashboard
- Understanding the Drafting Tools
- Drawing 2D Objects
- Text Styles
- Editing with the Modify Panels Tools
- Dimensions and Tolerances
- Getting Organized with Layers
- Create and Use Blocks
- Hatches, Fills and Wipeouts

■ Course Fee:- 16500/=

### 3D Drafting

- Create 3D Models
- Modify 3D Solids and Surfaces
- Create Sections and 2D Drawings from 3D Models
- Laying out and Printing Your Drawing
- Plot Drawing

## Web Development

- HTML
- CSS3
- JavaScript
- Jquery
- Server-Side Programming
- AJAX
- PHP
- MySQL

HTML 5 CSS 3

This Training Covers Programming for Web & Software Deverlopers

MySQL jQuery AJAX

■ Course Fee:- 19900/=

## Office Applications

Office

- MS Word
- MS Access
- MS Excel
- MS PowerPoint

Internet & E-mail

■ Course Fee:- 7500/=

**E-win NETWORKS**

524, Peradeniya Road, Kandy

- Contact Us -

Tel : 081-2203786
Mob : 0777-047708
facebook.com/ewin.net
twitter.com/ewinnetworks

www.ewin.lk

HOTLINE

0777-807630

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

▶ அஷ்ஷெய்க் எஸ்.எச். இஸ்மத் அலி (நளீமி)

# குரோதம்
## எனும் கொடிய நோய் அழிய...

"அரபுத் தீப கற்பத்தில் (அல்லாஹ்வை) தொழுபவர்கள் தன்னை வணங்குவார்கள் என்ற நம்பிக்கையை ஷைத்தான் இழந்து விட்டான். எனினும், (தொழுகின்ற) அவர்களிடையே குரோதம் வளர்த்து பிளவை ஏற்படுத்தும் முயற்சியில் அவன் நம்பிக்கையிழக்கவில்லை." (முஸ்லிம்)

இந்த நபிமொழி, முஸ்லிம் சமூகத்திற்கெதிராக ஷைத்தான் பயன்படுத்தும் அவனது வல்லமை மிக்க ஓர் ஆயுதத்தை சித்திரிக்கின்றது. அவன் அவர்களுக்கெதிராகப் பயன்படுத்தும் அனைத்து ஆயுதங்களும் பயனற்றும் போனாலும், அவன் நம்பிக்கை இழக்காமல் பயன்படுத்துவதற்கென வைத்திருக்கும் ஒரே ஆயுதம் அது மட்டுமே. அதுதான் 'குரோதம்'

முஸ்லிம் சமூகத்தை ஒன்றுபடுத்த முடியாதா? என்று ஏங்குபவர்களுக்கு இந்த நபிமொழி ஒரு நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தலாம். ஷைத்தான் குரோதங்களாலும் பகைமைகளாலும் இந்த சமூகத்தை நாசப்படுத்தி விடுவானே. அதன் பின்னர் ஒன்றுபடுத்துவதற்கு சமூகத்தில் எதுதான் மிஞ்சியிருக்கப் போகிறது? என்ற ஆதங்கம் அவர்களை வாட்டலாம். இருப்பினும் அது உண்மையல்ல. மனித, ஜின் வர்க்கங்களிலிருக்கும் ஷைத்தான்கள் குரோதம் வளர்ப்பதில் மும்முரமாக ஈடுபடும்போதுதான் சமூகம் ஒற்றுமையின்பால் மீளுகிறது. காரணம், குரோதத்தின் தீய விளைவுகள் சமூகத்தின் கண்களுக்குப் புலப்படுவது அப்போதுதான். குரோதத்தின் கோரமான விளைவுகளைக் கண்கூடாகக் காண்பவர்கள் அவற்றிலிருந்து சமூகத்தைப் பாதுகாக்க, முன்பிருந்ததை விட மும்முரமாக ஈடுபடும் நிலை அப்போது உருவாகின்றது.

அது மட்டுமல்ல, இவ்வாறான சந்தர்ப்பங்களிலேயே குரோதம் வளர்ப்பவர்களையும் சமூகம், இனங்கண்டு கொள்ளும் நிலை தோன்றுகின்றது. குரோதம் வளர்ப்பவர்கள் பயனுள்ள எந்தப் பணியையும் சமூகத்தில் செய்வதில்லை. அவர்களிடம் தெளிவான கொள்கைகள் இல்லை; திட்டங்கள் இல்லை; இலக்குகள் இல்லை. சமூகத்தின் இன்றைய சவால்களை நாளைய சாதனைகளாக மாற்றுவதற்கான வழிகள் அவர்களுக்குத் தெரியாது; இனங்களுக்கிடையில் நல்லிணக்க சூழலை ஏற்படுத்த வேண்டிய ஒரு காலப்பகுதியில் சமூகத்தினுள்ளேயே அவர்களால் ஒரு சுமுகநிலையைத் தோற்றுவிக்க முடியாத பரிதாபத்தில் அவர்கள் இருக்கிறார்கள். அறிவு ரீதியாக எதனையும் அணுகத் தெரியாது. பண்பாடாக விவகாரங்களைக் கையாளத் தெரியாது. எப்போதும் உணர்ச்சிக் கொந்தளிப்புகளுக்கு மத்தியிலேயே இவர்கள் வாழ்கிறார்கள். பிறரையும் உணர்ச்சிகளுக்குள்ளாக்கிப் பார்ப்பதில் அவர்களுக்கு ஓர் அலாதியான பிரியமும் உண்டு.

அது மட்டுமல்ல, குரோதம் வளர்ப்பவர்களது இயல்பும் மாற்றமடைகின்றது. அவர்களது அறிவு மங்கி, உணர்ச்சிகளும் வெறிகளும் உச்சமடைகின்றன. எதைப் பேசுகிறோம், எதை எழுதுகிறோம், என்ன செய்கிறோம் என்பது அவர்களுக்கு விளங்குவதில்லை. மக்களின் காதுகள் கேட்க விரும்பா தவற்றை மக்களின் உள்ளங்களால் ஜீரணிக்க முடியாதவற்றையும் அவர்கள் வீராவேசத்தோடு பேசிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் பேசப் பேச... அவர்களது வைராக்கியம் கூடிக்கொண்டே செல்கிறது. எனவே கண், மண் தெரியாமல் அவர்கள் பேச ஆரம்பித்து விடுவார்கள்.

குரோதம் வளர்ப்பவர்களிடம் காணப்படும் மற்றோர் இயல்பு இதனைவிட மோசமானது. சமூகம் நன்றாக இருப்பதை அவர்கள் விரும்புவதில்லை. நல்ல பணிகளைச் செய்பவர்களைஅவர்களால் சகித்துக் கொள்ள முடிவதில்லை. நல்ல பல மாற்

**இல்லாததைப் பேசுவதில் இவர்களுக்கு அலாதியான தொரு விருப்பம் இருக்கும். கையில் குடை வைத்திருந்தால் துவக்கு வைத்திருப்பதாகக் கூறுவார்கள். கையை உயர்த்தினால் வாளை ஓங்கியதாகக் கற்பனை செய்வார்கள். பிளவுபடுத்துபவர்களை உத்தமர்கள் என்பார்கள். ஒன்றுபடுத்துபவர்களைக் காடையர்கள் என்று கூறுவார்கள். எதிரிகளைக் கண்டுகொள்ளவே மாட்டார்கள்; நண்பர்களாக இருக்க வேண்டியவர்களை வலிந்து சிரமப்பட்டுப் பகைவராக்கிக் கொள்வார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றங்கள் நடைபெற்றுள்ள ஒரு சூழல் அவர்களது மனதுக்கு ஒவ்வாமை மிக்கதாகவே இருக்கிறது. அத்தகைய ஒரு சூழலில் கெட்டவற்றை விதைத்து அந்த சூழலைக் கெடுத் துவிடவே அவர்கள் ஆசைப்படுகின்றனர். அவ்வாறு ஒரு சூழலை நாசப்படுத்தும் வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டிவிட்டால் அவர் கள் அதன் மூலம் பேரானந்தம் அடைகின்றனர். எனினும், அந்த ஆனந்தம் நீண்ட நாட்கள் அவர்களோடிருப்பதில்லை. காரணம், எதையும் தொடராக அனுபவிக்க முடியாத ஒரு குரூர சஞ்சலம் அவர்களது உள்ளத்தை வாட்டி வதைக்கின்றது.

குரோதம் வளர்ப்பதனால் தங்களுக்கு ஏற்படுகின்ற இந் தப் பாதிப்பையும் பரிதாபத்தையும் உணராத அப்பாவிகள்தான் குரோதத் தீயில் வெந்து கொண்டிருப்பவர்கள். மக்கள் இத்தகையவர்களை ஒன்றில் ஏளனத்தோடு பார்ப்பார்கள் அல்லது பரிதாபத்தோடு பார்ப்பார்கள். பலர் இத்தகைய வர்களைக் கண்டு கொள்வதே இல்லை. மிகச் சிலர்தான் இவர்களைப் பீடித்திருக்கும் தீங்குகளிலிருந்து இவர்களைப் பாதுகாக்குமாறு அல்லாஹ்விடம் பிரார்த்திப்பார்கள்.

இல்லாததைப் பேசுவதில் இவர்களுக்கு அலாதியான தொரு விருப்பம் இருக்கும். கையில் குடை வைத்திருந்தால் துவக்கு வைத்திருப்பதாகக் கூறுவார்கள். கையை உயர்த்தினால் வாளை ஓங்கியதாகக் கற்பனை செய்வார்கள். பிளவுபடுத்து பவர்களை உத்தமர்கள் என்பார்கள். ஒன்றுபடுத்துபவர் களைக் காடையர்கள் என்று கூறுவார்கள். எதிரிகளைக் கண்டுகொள்ளவே மாட்டார்கள்; நண்பர்களாக இருக்க வேண்டியவர்களை வலிந்து சிரமப்பட்டுப் பகைவராக்கிக் கொள்வார்கள்.

இது மட்டுமா? தனி மனிதர்களை வீதிக்கு இழுத்து வந்து, அவர்கள் மீது சேறு பூசி, அவர்களது உருவத்தை அசிங்கப்ப டுத்தி, வேறு உருவங்கள் செய்து காட்டுவதில் அவர்களுக்குக் கொள்ளை விருப்பம். எனினும் பரிதாபம், அவ்வாறெல்லாம் செய்த பின்னும் அவர்களது உள்ளங்களில் இருக்கும் குரோ தத் தீ அணைவதில்லை. மாறாக, பேரிரைச்சலோடு அது மேலும் உத்வேகமெடுத்து எரிந்து கொண்டே இருக்கிறது.

அந்தக் குரோதத் தீ எரிந்து கொண்டே இருப்பதனால் அதன் சூடு தாங்காமல் அவர்கள் மற்றுமொரு தவறைச் செய்கிறார்கள். அதாவது, அவர்கள் அறியாமலே தமது கருத்துக்களுக்கெதிராக செயல்பட்டு அவர்கள் மக்களிடம் மாட்டிக் கொள்கிறார்கள். அதன் காரணமாக அவர்களது உண்மை நிலை எல்லோருக்கும் தெரிய வருகின்றது.

ஆடையில் தீ பற்றினால் சூடு தாங்காமல் ஓடும் மனிதன் தீயைத் தன்மீது வேகமாகப் பரவச் செய்து தன்னை அழித் துக் கொள்வது போல உள்ளத்தில் பற்றிக் கொண்ட தீயின் சூடு தாங்காமல் இத்தகையோர் இதே தவறைச் செய்து தம்மைத் தாமே நாசத்தில் இட்டுக் கொள்கின்றனர்.

ஆக, குரோதம் வளர்ப்பவர்கள் தங்களுக்குத் தாங்களே அநீதியிழைப்பதை விட உலகில் அதிகமாக வேறு ஒன்றையும் செய்துவிடுவதில்லை.

இவர்கள் உண்மையில் பரிதாபத்திற்குரியவர்கள். இவர்கள் இந்நிலைக்குள்ளாவதற்கு பல்வேறு சமூக, குடும்பப் பின்னணிகள் காரணமாக இருக்கலாம். அந்தக் காரணங்களை இனங்கண்டு இத்தகையவர்களை சிறுவயதிலேயே உளவள ஆலோனைகளுக்கும் சிகிச் சைக்கும் உட்படுத்தா விட்டால் பின்னர் இவர்கள் சமூகத்தில் சீர்கேடுகளைத் தோற்றுவிப்பவர்களாக மாறுகின்றனர். அத்தகைய காரணிகள் சிலதை இந்தத் தலைப்பில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகின்றேன்.

*01.* தனக்கு அவசியமானது என ஒருவர் கருதும் ஒரு பொருள், தன்னிடம் இல்லாத நிலையில் பிறரிடம் இருப்பதைக் காண நேர்ந்தால் அவரால் அதனை சகிக்க முடியாமல் போகிறது. அப்போது இந்தக் குரோதத் தீ அவரது உள்ளத்தில் கொழுந்து விட்டெரிகிறது. அந்தப் பொருள் பணமாக இருக்கலாம், அறிவாக இருக்கலாம், அழகாக.... அந்தஸ்தாக.... மார்க்க விளக்கமாக... சமூக சேவையாக... சமூக செல்வாக்காக... நல்லவர்கள், பெரியவர்கள் வழங்கும் நற்சான்றுகளாக... அல்லது சிறிய, பெரிய வேறு எந்தக் காரணியாகவும் இருக்கலாம். குறிப்பிட்ட பொருள் தன்னிடம் இல்லாததையும் வேறு ஒருவரிடம் இருப்பதையும் தொடர்ந்து அவதானித்து வருகின்றபோது உள்ளத்தில் சிறிது சிறிதாக சேர்ந்து வளரும் ஆற்றாமையே நாளடைவில் குரோதமாக வளர்ந்து தீயாக சுட்டெரிக்கின்றது.

*02.* குடும்பத்திலோ அல்லது பாடசாலையிலோ சமூகத்திலோ பாராபட்சமும் அநீதியும் இழைக்கப்பட்ட நிலையில் விரக்தியும் வெறுப்புமடைந்த ஒருவர் இந்தப் பாதிப்புக்குள்ளாகிறார். அவர் தனது உள்ளத்தில் அடக்கி வைத்திருக்கும் ஆற்றாமைகளும் குமுறல்களும் நாளடைவில் ஒரு குரோதமாக மாறி அது அவரையும் அவரைச் சூழ இருப்பவர்களையும் தாக்கும் நிலை உருவாகின்றது.

*03.* நீண்ட காலமாக அன்பில்லாத... அடக்குமுறை நிறைந்ததொரு சூழலில் வளர்ந்தாலும் அந்த சூழலால் ஏற்படும் பாதிப்புக்கள் உள்ளத்தில் தொடர்ச்சியாகப் பதிந்து இறுதியில் குரோத மனப்பான்மை வளர்வதற்கு ஏதுவாக அமைந்து விடுகின்றது.

குரோதங்களை வளர்க்கும் இவ்வாறான காரணிகள் நிறைந்து காணப்படும் ஒரு சூழலில் உள்ளங்கள் பழு தாகாமல் பாதுகாப்பது ஒரு பெரும் போராட்டமாகும். ஒவ்வொரு குடும்ப, நிறுவன மற்றும் சமூக சூழலிலும் உள்ளங்களைப் பாதுகாக்கும் இஸ்லாமிய வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வு பரவலாக்கப்படா விட்டால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொறாமை கொண்டு வஞ்சம் தீர்க்க முனைதல். முடியாதபோது குறிப்பிட்ட நபரின் துன்பத்தில் இன்பம் காணுதல் அல்லது அவரது நல்ல நிலையைக் கண்டு மனம் வெதும்புதல்.**

இந்நிலை மேலும் மோசமடையலாம்.

பாதிக்கப்பட்ட உள்ளங்கள் இவ்வாறு பழுதடைந்திருப்பதற்கான அறிகுறிகள்:

மேலே கூறப்பட்டது போன்ற காரணிகளால் வெறுப்பும் குரோதமும் வளர்ந்த உள்ளங்கள் பழுதடையும்போது அவற்றில் தேக்கிவைக்கப்பட்டிருக்கும் குரோதமும் பகையும் ஏதாவது ஒரு வழியில் வெளியேற முற்படுகின்றன. அவ்வாறு வெளியேறும் வழிகளாவன:

*01.* புறம் பேசுதல், கோள் மூட்டுதல், அவதூறுகளைப் பரப்புதல், அபாண்டங்களை சுமத்துதல்.

*02.* யார் மீது குரோதம் வருகிறதோ அவரது ஆளுமையை மிக மோசமாக சித்திரித்து அவரிடமிருக்கும் நல்லம்சங்களைக் கொச்சைப்படுத்தி தன்னைப் போன்ற நோயுள்ள உள்ளங்களுக்கு அவரது படத்தை உருக்குலைத்துக் காட்டுதல்.

*03.* யார் மீது குரோதம் வெளிப்படுகிறதோ அவரது விவகாரங்களைத் துருவித் துருவி ஆராய்வதிலும் அவரைப் பற்றிய தப்பெண்ணங்களை வளர்ப்பதிலும் ஈடுபாட்டை அதிகரித்தல்.

*04.* பொறாமை கொண்டு வஞ்சம் தீர்க்க முனைதல். முடியாதபோது குறிப்பிட்ட நபரின் துன்பத்தில் இன்பம் காணுதல் அல்லது அவரது நல்ல நிலையைக் கண்டு மனம் வெதும்புதல்.

*05.* ஒரு முஸ்லிம் என்ற வகையில் செய்ய வேண்டிய சிறிய கடமைகளைக்கூடப் புறக்கணித்தல். புன்முறுவல், சிரிப்பு, ஸலாம் போன்ற சிறிய கடமைகளைக்கூட புறக்கணிக்கும்போது வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்தல், வாக்குறுதியைக் காப்பாற்றுதல் போன்ற பெரிய கடமைகளுக்கு என்னவாகும்?

**நிவாரணம்**

மேலே கூறப்பட்ட அறிகுறிகள் தென்பட்டால், உரியவர்கள் உடனடியாகத் தமது உள்ளங்களைக் குரோதம் என்ற நோயிலிருந்து பாதுகாக்கும் முயற்சியில் கவனம் செலுத்திட வேண்டும். அந்த முயற்சியை பின்வரும் வழிகளில் ஒருவர் மேற்கொள்ள முடியும்.

*01. அல்லாஹ்வை மறைக்கும் திரையை அறிதல்:* மனித உள்ளத்தை அல்லாஹ்வை விட்டும் மறைக்கின்ற திரையாகவே மனோ இச்சைகள் இருக்கின்றன. குரோதம், பகை என்பன அந்த மனோஇச்சைகளில் மிகவும் கொடியவையாகும். இமாம் இப்னுல் கையிம் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

"உள்ளம் இறை வழிகாட்டல்களால் அறிவுறுத்தப்பட்டு, நல்ல சிந்தனைகளால் போஷிக்கப்பட்டு குரோதம், பகை போன்றவற்றிலிருந்து தூய்மைப்படுத்தப்பட்டால் அது அதிசயங்களைக் காணும் அறிவு ஞானம் ஊட்டப்பட்ட உள்ளமாகத் திகழும்.

*02. நற்செயல்களை அழிக்கும் கிருமியை உணர்தல்:* நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

"மூன்று நபர்களது தொழுகைகள் அவர்களது தலைகளுக்கு மேல் ஒரு சாண் அளவுகூட உயர்த்தப்பட மாட்டாது.

*1.* மக்கள் விரும்பாத நிலையில் அவர்களுக்கு இமாமாக நின்று தொழுகை நடத்துபவர்.

*2.* கணவன் கோபப்பட்ட நிலையில் இரவைக் கழித்த மனைவி

*3.* குரோதங்களால் பிரிந்து போன இரு சகோதரர்கள்."
(இப்னு மாஜா)


மற்றொரு தடவை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஸஹாபாக்களைப் பார்த்து கேட்டார்கள். "தொழுகை, நோன்பு, ஸகாத் என்பவற்றை விட அந்தஸ்தில் கூடிய ஒன்றை நான் அறிவிக்கட்டுமா?" அதற்கு நபித் தோழர்கள் "ஆம்" என்றார்கள். அப்போது "அதுதான். "இருவருக்கிடையில் பிணக்கைத் தீர்த்து வைத்தல்" என்று கூறிவிட்டு "இருவருக்கிடையில் உறவு கெட்டு (பிணக்கு அதிகரித்து) விடுதல் மழித்து விடும். (எனினும்) அது முடியை மழிப்பதில்லை. மார்க்கத்தையே மழித்து விடும்'' என்றார்கள். (அத்திர்மிதி)

இந்த இரு நபிமொழிகளும் குரோதத்தை அகற்றி உள்ளம் தூய்மைப்படுத்தப்படுவதன் அவசியத்தை வலியுறுத்துவது வெளிப்படை... எனவே அந்த முயற்சியில் நோய் கண்டவர் பின்னிற்கக் கூடாது.

*03.* குரோதம் நீங்கினால் சுவனம் செல்லலாம் என்பதை மனதில் கொள்ளல்: நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் ஒரு முறை வினவப்பட்டது. "மனிதர்களில் சிறந்தவர் யார்?" அதற்கு நபியவர்கள் "மஹ்மூம் எனும் இதயமுடையவர் உண்மை மிக்க நாவையுடையவர்" என்றார்கள். "மஹ்மூம் எனும் இதயமுடயவர் யார்?" என நபித் தோழர்கள் வினவினார்கள். அதற்கு நபியவர்கள் "அவர்தான் தக்வா எனும் இறையுணர்வு மிக்கவர். பாவம், அத்துமீறல், குரோதம், பொறாமை என்பன எதுவுமற்ற தூய்மையான உள்ளம் கொண்டவர்" எனப் பதிலளித்தார்கள்."
(இப்னு மாஜா)

குரோதம், பகை, பொறாமை போன்ற கொடிய உள நோய்களிலிருந்து ஒவ்வொருவரும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள அல்லாஹ் அருள் புரிவானாக!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



▲ அஷ்ஷெய்க் கியாஸ் முஹம்மத் (நளீமி) M.A விரிவுரையாளர் - ஜாமிஆ ஆஇஷா ஸித்தீக்கா

# இறை இல்லங்களோடு உள்ளங்களை இணைப்போம்!

**காற்று வேகமாக வீசும்போது கூட தூதர் (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தொழுகைக்கு விரைவார்கள். பயணங்களை முடித்து விட்டுத் திரும் புகின்றபோதும் நபியவர்கள் முதலாவதாக மஸ்ஜிதுக் குச் சென்று, பின்னரே தனது குடும்பத்தாரிடம் செல் வார்கள்.**

மறுமையில் அர்ஷின் கீழ் நிழல் பெறும் ஏழு கூட்டத்தாருள் ஒரு பிரிவி னர், மஸ்ஜிதுகளுடன் நெருக்கமான உறவைக் கொண்ட மனிதர்கள். அவ் வாறே மஸ்ஜித்களுடன் அதிகம் தொடர் புடைய மனிதர்களின் ஈமானுக்கு நீங்கள் சான்று பகருங்கள் என்றும் நபி (ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

மஸ்ஜித்கள் அல்லாஹ்வின் இல்லங் கள்; அவனுக்கு விருப்பமான இடங்கள். அதில் நுழைபவர்கள் அல்லாஹ்வின் விருந்தாளிகள்.

அல்லாஹ்வின் இல்லங்களில் இறை அருள் நிரம்பி இருக்கும். அங்கு செல் லும் விருந்தாளிகளுக்கு இறையருள் விருந்தாக அளிக்கப்படுகின்றது. தனது வீட்டிலிருந்து மஸ்ஜிதை நோக்கிச் செல்பவர் ஓதும் துஆவில் 'நூர்' எனும் பிரகாசத்தை வேண்டுகிறார். மஸ்ஜிதுக் குள் நுழையும்போதும் வெளியேறும் போதும் இறை அருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றார். நுழைந்தவுடன் இரண்டு ரக்அத் தஹிய்யதுல் மஸ்ஜித் தொழுகிறார்.

உலகில் எப்படி கஃபா பிரகாசிக்கின் றதோ அவ்வாறே ஏழாவது வானத்தில் பைதுல் மஃமூர் எனும் இல்லம் திகழ்கின் றது. அல்லாஹ்வைத் துதிப்பதற்காக அன்றாடம் அதில் எழுபதாயிரம் மலக் குகள் நுழைகிறார்கள். அவர்கள் திரும்பி வருவதில்லை.

அல்லாஹ்வின் வீடுகள் கண்ணியமிக்க இடங்கள். துர்வாடைகளோடு அதில் நுழையக் கூடாது. அங்கே வியாபாரம் செய்யக் கூடாது. காணாமல் போன பொருளைத் தேடக் கூடாது. எவ்விதத்திலும் அதனை அசுத்தப்ப டுத்தலாகாது.

மஸ்ஜிதுடன் தொடர்புபட்ட அனைவரும் கண்ணியத்துக்குரியவர்கள். அதனைச் சுத்தப்படுத்தி வந்த பெண் மரணித்த செய்தியை அறிந்த நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், "எனக்கு அறிவித்திருக்க வேண்டுமே!" எனக் கூறியவர்களாக, அவரின் கப்ருக்குச் சென்று பிரார்த் தித்தார்கள். முஅத்தின்கள் மறுமை நாளில் உயர் அந்தஸ்துகளைப் பெறு வார்கள். மஸ்ஜிதின் நிர்வாகிகள்கூட பலமான இறை தொடர்பைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் எனக் குர்ஆன் விளக்குகின்றது.

மலக்குகள் இறை இல்லங்களை அலங்கரித்து சாந்தியும் ஸகீனத்தும் நிறைந்த சூழலாக மாற்றுகின்றனர். மஸ்ஜிதுடன் இணையும் மனிதர்க ளுக்காக பிரார்த்திக்கின்றனர்.

"மஸ்ஜித்களில் தங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும் என விரும்பும் மனிதர்கள் இருக்கின்றனர். அவர்களை அல்லாஹ் நேசிக்கிறான்" எனத் திருமறை பகர்கின்றது. இதிலிருந்து மஸ்ஜித்களின் பிரதான இலக்காக உள்ளங்கள் தூய்மைப்படுத்தப்படுவது அமைந்திருப்பது தெளி வாகின்றது. அல்லாஹ்வின் இல்லத்தில் அமர்ந்து, மலக்குகளின் சூழலில் தன்னை இணைத்துக் கொள்ளும் மனிதன் தனது ஆன்மாவில் படிந்திருக்கும் அழுக்குகளை அகற்றித் தூய்மைப்படுத்தும் வாய்ப்பைப் பெறுகிறான். அடிக்கடி இந்த உறவு இடம்பெறும்போது தூய்மையின் வீதம் அதிகரித் துச் செல்லும். இந்த உணர்வோடும் தேவையோடும் வழிமுறைகளோடும்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


நாம் மஸ்ஜிதை அணுக வேண்டும்.

எனவேதான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இஃதிகாப் எனும் இபாதத்தை அடிக்கடி கடைபிடித்து வந்திருக்கிறார்கள். குறிப்பாக, ரமழான் காலங்களில் அவர்கள் அதிகம் இஃதிகாப் இருந்திருக்கிறார்கள். தனது வீட்டிலே வுழுச் செய்து கொண்டு, பள்ளிவாசலை நோக்கி நடந்து செல்லும் மனிதர்களின் ஒவ்வொரு கால் எட்டும் அவர்களின் ஒவ்வொரு பாவம் மன்னிக்கப்படுவதற்கும் ஒவ்வோர் அந்தஸ்து உயர்த்தப்படுவதற்கும் காரணமாய் அமைகின்றது. எனவேதான் சில ஸஹாபாக்கள் தமது வீடுகளை பள்ளிவாசலை விட்டும் தூரமாக அமைத்துக் கொண்டார்கள். பள்ளிவாசலுக்கு அதிகமான எட்டுகளை வைத்து நடந்து வந்தார்கள்.

பிரச்சினைகள், கஷ்டங்களின்போது மஸ்ஜிதையும் தொழுகையையும் நாடும் வழக்கம் நபிகளாரிடத்திலும் ஸஹாபாக்களிடத்திலும் காணப்பட்டது. காற்று வேகமாக வீசும்போது கூட தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தொழுகைக்கு விரைவார்கள். பயணங்களை முடித்து விட்டுத் திரும்புகின்றபோதும் நபியவர்கள் முதலாவதாக மஸ்ஜிதுக்குச் சென்று, பின்னரே தனது குடும்பத்தாரிடம் செல்வார்கள்.

இந்தப் பின்னணியில் அல்லாஹ்வின் இல்லங்களாகிய மஸ்ஜிதுக்கும் எமக்கும் இடையிலான தொடர்பை சற்று சிந்திப்போம். மஸ்ஜிதின் பங்கு சமூகத்தில் சுருங்கி விட்டது போலவே அவற்றுடனான உறவுகளின் வட்டமும் மிகவும் குறுகிவிட்டிருப்பதைக் காண்கிறோம். பள்ளிவாசலை நோக்கிச் செல்லும்போது வுழூ செய்து கொண்டு பேணப்பட வேண்டிய உள நிலை மாற்றங்களோடு நாம் செல்வது அரிதாக இருக்கிறது. மஸ்ஜிதில் கழிக்கும் நேரமும் குறைந்திருப்பதோடு, அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் சீர்திருத்தங்களும் மாற்றங்களும் உணரப்படாமலேயே போய்விட்டன. எனவே, இப்பலவீனங்களைக் களைந்து மஸ்ஜித்களுடன் நெருக்கமான, பலமான உறவுகளை ஏற்படுத்தி புனிதர்களாக எம்மை மாற்றிக் கொள்வோம்.


Technology யை சிறந்த முறையில் பாவிப்போம் என்ற தொனிப் பொருளில் Sri Lanka Science College வழங்கும் SMS சேவை.




Sri Lanka Science College, Colombo.

| தரம் | சேவையை பெறும் முறை |
|---|---|
| 06 | REG [illegible] SCGR6 என Type செய்து 77000 க்கு அனுப்பவும் |
| 07 | REG [illegible] SCGR7 என Type செய்து 77000 க்கு அனுப்பவும் |
| 08 | REG [illegible] SCGR8 என Type செய்து 77000 க்கு அனுப்பவும் |
| 09 | REG [illegible] SCGR9 என Type செய்து 77000 க்கு அனுப்பவும் |
| 10 | REG [illegible] SCGR10 என Type செய்து 77000 க்கு அனுப்பவும் |
| 11 | REG [illegible] SCGR11 என Type செய்து 77000 க்கு அனுப்பவும் |


வெளிவந்து விட்டது





விலை: 450.00




விலை: 150.00




விலை: 150.00





விலை: 375.00




விலை: 150.00




விலை: 250/-




விலை: 250/-

ISLAMIC BOOK HOUSE

77, Dematagoda Road, Colombo-09 T.P. 011 2684851, Fax: 011 2688102




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வாழ்க்கைநெறி
## எப்படி இருக்க வேண்டும்?





"தீன்- நெறி என்றால் அது வாழ்வின் ஏதோ ஒரு துறைக்கு மட்டும் உரியதாக இருக்கக் கூடாது. மாறாக, முழு வாழ்வின் உயிரோட்டமாகவும் அனைத்துத் துறைகளுக்கும் வலுவூட்டக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அறிவு, ஆற்றல்கள், தேட்டங்கள் அனைத்துக்கும் அது உரைகல்லாகத் திகழ வேண்டும்."

வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் திருப்பத்திலும் நேரான பாதை எது, தவறான பாதை எது என்பதைத் தெளிவுபடுத்தக்கூடியதாக அந்த நெறி இருக்க வேண்டும். நேர்வழியில் உறுதியோடிருந்து முன்னேறுவதற்கு தேவையான சக்தியையும் உயிர்த்துடிப்பையும் அளிப்பதாக விளங்க வேண்டும்.

இம்மையிலிருந்து மறுமை வரையுள்ள நீண்ட, முடிவுறாத பயணத்தின் ஒவ்வொரு நிலையிலும் மனிதனுக்கு வெற்றியளிக்கக் கூடியதாக அந்த நெறி திகழ வேண்டும்.

ஆம்! அத்தகைய நெறியின் பெயர்தான் இஸ்லாம்!

ஒரு குறுகிய வட்டத்திலேயே சுழன்று கொண்டிருப்பதற்கோ, அல்லது மனித வாழ்வின் ஏதோ ஒரு துறையின் சிறு அங்கமாக மட்டும் இருப்பதற்கோ இஸ்லாம் வரவில்லை. இவ்வாறு அறியாமையின் காரணமாக இஸ்லாத்தைக் குறுகிய அளவில் பின்பற்றினால் அது வந்ததன் நோக்கமே அடிபட்டுப் போய்விடும்.

இறைவனைப் பற்றியும் மனிதனுக்கு இறைவனிடம் இருக்க வேண்டிய தொடர்பு பற்றியும் இஸ்லாம் விவாதிக்கிறது. அதே சமயம் மனிதன் பிற மனிதனுடன் நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றியும் மனிதனுக்கும் உலகுக்குமுள்ள தொடர்பு பற்றியும் அது வலுவாகவும் தெளிவாகவும் பேசுகிறது.

மனிதனுக்குச் சில அடிப்படை உண்மைகளை உணர்த்தவே இஸ்லாம் இவ்வுலகிற்கு வந்தது.

வாழ்வின் பல்வேறு துறைகளின் தொடர்புகளும் தனித்தனியானவையோ, முரண்பட்டவையோ அல்ல! மாறாக, அவை ஒழுங்காகத் தொகுக்கப்பட்ட ஓர் அமைப்பின் அங்கங்களேயாகும். அவை சீராக அமைவதில்தான் மனிதனின் வெற்றியும் ஈடேற்றமும் அடங்கியுள்ளன.

மனிதனுக்கும் படைத்தவனுக்கும் இடையிலுள்ள தொடர்புகள் சீராக அமையாத வரையில் மனிதனுக்கும் மனிதனுக்குமுள்ள தொடர்பும் மனிதனுக்கும் அகிலத்திற்குமுள்ள தொடர்பும் சீராக அமையாது!

இந்தத் தொடர்புகள் ஒன்றையொன்று முழுமைப்படுத்துகின்றன; செவ்வனே அமையச் செய்கின்றன. இந்தத் தொடர்புகள்தான் வெற்றி வாழ்க்கையை உருவாக்குகின்றன.

எந்த நெறி அல்லது மதம் இப்பணியைச் செய்யவில்லையோ அது உண்மையில் ஒரு நெறியே அல்ல!


இப்பணியைச் சிறப்பாகவும் நேர்த்தியாகவும் நிறைவேற்றும் வாழ்க்கை நெறியின் பெயர்தான் இஸ்லாம்!

**மௌலானா மௌதூதி (ரஹிமஹுல்லாஹ்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிக்கான வழிமுறைகள் - 01

ஹிந்தி மூலம்: மௌலானா வஹீதுத்தீன் கான்
தமிழில்: ஸீயெம்மே அமீன்



அத்தகைய சமூக நிர்மாணம் சுவர் எழுப்புவதற்கு முன்னர் கூரை போடுவதைப் போன்றது. அந்தக் கூரை அதனைத் தூக்குபவர்களின் தலையிலேயே விழுந்துவிடும். இதே போன்று, மனிதர்களை உருவாக்க முன்னர் சமூகத்தை உருவாக்குவது தோல்வியிலும் அழிவிலுமே சென்று முடிந்துவிடும்.

# மேலிருந்து தொடங்குதல்

தாடியில் வெண்மயிர்கள் காணப் பட்ட ஒரு மனிதன் ரெக்ரூட்டிங் ஆபீஸுக்குப் போனான்.

"என்னை ஓர் இராணுவ வீரனாகச் சோத்துக் கொள்ளுங்கள்" என்று அவன் கேட்டுக் கொண்டான்.

"உனக்கு என்ன வயதாகிறது?" என்று ஸார்ஜன்ட் கேட்டார்.

"அறுபத்தி இரண்டு."

"இராணுவ வீரனாவதற்கு அறுபத்தி இரண்டு வயது மிகவும் அதிகமானது என்று உனக்கு நன்றாகத் தெரியும்தானே!" என்று ஸார்ஜன்ட் கேட்டார்.

இராணுவ வீரனாவதற்கு இந்த வயது அதிகமாக இருக்கலாம். ஆனால், உங்களுக்கு ஒரு ஜெனரல் தேவை இல்லையா?" என்று அவன் திருப்பிக் கேட்டான்.

ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் (மே 1982) மேற்படி சம்பவம் வெளிவந்திருந்தது. அதற்கு வேடிக்கையான ஒரு தலைப்புக் கொடுக்கப்பட்டிருந்தது.

"மேலிருந்து தொடங்குதல்" (Starting at the top) என்பதே அது.

ஒருவன் ஜெனரல் பதவியிலிருந்து தனது இராணுவ வாழ்க்கையைத் தொடங்க விரும்பினால், அது ஒரு போதும் சாத்தியமில்லை. இது பொது வாழ்க்கைக்குரிய ஒரு விவகாரம். இங்கே யாருக்கும் பல்டியடிக்க முடியாது. ஒரு மரத்தின் தொடக்கம் எவ்வாறு விதையிலிருந்து ஆரம்பமாகிறதோ, அதேபோன்று வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதன் தொடக்கமும் ஆரம்பப் புள்ளியிலிருந்து அல்லது வேரிலிருந்துதான் ஆரம்பமாகிறது. இறுதிப் புள்ளி அல்லது உச்சியிலிருந்து உங்களுக்கு உங்களது வாழ்க்கையைத் தொடங்க முடியாது.

வியாபாரம் மூலதனத்தை இடுவதிலிருந்து ஆரம்பமாகின்றதேயன்றி, இலாபம் ஈட்டுவதிலிருந்தல்ல. டாக்டராவதற்கான படிப்பு, முயற்சி செய்வதிலிருந்து தொடங்குகின்றதேயன்றி, பெரிய போர்ட் மாட்டுவதிலிருந்தல்ல.

வீட்டைக் கட்டியெழுப்புவதன் ஆரம்பம், அத்திவாரம் போடுவதிலிருந்து தொடங்குகின்றது, கூரை போடுவதிலிருந்தல்ல. உணவு உண்பதன் தொடக்கம் வயலில் விதை தூவுவதிலிருந்தன்றி, மேசையில் பீங்கானைச் சோடித்து வைப்பதிலிருந்தல்ல. தொழிற்சாலையின் தொடக்கம் இயந்திரங்களைப் பெறுவதிலிருந்தன்றி, தயாரான பொருட்களைச் சந்தைப்படுத்துவதிலிருந்தல்ல...

இதே போன்று, சமூக விவகாரங்களின் தொடக்கம் இலட்சியத்தை இனங்காணுவதிலும், விருப்பத்தைத் தூண்டுவதிலிருந்தும்தான் ஆரம்பமாகின்றது. மனிதர்கள் முயற்சியுடையவர்களாகவும் நேர்மையானவர்களாகவும் மாற்றப்பட வேண்டும். அவர்களிடம் சகிப்புத்தன்மையும் ஒற்றுமையும் ஏற்படுத்தப்பட வேண்டும். மனிதர்களிடம் இந்தத் தகைமைகளை போதியளவு உண்டுபண்ணுவதற்கு முன்னர் நடைமுறை சார்ந்த விடயங்களில் இறங்கினால் அது தோல்வியிலே சென்று முடியும். அத்தகைய சமூக நிர்மாணம் சுவர் எழுப்புவதற்கு முன்னர் கூரை போடுவதைப் போன்றது. அந்தக் கூரை அதனைத் தூக்குபவர்களின் தலையிலேயே விழுந்துவிடும். இதே போன்று, மனிதர்களை உருவாக்க முன்னர் சமூகத்தை உருவாக்குவது தோல்வியிலும் அழிவிலுமே சென்று முடிந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم

# الكلية الإصلاحية العربية

# இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி - மாதம்பை

## புதிய மாணவர் அனுமதி – 2014/ஹிஜ்ரி-1435

## LICENTIATE COURSE IN ARABIC & ISLAMIC STUDIES

**ஆழமான இஸ்லாமிய அறிவும் ஆன்மிகப் பண்புகளும் துறைசார்ந்த அறிவு, திறமைகளும் கொண்ட சிந்தனையாளர்கள், சமூகத்தலைவர்கள், திட்டமுகாமையாளர்கள், ஊர்மட்டத் தலைவர்கள், வழிகாட்டிகள், சமூக ஆய்வாளர்கள் போன்றோரை உருவாக்கும் பணியில் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக ஈடுபட்டுவரும் இஸ்லாஹிய்யா அரபுக்கல்லூரியில் நீங்களும் இணைந்துகொள்ளலாம்!**

- இக்கற்கை நெறியின் போது தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ், அகீதா, உலூமுல் குர்ஆன், உஸூலுல் ஹதீஸ் உஸூலுல் பிக்ஹ், உஸூலுத் த.'வா, அரபுமொழி, இஸ்லாமியக் கலைகள், ஆங்கில மொழி, தகவல் தொழில்நுட்பம், தேர்வுப்பாடங்கள் (Optional Subject), போன்ற பாடங்கள் கற்பிக்கப்படுவதுடன் G.C.E. உயர்தரப் பரீட்சை, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகம் ஒன்றில் கலைமாணி பட்டப்பரீட்சை (B.A.) (வெளிவாரி) என்பவற்றுக்கும் மாணவர்கள் தயார்படுத்தப்படுவார்கள்.
- திறமையான மாணவர்களுக்கு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியைத் தொடர்வதற்கான புலமைப் பரிசில்கள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஏற்கனவே திறமையான மாணவர்கள் பலர் அல்அஸ்ஹர் பல்கலைக்கழகம் (எகிப்து), ஜாமிஅதுல் ஈமான் (யெமன்), உம்முல் குரா (மக்கா) ஆகிய பல்கலைக்கழகங்களில் உயர் கல்விக்கான புலமைப் பரிசில்களைப் பெற்றுச் சென்றுள்ளனர்.

### கற்கை நெறிக் காலம்

- ஐந்தரை வருடங்கள் (5½)

### அனுமதிக்கான அடிப்படைத் தகைமைகள்

- **G.C.E. (O/L) பரீட்சையில் மூன்று பாடங்களில் C தரச்சித்தியுடன் தமிழ், கணிதம் உட்பட மொத்தம் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.**
- **1996/01/01ம் திகதிக்குப்பின்னர் பிறந்திருத்தல்.**

### விண்ணப்பிக்கும் முறை

**விண்ணப்பிக்க விரும்புவோர் தமது பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் Licentiate என டைப் செய்து 0777345367 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு 20.04.2014ம் திகதிக்கு முன்னர் SMS பண்ணவும்.**

**மேலதிக விபரங்களுக்கு :**

**ISLAHIYYAH ARABIC COLLEGE**
Chandrik Silva Mawatha, Old Town, Madampe
Tel: 0773171718, 0775052735, 0715262026
Fax: 032 2247786 Email: islahiyyah@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தில் அமைதி; உலகத்தில் உயர்வு!

## (Peace for Mind Grace for Life)



"உள்ளத்தில் அமைதி; உலகத்தில் உயர்வு" எனும் கருப் பெருளில் நடைபெற்ற முஅஸ்கர் இரண்டு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. ஒன்று உள்ளம்; அடுத்து உலகம்.

இன்று மனிதர்கள் அமைதி, மகிழ்ச்சி, நிம்மதி தேடி அலைகின்றனர். மனிதர்களில் ஒரு சாரார் உலக இன்பங்களை எவ்வளவு அனுபவிக்க முடியுமோ அவ்வளவுக்கு அனுபவித்து அமைதி தேடுகின்றனர். மற்றொரு சாரார் உலக வாழ்வை முற்றாகப் புறக்கணித்து துறவிகளாக காடுகளிலும் மலைகளிலும் மடங்களிலும் தவமிருந்து நிம்மதியைத் தேடுகின்றனர்.

இந்நிலையில், இன்றைய எமது இளைஞர்களும் மகிழ்ச்சி, அமைதி, நிம்மதியைத் தேடி பணம், பட்டம், சினிமா, போதைப் பொருள், காதல் மற்றும் ஆபாசம் என்பவற்றின் பின்னால் அள்ளுண்டு செல்கின்றனர்.

மனோ இச்சைக்கு அடிமைப்பட்டு இவ்வுலகம் முழுவதையும் அனுபவித்த ஐரோப்பாவின் நிலையை இன்று நாம் காண்கின்றோம். சினிமா நட்சத்திரங்கள், அரசியல் வாதிகள், விளையாட்டு வீரர்கள்... என வெறுமனே உலக இன்பங்களில் மூழ்கி அதன் இறுதிச் சொட்டையும் சுவைத்துவிட்டு இவை நிம்மதிக்கான வழிகள் அல்ல என்பதை உணர்ந்து கொண்ட பின் ஒரு சாரார் தற்கொலையின்பால் நகர்கின்றனர்.

இத்தகையதொரு நிலையில், ஓர் இளைஞன் தனது ஆசைகளையும் இலட்சியங்களையும் கனவுகளையும் அல்லாஹ்வுக்காக அர்ப்பணிப்பதன் மூலம் மட்டுமே உள அமைதியைப் பெற்றுக் கொள்ள முடியும். அமைதியடைந்த ஆத்மாவே மறு உலகிலும் வெற்றியடையும் என்பதை ஊழியர்களின் உள்ளங்களில் பதிப்பதே இக்கருப்பொருளின் பிரதான நோக்கமாகும்.

சிறந்த நிலத்திலேயே நல்ல பயிர் விளையும் என்பது போல் அமைதியடைந்த உள்ளத்தைச் சுமத்திருக்கும் ஓர் இளைஞன் தனது கல்வியை, ஆளுமையை வளர்க்கின்ற போது இவ்வுலகில் சாதனை படைக்க முடியும். இதன் மூலம் அமைதியடைந்த உலகத்தைக் காணலாம் என்ற சிந்தனையை இப்பிராந்திய ஊழியர் முஅஸ்கர்கள் ஊழியர்களின் உள்ளங்களில் ஆழமாகப் பதித்திருக்கும் என நம்புகிறோம்.

# பிராந்திய ஊழியர் முஅஸ்கர்- 2014

ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் வருடாந்த நிகழ்வுகளில் ஒன்றான பிராந்திய ஊழியர் முஅஸ்கர்கள் இம்முறை "உள்ளத்தில் அமைதி; உலகத்தில் உயர்வு!" எனும் கருப்பொருளில் நாடளாவிய ரீதியில் நடைபெற்றன.

சப்ரகமுவ பிராந்தியத்திற்கான முஅஸ்கர் கடந்த பெப்ரவரி 22ஆம் திகதி மாவனல்லை வீனஸ் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக மாவனல்லை ஸாஹிரா தேசியப் பாடசாலையின் அதிபர் பௌமி அவர்கள் கலந்து கொண்டார். மத்திய பிராந்தியத்திற்கான முஅஸ்கர் பெப்ரவரி 27ஆம் திகதி கண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசினோ மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் உனைஸ் அவர்கள் கலந்து கொண்டார். வடமேல் பிராந்தியத்திற்கான முஅஸ்கர் கடந்த மாதம் 01ஆம் திகதி மாதம்பை இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக சிலாபம் நகர சபை தவிசாளர் ஜீவன் ஜூட் கலந்து கொண்டார்.

மேற்குப் பிராந்தியத்திற்கான முஅஸ்கர் கடந்த மாதம் 02ஆம் திகதி திஹாரி ஹென்டிகெப் நிலையத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் முஹம்மட் அவர்கள் கலந்து கொண்டார். கிழக்குப் பிராந்தியத்திற்கான முஅஸ்கர் மார்ச் 08ஆம் திகதி மருதமுனை ஆ.மு. ஷரீபுத்தீன வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக அரசியல், சமாதான மற்றும் முரண்பாட்டு கற்கைகள் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எம். பாஸில், கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய பீடத்தின்சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் ஜலீல் (ஹாமி) ஆகியோர் கலந்து கொண்டனர்.

வட மத்திய பிராந்தியத்திற்கான முஅஸ்கர் கடந்த மாதம் 09ஆம் திகதி அநுராதபுரம் ஸாஹிரா தேசியப் பாடசாலையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக வட மத்திய மாகாண சபை உறுப்பினர் அநுர புத்திக குணசேகர கலந்து கொண்டார்.

பிரதான கருப்பொருள் உரைகளுக்கான வளவாளர்களாக அஷ்ஷெய்க் ரிழ்வான் (இஸ்லாஹி) பொறியியலாளர் என்.எம் முன்ஸிப், அஷ்ஷெய்க் பஸ்லுல் பாரிஸ் (நளீமி) அஷ்ஷெய்க் நிஸாம் (காஸிமி) ஆகியோருடன் ஜம்இய்யாவின் பொதுச் செயளாலர் அஷ்ஷெய்க் அப்பான் அப்துல் ஹலீம் (நளீமி), உதவி நாஸிம் அஷ்ஷெய்க் என். எம். இர்பான் (இஸ்லாஹி), தேசிய ஒருங்கிணைப்பாளர் சகேதரர் எம்.எல். தௌபீக், உதவி நாஸிம் எம்.ஜே.எம். அஸ்மி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இம்முறை பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு HRDP, SMART போன்ற நிகழ்ச்சிகளின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, பிராந்திய ரீதியான பாடல் போட்டி மற்றும் கவிச்சமர் உட்பட பல்வேறு கலை அம்சங்களுடன் முஅஸ்கர்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# துணிகரமிக்கவர்களைக் கண்டறிவதற்கான ஆரம்பம்!

ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம் வருடாந்தம் ஏப்ரல் பாடசாலை விடுமுறையில் பத்தாம் தர மாணவர்களுக்கு நடத்திவரும் மூன்று நாள் வதிவிட செயலமர்வு இம்முறையும் நடைபெறவிருக்கிறது, அல்ஹம்துலில்லாஹ்.

நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் "துணிகரமிக்கவர்களைக் கண்டறிவதற்கான ஆரம்பம்" (Initiation For Searching The Adventures) எனும் இச்செயலமர்வு, சவால்கள் மிகுந்த உலகை துணிவுடன் எதிர்கொண்டு வளமிக்க இளம் பராயத்தை சிறந்த எதிர்காலத்தை நோக்கி நெறிப்படுத்தி விண்முட்டும் சாதனைகளோடு சரித்திரம் படைக்க வழிகாட்டுகிறது.

♦ நான் யார்?

♦ எனக்குள் மறைந்திருக்கும் ஆற்றல்கள் என்ன?

♦ வாழ்வில் ஏதாவது சாதிக்க வேண்டுமே! ஆனால் வழி என்ன?

♦ எனக்கு நன்றாக படிக்க ஆசைதான்! ஆனால் எப்படி படிப்பது என்பது புரியவில்லையே!

♦ எல்லோரும் மதிக்கின்ற, விரும்புகின்ற ஆளாக நானும் இருக்க வேண்டுமே...

என்ற உங்களது உளக்குமுறல்களுக்கு ISA விடை சொல்ல இருக்கிறது, இன்ஷா அல்லாஹ்.

♦ Educational Motivation

♦ Skills Development

♦ Attitude Change என பல்சுவை அம்சங்களுடன் நடைபெறவிருக்கிறது. ஒரு செயலமர்வுக்கு முப்பது பேரே அனுமதிக்கப்பட இருப்பதனால் உங்கள் பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள். மேலதிக தகவல்களை எமது பிராந்திய பொறுப்பாளர்களுடன் தொடர்பு கெண்டு பொற்றுக் கொள்ளலாம்.

Br. Hamdy – Sabragamuwa Region - 0774243159
Br. Hisham – Central Region - 0777040944
Br. Rifkhan – North Central Region - 0773653342
Br. Saabiq – North West Region - 0772653519
Br. Wazeem – Western Region - 0774139123
Br. Furkhan – Uva Province - 0777284663
Br. Rusaik – South Province - 0775154754
Br. Ilyas – North Province - 0775673838
Br. Fariheen – Trinco District - 0757166661
Br. Sanoos – Batticlo District - 0767700088
Br. Nisry – Ampara District - 0754562670


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகைச்சுவைக்காக

# பொய் பேசுவது பாவம்!

பொய்யை நபி (ஸல்லல்லாஹு அலைஹு வஸல்லம்) வன்மையாகக் கண்டித்திருக்கின்றார்கள். பொய் பேசுபவர்களுக்குக் கடுமையான தண்டனை காத்திருக்கின்றது என எச்சரித்தும் உள்ளார்கள்.

சிலபோது மனிதர்கள் நகைச்சுவையாகப் பேசும் இடங்களில் பொய்த் தகவல்களைத் தருவதுண்டு. இதை தவறு என்று அவர்கள் உணர்வதில்லை. இஸ்லாம் ஹாஷ்யமாகப் பேசுவதையோ சிரித்து மகிழ்வதையோ தடை செய்யவில்லை. ஆனால், நகைச்சுவையும் சிரித்து மகிழ்வதும் உண்மை, நேர்மை முதலானவற்றின் எல்லைகளுக்குள்ளே இருக்க வேண்டும் எனப் போதிக்கின்றது இஸ்லாம்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"அடுத்தவர்களை சிரிக்க வைக்க வேண்டும் என்பதற்காக பொய்யான கதைகளைக் கூறுபவனுக்கு மரணம் உண்டாகட்டும். அவனுக்கு அழிவு காத்துக் கொண்டிருக்கின்றது" (அத்திர்மிதி)

"நகைச் சுவையில் ஈடுபடவேண்டிய அவசியமிருந்தும் பொய்யை விட்டு விலகி இருப்பவனுக்கு சுவர்க்கத்தின் நடுவில் ஒரு வீடு கிடைக்கும் என நான் உறுதி அளிக்கின்றேன்" (பைஹகி)

"வேடிக்கை, விவாதம் இவற்றில் பொய் சொல்வதை விட்டு விடாத வரை ஒரு முஃமின் முழுமையான ஈமானைப் பெற்றுவிட முடியாது. அவன் ஏனைய விவகாரங்கள் அனைத்திலும் உண்மை பேசினாலும் சரியே!" (அஹ்மத்)

இன்று நகைச்சுவை என்ற பெயரில் நாவுகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதை நாம் கண்டு வருகின்றோம். ஒரு சில நிமிடங்கள் சிரித்து மகிழ வேண்டும் அல்லது அடுதவர்களைச் சிரிக்க வைக்க வேண்டும் என்பதற்காக பொய் சவர்சாதாரணமாகி விட்டது. இதனால் பல விரும்பத்தகாத நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன. பலபோது இது குடும்ப வாழ்வை சீர்குலைத்து, குழப்பத்தையும் பகையையும் ஏற்படுத்தி விடுகிறது. எனவே, நகைச்சுவைக்காக பொய் பேசுவதையும் கட்டுக்கதைகளைச் சொல்வதையும் தவிர்த்து நல்லதை மாத்திரம் பேசுவோமாக!

**றிகாஸா அப்துர் ரஹ்மான்**
**கதீஜதுல் குப்ரா மகளிர் கல்லூரி**

# முகஸ்துதி



படைத்தவனுக்காய் மட்டும்
துதிக்க வேண்டிய
முகங்கள்- இன்று பிற
முகங்களுக்காயும்
துதிக்கிறது!
-முகஸ்துதி-

**றிப்னா ஏ சும்ஹான் - மாவனல்லை**

# சிறுவர் பூங்கா

முதல் பரிசுக்குரியவர்:
**ஏ.டப்ளியூ. எம். அனீஸ்**
136/B ஹேவனவெல, மாதிபொல

## ஆறுதல் பரிசைப் பெறுவோர்

01. ஜே.எஸ்.எப். அம்ரா - கள்-எலிய
02. எம்.எச். மொஹமட் ரிஸ்வி - மாகொல
03. எம்.ஆர். அஸ்பா பேகம் - கரைத்தீவு
04. ஏ. ஹஸ்மத் - கல்பிட்டி
05. எம்.ஏ. சுமையா பர்வீன் - பொலன்னறுவை
06. எம்.ஏ.எம். ஹாஜித் - ஏறாவூர்
07. ஜே.ஏ.எப். அப்ரா - மடவளை
08. எம்.என். நிம்ஸி அஹமட் - ஹக்மன
09. எம்.என்.எப். நஸ்ரா - மக்கொன
10. மின்ஸாம் - கஹுத்துறை

**குறிப்பு:**
விடைகளை தபால் அட்டையில் (Post Card) மாத்திரம் எழுதி அனுப்பவும்.

## ஸலாத்தைப் பரப்புங்கள்

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அம்ர் இப்னு ஆஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு முறை நபி (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடனம் ஒரு மனிதர் வந்து "இஸ்லாமிய பண்புகளில் சிறந்தது எது?" என்று வினவினார். அதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், "பசித்தவருக்கு உணவளிப்பதும் உமக்கு அறிமுகமானருக்கும் உமக்கு அறிமுகமற்றவருக்கும் ஸலாம் சொல்வதுமாகும்" என்றார்கள்.

(அல்புகாரி, முஸ்லிம்)

நாம் ஒருவரை பாதையிலோ, வீட்டிலோ, சபையிலோ, வகுப்பறையிலோ அல்லது அது போன்ற ஏனைய இடங்களிலோ சந்தித்தால் 'அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுகு' என்று கூறுவதன் மூலம் சாந்தி சமாதானத்தைப் பறைசாற்றுகின்றோம்; ஒற்றுமையை வலியுறுத்துகின்றோம்.

ஸலாம் கூறுவது முஸ்லிம்களின் இந்த உலகத்தினதும், சுவர்க்கத்தினதும் வாழ்த்தாகும். இது ஒரு பிரார்த்தனையும் கூட.

எனவே, ஒரு முஸ்லிம் தான் அறிந்த, அறியாத முஸ்லிம்களுக்கு ஸலாம் சொல்வது அவசியமாகும். எமது ஸலாத்தை வெறும் வாயோடு மட்டும் முடித்துக் கொள்ளாமல் 'முஸாபஹா' எனும் கைலாகு செய்து சாந்தியை, ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். இது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு காரணமாக அமைகிறது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக ஹுதைபதுல் யமானி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "ஒரு முஃமின் மற்றொரு முஃமினை சந்திக்கும்போது அவனுக்கு ஸலாம் சொல்வான். அவனது கைகளைப் பிடித்து முஸாபஹா செய்வான். அப்போது மரத்திலிருந்து இலைகள் உதிர்வது போல் அவர்களுடைய பாவங்கள் உதிர்ந்து விடும்."

(அத்தபராணி)

**ஷகூரா தில்ஷாத் பின்த் மஹ்ரூப்**
**அல்ஹாதியா இஸ்லாமிய நிறுவனம்**

## முத்துக்கள் பத்து

01. எங்கும், எப்பொழுதும் எது தனக்கு இல்லையோ, அதையே மனித மனம் தேடுகிறது. அந்தத் தேடுதலிலேயே உலகம் வேகமாக இயங்குகிறது.

02. சொல்வதிலும் கேட்பதிலும் உள்ள சுவை, செயலாற்றுவதில் வந்து விட்டால் தடைக்கற்கள் யாவும் வெற்றிப் படிகளாக மாறிவிடும்.

03. பலனை எதிர்பார்த்துக் கடமையைச் செய்தால், பலன் திரும்பிப் பார்க்காமல் ஓடும். பலனை எதிர்பார்க்காமல் கடமையைச் செய்தால் பலன் உங்களைத் துரத்தி வரும்.

04. உனக்கு எது தேவையென்பதை அல்லாஹ் அறிவான். எனவே, நீ கேட்பதை அவன் தரமாட்டான். உனக்கு நன்மையானதையே தருவான்.

05. அனுபவம் என்பது ஒரு நெருப்பு. அது எரியும்போது சிலர் விளக்காக மாறுகின்றனர். சிலர் விறகாக மாறுகின்றனர். சிலர் விலங்காகவும் மாறுவதுண்டு.

06. காலம் ஆற்றாத காயமில்லை; கஷ்டமில்லாத வாழ்க்கையில் சுவையுமில்லை. அறிவுப் பசிக்கு எல்லையுமில்லை.

07. தூய்மையான நல்ல சிந்தனை உள்ளத்தையும் உடலையும் மட்டுமல்ல, ஆத்மாவையும் என்றும் நல்லாரோக்கியத்தோடு வைத்திருக்கும்.

08. செல்வத்தை இழந்தால் எந்த இழப்பும் இல்லை. நல்லாரோக்கியத்தை இழந்தால் பாதியை இழக்கிறோம். நல்லொழுக்கத்தை இழந்தால் முழு வாழ்வையும் இழக்கிறோம்.

09. உலகில் மிக இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடிகின்ற மிக மிகப் பெரிய முதலீடு அன்பு ஒன்றே.

10. சோர்ந்து களைத்த பின் கிடைக்கும் சிறிய ஓய்வு, தாகித்துத் தவித்த பின் கிடைக்கும் தண்ணீர், பலநாள் பட்டினிக்குப் பின் கிடைக்கும் ஒரு பிடி உணவு, சண்டைக்குப் பின் கிடைக்கும் சமாதானம் முதலானவற்றின் மதிப்பு அளவிட முடியாதது.

**ஆர். ஆர். ஹஸீமா- தெஹிவளை**

## வினா-விடைப் போட்டி-70

*01. 'நப்ஸுல் முத்மயின்னா' என்றால் என்ன?*

*02. அல்குர்ஆன் 'அல்பவாஹிஷ்' எனும் பதத்தால் குறித்துக் காட்டுகின்ற மானக்கேடான பாவம் எது?*

*03. GCC வளைகுடா கூட்டணி நாடுகளில் அங்கம் வகிக்கும் நாடுகளைக் குறிப்பிடுக.*

*04. குகைவாசிகளைப் பற்றி பேசும் ஸூரா எது?*

*05. அல்குர்ஆனில் ஒரு ஸஹாபியின் பெயர் இடம்பெற்றுள்ளது. அந்த ஸஹாபி யார்?*

**உங்கள் விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் எழுதி ஏப்ரல் 22ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வையுங்கள்.**

**சிறுவர் பூங்கா**
அல்ஹஸனாத்
77, தெமடகொட வீதி, கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Be absolutely Clear about Your Future!

# Join asps

**Free** Admission for *first 10 students* and awards.

## Steer your own success

### International Degree Foundation Programmer
- Computer Studies
- Management
- English Skills

### Diploma in Management & Marketing
- Business Management
- Human Resource Management
- Financial Accountant

### Montessori Teacher Training
- Unique opportunity For Girls ambitious to Peruse a teaching Career

### Banking & Finance
- Certificate in Banking & Finance (CBF)
- Diploma in Banking Finance (DBF)

### Quantity Surveying Leading to BSc (Hon) UK
- Diploma level (entry GCE O/L)
- Advance Diploma level (entry NDT, NCT, OUSL)

For Application & course information

**077-334732**

**ACADEMY OF SKY PROFESSIONAL STUDIES**

No: 500, Galle Road, Colombo - 06.

Tel: 0114575043 | 077334732

---

நாட்களில் மாத்திரமே வகுப்புகள் நடைபெறும்

நீங்களும் நாளைய உலகின்
தொழில் நுட்ப துறை நிபுணராக வேண்டுமா ?

## AIR CONDITIONING & REFRIGERATION

Diploma

- 6 மாத கால பயிற்சி நெறி
- பயிற்சி முடிவில் Diploma சான்றிதழ்
- 100% வீதமான Practical
- இலங்கையில் எங்கும் இல்லாத Work Shop வசதியுடனான பயிற்சி நெறி
- தேர்ச்சி பெற்ற முன்னணி ஆசிரியர்களின் வழி காட்டால்
- பயிற்சி நெறி முடிவின் பின் வெளியில் சென்று வேலைசெய்ய உத்தரவாதம்
- இஸ்லாமிய சூழல்
- தேவைப்படின் தங்குமிட வசதி செய்து தரப்படும்
- ஸகாத் பெற தகுதியான மாணவர்களுக்கு விஷேட சலுகை

வெளிநாடு செல்வதற்கு தேவைப் படுபவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்

LTi **LEELAK TECHNICAL INSTITUTE**

*Linking People With Technology*

No. 189/1, Sri Darmarama Road, Dematagoda. Colombo - 09.
Tel : 0112-689-584 E-mail : leelaktech@yahoo.com

**Hotline : 0779-711-721**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ■ தயம்மும் செய்யப்படும் மண் தூசி கொண்டதாக இருக்க வேண்டுமா?

## ■ பிரயாணி ஜுமுஆவுடைய இரண்டு ரகஅத்துகளைத் தொழுவதா அல்லது ளுஹர் தொழுகையை நிறைவேற்றுவதா?

## ■ ஆண்கள் மோதிரம் அணிவது ஸுன்னத்தா?

அஷ்ஷெய்க் முஹம்மத் முபீர் (இஸ்லாஹி), (M.A).
விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, மாதம்பை. mufeer96@gmail.com

**கேள்வி:** தயம்மும் செய்யப்படும் மண் கட்டாயம் தூசி கொண்டதாக இருக்க வேண்டுமா?

**பதில்:** தயம்மும் செய்வதற்கு தூசி கொண்ட மண் தான் இருக்க வேண்டும் என்பது நிபந்தனையல்ல. தூசியற்ற மண்ணிலும் தயம்மும் செய்யலாம். மழை காலங்களில் ஈரமான மண்ணில் தயம்மும் செய்தால் அது ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவே அமையும். அல்குர்ஆன் கூறுகின்றது.

"நீங்கள் நோயாளிகளாகவோ, அல்லது பிரயாணத்திலோ இருந்தால், அல்லது உங்களில் எவரும் மல சலம் கழித்து வந்தாலும், அல்லது நீங்கள் பெண்களைத் தீண்டி (உடல் உறவு கொண்டி)ருந்தாலும் (உங்களைச் சுத்தப்படுத்திக் கொள்ள) உங்களுக்குத் தண்ணீர் கிடைக்கா விட்டால் (தயம்மும் செய்து கொள்ளுங்கள். அதாவது) சுத்தமான மண்ணைக் (கையினால் தடவிக்) கொண்டு அவற்றினால் உங்கள் முகங்களையும் உங்களுடைய கைகளையும் தடவிக் கொள்ளுங்கள். அல்லாஹ் உங்களை வருத்தக்கூடிய எந்த சிரமத்தையும் கொடுக்க விரும்பவில்லை." (5: 6)

இவ்வசனத்தில் மண்ணைக் கொண்டே தயம்மும் செய்ய வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. அதில் தூசி கொண்டதாக இருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்படவில்லை.

**கேள்வி:** ஒரு பிரயாணி ஜுமுஆத் தொழுகையின் இறுதி அத்தஹிய்யாத்தை அடைந்து கொண்டால் அவர் ஜுமுஆவுடைய இரண்டு ரகஅத்துகளைத் தொழுவதா அல்லது ளுஹர் தொழுகையை நிறைவேற்றுவதா?

**பதில்:** பிரயாணிக்கு தொழுகைகளை இரண்டு ரகஅத்துகளாக சுருக்கித் தொழுவதற்கு சலுகை வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் அவர் ஜுமுஆத் தொழுகையில் ஒரு ரகஅத்தை விட குறைவான பகுதியை அடைந்து கொண்டால் அவர் ளுஹர் தொழுகையையே தொழ வேண்டும். அவர் பிரயாணி என்ற வகையில் ளுஹர் தொழுகையை இரண்டு ரகஅத்துகளாகச் சுருக்கித் தொழுதால் போதுமானது. நான்கு ரகஅத்துகளையும் தொழ வேண்டிய கட்டாயமில்லை. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

"யாராவது ஒருவர் தொழுகையின் ஒரு ரகஅத்தை அடைந்து கொண்டால் அவர் முழுத் தொழுகையையும் அடைந்து கொண்டவர் போன்றவராவார்."
(அல்புகாரி, முஸ்லிம்)

இந்த ஹதீஸின் எதிர்க் கருத்து யாராவது ஒருவர் தொழுகையில் இமாம் ஜமாஅத்தாக ஒரு ரகஅத்தையேனும் அடைந்து கொள்ளா விட்டால் அவர் இமாம் ஜமாஅத்தை அடைந்து கொள்ளவில்லை என்பதாகும். எனவே, ஜுமுஆத் தொழுகையில் ஒரு ரகஅத்தை விட குறைவான பகுதியை அடைந்து கொண்டால் அவர் கட்டாயமாக ளுஹர் தொழுகையை நான்கு ரகஅத்துகளாகத் தொழ வேண்டும். இங்கு பிரயாணி என்ற வகையில் அவர் ளுஹர் தொழுகையை இரண்டு ரகஅத்துகளாக சுருக்கித் தொழலாம்.

> தொழுகையின் பிரதான நோக்கங்களில் ஒன்று இறையச்சத்தை ஏற்படுத்துவதாகும். அதாவது, உள அமைதியைப் பெற்றுக் கொள்வதாகும். இந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு தடையாகவுள்ள அனைத்தையும் நபியவர்கள் தடுத்தார்கள். அந்த வகையில தொழுகையை அடைந்து கொள்வதற்காக அவசர அவசரமாக ஓடி வருவது, தொழுகையின் நோக்கத்தைப் பாழ்படுத்துவதாக அமைகின்றது.
> நபி (ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

**கேள்வி:** நான் பிரயாணத்தில் இருக்கும்போது மஃரிப் தொழுகையை இஷாத் தொழுகையுடன் சேர்த்து சுருக்கித் தொழுவதாக நிய்யத் வைத்தவாறு இரண்டு தொழுகைகளையும் தொழாமலேயே வீட்டுக்கு வந்தால் எனக்கு இஷாத் தொழுகையை இரண்டு ரகஅத்துகளாக சுருக்கித் தொழ முடியுமா?

**பதில்:** நீங்கள் பிரயாணத்தை முடித்து விட்டு எப்பொழுது உங்களுடைய ஊருக்கு, வீட்டுக்கு வந்து விடுகின்றீர்களோ அப்பொழுது தொழுகையை சுருக்கித் தொழுவதற்கான சலுகை முடிவடைந்து விடுகின்றது. எனவே, உங்களுக்கு இஷாத் தொழுகையை இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரகஅத்துகளாக சுருக்கித் தொழ முடியாது. மாற்றமாக, நான்கு ரகஅத்துகளையும் தொழ வேண்டும். நீங்கள் மஃரிபை ஆரம்பத்தில் தொழுது விட்டு அதன் பிறகு இஷாவுடைய நான்கு ரகஅத்துகளையும் முழுமையாகத் தொழ வேண்டும்.

**கேள்வி:** ஆண்கள் மோதிரம் அணிவது ஸுன்னத்தா?

**பதில்:** ஒவ்வோர் ஆணும் மோதிரம் அணிய வேண்டும் என்று வேண்டப்படக்கூடிய அளவுக்கு அது ஒரு சுன்னத் அல்ல. ஏனெனில், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம், அரசர்கள் முத்திரையிடப்படாத கடிதங்களை ஏற்றுக் கொள்வதில்லை எனக் கூறப்பட்ட பின்புதான் மோதிரம் அணியத் தொடங்கினார்கள். அதாவது, ஒரு தேவையை மையமாக வைத்தே நபியவர்கள் மோதிரம் அணிந்துள்ளார்கள். எனவே, மோதிரத்தினால் இது போன்ற தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய நிலையில் இருக்கின்ற ஒருவர் மோதிரம் அணிவது ஸுன்னாவாகும். ஏனையோர் மோதிரம் அணிவது முபாஹானதாகும்.

**கேள்வி:** இமாம் ருகூவில் இருக்கும்போது அவசரமாக ஓடிச் சென்று இமாம் ஜமாஅத்தை அடைந்து கொள்ள முடியுமா?

**பதில்:** ஒவ்வொரு கடமைக்கும் ஒவ்வொரு நோக்கம் இருக்கின்றது. ஒரு கடமை நிறைவேறற்றப்படுகின்ற போது அக்கடமையின் நோக்கம் அடையப் பெற்றிருக்க வேண்டும். தொழுகையின் பிரதான நோக்கங்களில் ஒன்று இறையச்சத்தை ஏற்படுத்துவதாகும். அதாவது, உள அமைதியைப் பெற்றுக் கொள்வதாகும். இந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு தடையாகவுள்ள அனைத்தையும் நபியவர்கள் தடுத்தார்கள்.

அந்த வகையில் தொழுகையை அடைந்து கொள்வதற்காக அவசர அவசரமாக ஓடி வருவது, தொழுகையின் நோக்கத்தைப் பாழ்படுத்துவதாக அமைகின்றது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

"நீங்கள் தொழுகைக்காக இகாமத் கூறப்படுவதைக் கேட்டால் நடந்து வாருங்கள். அவசரமாக வர வேண்டாம். நீங்கள் வரும்போது உங்கள் மீது அமைதி தொனிக்கட்டும். உங்களுக்கு தொழுகையில் கிடைத்ததை இமாம் ஜமாஅத்தாகத் தொழுங்கள். விடுபட்டதை எழுந்து தொழுங்கள்." (முஸ்னத் அஹ்மத்)

எனவே, இமாம் ஜமாஅத்தை அடைந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவசரமாக ஓடி வருவது ஒரு பக்கத்தில் தொழுகையின் நோக்கத்தை பாழ்படுத்துவதுடன், மறுபக்கத்தில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் ஸுன்னாவுக்கு முரணாகவும் அமைகின்றது.

**கேள்வி:** மாதவிடாயிலிருந்து சுத்தமாகி குளிப்பதற்கு முன்பு மனைவியுடன் உடலுறவு கொள்ள முடியுமா?

பதில்: அவ்வாறு உடலுறவு கொள்ள முடியாது. மாதவிடாயிலிருந்து சுத்தமாகி குளித்ததன் பிறகுதான் மனைவியுடன் உடலுறவு கொள்ள முடியும். அல்குஆன் கூறுகின்றது.


"மாதவிடாய் பற்றியும் உம்மிடம் வினவுகிறார்கள். நீர் கூறும் அது (ஓர் உபாதையான) தீட்டு ஆகும். ஆகவே, மாதவிடாயின்போது பெண்களை விட்டும் விலகியிருங்கள். அவர்கள் தூய்மையாகும் வரை அவர்களை அணுகாதீர்கள். அவர்கள் தூய்மையடைந்த பின் அல்லாஹ் எப்படி கட்டளையிட்டிருக்கின்றானோ அதன்படி அவர்களிடம் செல்லுங்கள். பாவங்களை விட்டு மீள்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கின்றான். இன்னும் தூய்மையாக இருப்போரையும் நேசிக்கின்றான்." (2: 222)

இவ்வசனத்தில் 'அவர்கள் தூய்மையாகும் வரை' என்பதன் கருத்து அவர்கள் மாதவிடாயிலிருந்து தூய்மையாகுவதைக் குறிக்கும் எனவும் 'அவர்கள் தூய்மையடைந்த பின்' என்பதன் கருத்து அவர்கள் குளித்துச் சுத்தமடைவதைக் குறிக்கும் என்றும் முபஸ்ஸிர்கள் விளக்கமளிக்கின்றனர். ■






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரபு மூலம்: அம்ர் காலித்
தமிழில்: அஷ்கர் அரூஸ் (நளீமி)

# நபிகளாரின் ஸீராவிலிருந்து...

தொடர் - 20

## அகழி யுத்தம்

ஹிஜ்ரி 5ம் ஆண்டின் பின்னரும் குறைஷிகளின் சுதந்திர வியாபாரப் பாதையில் முஸ்லிம்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தலாகவே விளங்கினர். குறைஷிகள் நபியவர்களையும் முஸ்லிம்களையும் பூண்டோடு அழிக்க வகுத்த திட்டம் உஹுதில் கைகூடாததால் மீண்டும் முஸ்லிம்களை அழித்தொழிக்க தருணம் பார்த்துக் கிடந்தார்கள். இந்நிலையில் நபியவர்களால் மதீனா பூமியை விட்டும் சுத்திகரிக்கப்பட்ட பனூ நளீர் கோத்திரத்தவர்கள் குறைஷிகளுடன் கை கோர்த்தனர். இப்போராட்டத்தில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வகுத்த முதன்மைத் திட்டங்களாவன:

- நாங்கள் மதீனாவை விட்டும் வெளியேற மாட்டோம்.
- அகழிகளைத் தோண்டுவோம்.
- குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் பாதுகாப்பான ஓர் இடத்தை அமைப்போம்.

**இரண்டாம் தரத் திட்டங்களாவன:**

- 'ஸில்உ' மலையடிவாரத்தில் நபியவர்கள் அகழிகளை அவதானித்தல்.
- முஸ்லிம்களை குழுக்களாகப் பிரித்து அகழிகளைத் தோண்டுவதோடு அதற்கு ஒவ்வொரு தலைவரையும் நியமித்தல்.
- இத்தலைவர்களை அபூபக்ர், உமர் (ரழியல்லாஹு அன்ஹுமா) ஆகியோர் கண்காணித்தல். இவர்கள் அனைவரையும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மேற்பார்வை செய்தல்.
- நபியவர்கள் தனது தோழர்களைத் தூண்டும் வகையில் தனது 58 வயதிலும் அகழியின் ஆழத்திலிருந்து மேற்பகுதிக்கு மண்ணை சுமந்து செல்லுதல்.

நபித் தோழர்கள் உத்வேகத்துடனும் சுறுசுறுப்புடனும் அகழியைத் தோண்டும் பணியில் மும்முரமாக ஈடுபட்டார்கள். ஹஸ்ஸான் இப்னு ஸாபித் (ரழியல்லாஹு அன்ஹு) போன்றோர் கவிதைகளைப் பாடினார்கள். ஒரு பெரும் அகழி தோண்டும்போது அங்கே கல்லொன்று குறுக்கிட்டது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அப்பாரிய கல்லை மூன்று முறை அடித்து உடைத்தார்கள். ஒவ்வொரு முறையும் முஸ்லிம்களுக்கு நன்மாராயத்தையும் சுபசோபனத்தையும் எத்திவைத்தார்கள்.

முதல் முறை: அல்லாஹ் மிகப் பெரியவன்! எனக்கு ஷாம் வழங்கப்படும். அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் அதன் சிவப்புக் கோட்டைகளைக் காண்கிறேன்.

இரண்டாம் முறை: அல்லாஹ் மிகப் பெரியவன்! எனக்கு பாரசீகம் வழங்கப்படும். அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் மத்யன்வாசிகளின் வெள்ளை நிறக் கோட்டைகளைக் காண்கிறேன்.

மூன்றாம் முறை: அல்லாஹ் மிகப் பெரியவன்! எனக்கு யமன் வழங்கப்படும். அல்லாஹ்வின் மீது ஆணையாக இப்போதே இவ்விடத்திலிருந்து நான் ஸன்ஆவுடைய வாயில்களைக் காண்கிறேன்.

இந்த ஹதீஸ் முஸ்லிம்களுக்கு பெரியதொரு சுபசெய்தியை எத்திவைத்தது. முஃமின்களுக்கு உத்வேகத்தைக் கொடுத்தது. அவர்களுடைய ஈமான் மேலும் அதிகரித்ததாக அல்குர்ஆன் கூறுகின்றது. (அல்அஹ்ஸாப்: 22)

மேலும், முனாபிக்கள் இந்த நன்மாராயத்தைப் பரிகசித்தனர். அவர்களது உளநிலை அவநம்பிக்கையும் போலிவேஷமும் நிறைந்திருந்ததாக அல்குர்ஆன் சித்தரிக்கிறது. (அல்அஹ்ஸாப் 13-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு முனாபிக்களின் பரிகசிப்பும் குறைந்த உணவும் கடும் குளிரும் முஸ்லிம்களை அகழி தோண்டுவதை விட்டும் சற்றும் பின்நிற்கச் செய்யவில்லை. அகழியை தற்காப்புக்காக தோண்டி முடித்தார்கள். குழந்தைகளையும் பெண்களையும் யுத்தத்தில் கலந்து கொள்ள முடியாதவர்களையும் பனூஹாரிஸாவின் பலமிக்க கோட்டையில் ஒன்று சேர்த்தனர். பின்னர் யுத்தம் தொடங்கியது.

குறைஷிகளுக்கு இதுவொரு புதிய அனுபவமாக இருந்தது. அவர்கள் முஸ்லிம்களை முற்றுகையிடத் தேவையான அளவு உணவு, பானங்களைக் கொண்டிருக்கவில்லை. ஏனெனில், அவர்கள் இதனை சிறிதளவேனும் எதிர்பார்த்திருக்கவில்லை. 24 நாட்கள் முஸ்லிம்களை முற்றுகையிட்டனர். முஸ்லிம் வீரர்களின் சிறிய பொடுபோக்கையும் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள ஹாலித் இப்னு வலீத், அம்ர் இப்னு ஆஸ் போன்றோர் துடியாய் துடித்தனர். எனினும், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மேற்பார்வை, படைத் தளபதிகளுடைய கண்காணிப்பு, அபூபக்ர், உமர், ஸஃத் இப்னு முஆஸ் (ரழியல்லாஹு அன்ஹும்) போன்றோரது அவதானம் எதிரிகளின் வெற்றிக்கு பெரும் தடையாக இருந்தது.

> நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மேற்பார்வை, படைத் தளபதிகளுடைய கண் காணிப்பு, அபூபக்ர், உமர், ஸஃத் இப்னு முஆஸ் (ரழியல்லாஹு அன்ஹும்) போன்றோரது அவதானம் எதிரிகளின் வெற்றிக்கு பெரும் தடையாக இருந்தது.

**போர்க்கால சுவடுகள்**

- நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் காபிர்களின் பலத்தை முறியடிப்பதற்காக அவர்களில் "கித்பான்" கோத்திரத்தாருடன் ஒரு சமரசப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றார்கள். இப்பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது. முஸ்லிம்களின் தரப்பிலிருந்து பனூ குரைழா கோத்திரத்தவர்கள் முஸ்லிம்களுடன் செய்து கொண்ட உடன் படிக்கையை முறித்துக் கொண்டு குறைஷிகளுடன் இணைந்து கொண்டனர். இதனால் முஸ்லிம்களுக்கு வெளியிலிருந்து குறைஷிகளிடமிருந்தும் உள்ளிருந்து பனூகுரைழாக் களிடமிருந்தும் அச்சுறுத்தல்கள் அதிகரித்தன. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பனூகுரைழாக்களின் மோசடியை உறுதிப்படுத்தி நிலைமையை அறிந்து வர ஸுபைர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை அனுப்பி வைத்தார்கள். அச்செய்தி உண்மையாயின் அதனை எம்மிடம் சிலேடையிலேயே எத்திவைக்குமாறு பணித்தார்கள். சிலபோது இதனை செவியேற்று முஸ்லிம்கள் சோர்ந்து விடுவார்களோ என நபியவர்கள் அஞ்சினார்கள். இங்கே முஃமின்கள் கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டார்கள்.

"உங்களுக்கு மேலிருந்தும் (குறைஷி), உங்களுக்கு கீழிருந்தும் (பனூகுரைழா) படையெடுத்து வந்தபோது உங்களுடைய இருதயங்கள் தொண்டைக்குழிகளை அடைந்து திணறி நீங்கள் (முனாபிக்) அல்லாஹ்வைப் பற்றி பலவாறான எண்ணங்களை எண்ணிக் கொண்டிருந்த சமயம் முஃமின்கள் கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டு கடுமையாக ஆட்டி அசைக்கப்பட்டதை நினைவு கூருங்கள்" (அல்அஹ்ஸாப்: 10)

02. பனூ குரைழாக்கள் முஸ்லிம்களின் பெண் மற்றும் சிறுவர்களின் கோட்டைக்கு ஒரு படை வீரனை அனுப்பிவைத்தார்கள். அப்போது நபியவர்களின் மாமி (அப்துல் முத்தலிபின் மகள், ஸுபைர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் தாய்) ஹஸ்ஸான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் "ஹஸ்ஸானே! இவனைக் கொன்றுவிடுங்கள்" எனப் பணித்தார்கள். "இல்லை முடியுமாயின் நீங்கள் கொலைசெய்து நபியவர்களிடம் கூறிக் கொள்ளுங்கள். என்னால் முடியாது" என ஹஸ்ஸான் பதிலுரைத்தார். அப்பெண் உடனே ஒரு கத்தியை எடுத்து எதிரியைக் கொலை செய்தாள். அவன் இறந்ததை உறுதிப்படுத்த இன்னொருமுறை குத்தினார்.

பின்னர் "ஹஸ்ஸான்! ஆயுதத்தை எடுத்து அவனது தலையை கொய்து எதிரிகளின் கோட்டையின் முன்னால் வீசுங்கள். இங்கேயும் பாதுகாப்பு படை வீரர்கள் இருக்கின்றார்கள் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளட்டும்" எனக் கூறினாள். இதற்கும் ஹஸ்ஸான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் மறுத்து விடுகின்றார்கள். உடனே, அந்த வீரப்பெண் அப்பணியையும் தானே செய்து முடிக்கின்றாள். இதனை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவதானித்துக் கொண்டிருந்தார்கள். அவளது செயலை கௌரவிக்குமுகமாக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கனீமத் சொத்துக்களை பகிரும்போது அவளுக்கென தனியாக ஒரு பகுதியை ஒதுக்கினார்கள்.

Visit: www.alhasanath.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*03.* குறைஷிப் படையில் பலமிக்க வீரராக அம்ர் இப்னு வுத் இருந்தான். அவன் எந்தவொரு போர்க்களத்திலும் வெற்றியின்றி திரும்பியதில்லை. அவன் அகழியில் இறங்கியவனாக முஸ்லிம்களில் ஒருவரை நேருக்குநேர் போரிட அழைப்பு விடுத்தான். "நீங்கள் கோழைகளா? உங்களில் வீரர்களில்லையா?" என சூளுரைத்தான். அப்போது அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் எழுந்து செல்ல நாடியபோது "அலி! அமருங்கள். அது அம்ர் இப்னு வுத் தெரியுதா?" நபியவர்கள் தடுத்தார்கள். "அல்லாஹ்வின் தூதரே! அவன் அம்ராக இருந்தால் நான் அலி" என கம்பீரமாகப் பதிலளித்தார். அப்போது அவருக்கு வயது **26**. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு தனது வாளை வழங்கி இவ்வாறு பிரார்த்தித்தார்கள்:

"யா அல்லாஹ்! இவருக்கு உதவுவாயாக..! இவருக்கு உதவுவாயாக...! யா அல்லாஹ் நீ பத்ரில் அபூ உபைதாவையும் உஹுதில் ஹம்ஸாவையும் எடுத்துக் கொண்டாய். யா அல்லாஹ்! இவர் அலி. நீ என்னை தனிமையாக்கி விடாதே!"

அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் களத்தில் குதித்து எதிரிக்கு இஸ்லாத்தை ஏற்றல், நாடு திரும்புதல், கொலை என மூன்று தெரிவுச் சுதந்திரத்தை வழங்கினார்கள். இறுதியில் சண்டை மூண்டது. அம்ர் இப்னு வுத் கொலை செய்யப்பட்டான். எதிரிகளை அச்சுறுத்த அவனை தலையை எதிரிகளின் கூடாரங்களை நோக்கி எறியுமாறு நபியவர்கள் கட்டளையிட்டார்கள்.

இப்போராட்டத்தில் முஸ்லிம்களில் **6** பேரும் முஷ்ரிக்களில் மூவரும் கொலைசெய்யப்பட்டார்கள். ஸஃத் இப்னு முஆத் (ரழியல்லாஹு அன்ஹு) கடுமையாக காயப்பட்டார்கள். இஸ்லாத்தின் கொடியின் கீழ் தாதியாகப் பணியாற்றிய முதற் பெண்ணாக 'ருபைதா அஸ்லமிய்யா' (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் கருதப்படுகின்றார்.

*04.* அஹ்ஸாப் போராட்டம் மும்முரமாக சூடுபிடித்திருந்த வேளையில் தெய்வீக உதவி முஸ்லிம்களை வந்தடைந்தது.

1. நுஐம் இப்னு மஸ்ஊதின் தந்திரோபாயம்
2. கடும் குளிருடைய புயல் காற்று

நுஐம் இப்னு மஸ்ஊத் என்பவர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் வந்து தான் இஸ்லாத்தை ஏற்றுவிட்டதாகவும் தனது கூட்டத்தார் இதனை அறிய மாட்டார் எனவும் குறிப்பிட்டார். தனக்கும் பனூ குறைழாக்களுக்கும் மத்தியில் நெருங்கிய உறவு இருப்பதால் ஏதேனும் உளவு வேலைகள் தனக்கு செய்ய முடியும் எனவும் வேண்டினார். அப்போது நபியவர்கள் "நீங்கள் எம்மில் ஒருவராக இருக்கின்றீர். முடியுமாயின் அவர்களில் ஒருவராக இருந்து அவர்களை தந்திரமாய் தோல்வியுறச் செய்யுங்கள். ஏனெனில், யுத்தம் என்பது தந்திரமாகும்" என உபதேசித்தார்கள். உடனே நுஐம் தனது சாணக்கியத்தைப் பயன்படுத்தி குறைஷிகளுக்கும் பனூகுறைழாக்களுக்கும் மத்தியில் சந்தேக விதைகளைத் தூவி பிரிவை உண்டு பண்ணினார்கள்.

நுஐம் ஒரு படையை அல்ல, ஒரு சமூகத்தையே காப்பாற்றிய மனிதர்!!

அன்றைய இரவு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பிரார்த்தனையில் மூழ்கினார்கள். முஃமின்களின் உறுதியும் பொறுமையும் கட்டுப்பாடும் இறையுதவியைக் கொண்டு வந்தன. கடும் குளிரான இரவில் பலமான புயல் காற்றை அல்லாஹ் வீசச் செய்தான். அவர்களது தீப்பந்தங்கள் அணைந்தன. கூடாரங்கள் பறந்தன. அவர்களது சட்டி, பானைகள் உருண்டன. அவர்கள் திகில் கொண்டனர். அபூஸுப்யான் தனது படைக்கு பின்வாங்குமாறு கட்டளையிட்டான்.

*"முஃமின்களே! அல்லாஹ் உமக்கு சொரிந்துள்ள அருட்கொடைகளை நினைவுகூருங்கள். உங்களிடம் எதிரிப் படைகள் வந்தபோது புயல் காற்றையும், உங்களால் காண முடியாத (வானவர்) படைகளையும் நாமே அனுப்பினோம். மேலும் நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிந்தவனாக இருக்கிறான்." (அல் அஹ்ஸாப்: 9)*

*05.* ஹுதைபா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அஹ்ஸாப் யுத்தத்தில் கலந்து கொண்ட ஒரு நபித் தோழர். கடும் குளிரும் புயலும் வீசுகின்ற நாளில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் காபிர்களின் செய்திகளை உளவறிந்து வர எவரேனும் முன்வருமாறு வேண்டினார்கள். எவரும் முன்வரவில்லை. அன்றைய இரவு அந்தளவு அச்சமும் பீதியும் கொண்டிருந்ததோடு, எதிரிகளிடம் சிக்கினால் உயிர்ப்பலி நிச்சயம் எனும் நிலையும் இருந்தது. அப்போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஹுதைபா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களைப் பார்த்து இப்பணியை செய்து வருமாறு பணித்தார்கள். அவரும் தன்னை சுதாகரித்துக் கொண்டு எச்சரிக்கையுடன் புறப்பட்டார்கள். அபூஸுப்யான் ஒரு தீப்பந்தத்துக்கு அருகாமையில் தனது தோழர்களை அழைத்து "முஹம்மதுடைய தோழர்கள் எமக்குள்ளே நுழைந்து எம்மைப் பற்றி உளவறிய வாய்ப்புண்டு. நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் அருகாமையிலுள்ளவர்களைப் பற்றி விசாரித்துக் கொள்ளுங்கள்" எனக் கட்டளையிட்டான். அக்கூட்டத்தில் ஹுதைபா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் இருந்தார்கள். உடனே ஹுதைபா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தனது வலப்புறத்திலிருந்தவரைப் பார்த்து "நீர் யார்?" என வினவினார்கள். அதற்கு அவன் "முஆவியா இப்னு அபூஸுப்யான்" எனப் பதிலளித்தார். (54ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்

மலையாள மூலம்: ஷெய்க் முஹம்மத் காரக்குன்னு ▸ தமிழில்: ஜே. இஸ்ஹாக்

"எனது அருமை முஷ் என்னை விட்டும் பிரிந்து விட்டார். எனது துயரத்தின் ஆழத்தை நீங்கள் அறிவீர்கள். கடுமையான துன்பத்திற்கு நான் ஆளாகியிருக்கின்றேன். ஆயினும், துக்கமென்றால் என்னவென்று இப்போது தான் முதன் முதலில் உணர்கின்றேன்."

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இறைவனின் நாட்டமும் இறைவனின் அறிவும் தவிர்க்க முடியாத யதார்த்தங்களாக இருக்கும் அதேவேளை, அவை முற்றிலும் மனித அறிவுக்கு அப்பாற்பட்டவை யாகும். எனவே, எமக்கு முற்றிலும் தெரியாத ஒரு விடயத்தைப் பற்றி எண்ணி எண்ணிக் கவலைப்பட்டு முடங்கிக் கிடப்பது எவ்வித அர்த்தமுமற்ற செயற்பாடாகும். மாற்றமாக, இறைவனின் எல்லையற்ற கருணையிலும் அருளிலும் நம்பிக்கை வைத்து அவற்றைப் பெறுவதற்காக முயற்சிப்பதே புத்திசாலித்தனமான செயற்பாடாகும். உண்மையான, நம்பிக்கையான இறை விசுவாசி ஒருபோதும் நம்பிக்கை யிழக்க மாட்டார்கள்.

இஸ்லாம் ஒரு கடினமான வேலை செய்வதற்கு முன்னர் அது குறித்து உறுதியான தீர்மானம் எடுத்த பின்பே இறைவனிடம் பொறுப்புச் சாட்டுமாறு பணிக்கிறது.

"நீர் உறுதியான முடிவுக்கு வந்துவிட்டால், அப்போது அல்லாஹ்வையே முழுமையாகச் சார்ந்திருப்பீராக." (3:159)

### பக்கவாதம் பீடித்த இளைஞன்

பின்வரும் உதாரணத்தை நினைத்துப் பாருங்கள்:

மிகவும் துடிதுடிப்பான ஓர் இளைஞன். திடீரென அவனைப் பக்கவாதம் பீடிக்கிறது! அவன் எல்லாவித சிகிச்சைகளையும் மேற்கொள்கின்றான். ஆயினும், அவை எதுவும் எந்தப் பயனையும் நல்கவில்லை. மேற்கத்திய வைத்தியம் உட்பட ஹோமியோபதி, ஆயுர்வேத, சித்த, யூனானி ஆகிய அனைத்து வைத்திய முறைகளும் இந்நோயைக் குணமாக்க முடியாது எனக் கையை விரித்து விடுகின்றன. அப்போது அந்த வாலிபன் தனது எஞ்சிய வாழ்நாள் முழுவதையும் படுக்கையில் முடங்கித்தான் கழிக்க வேண்டும் என்பதை மிகவும் மனவருத்தத்துடன் உணர்ந்து கொள்கின்றான். இவ்வாறு அவன் மனமுடைந்து சோர்ந்து போவது முற்றிலும் இயல்பானதே. இந்நிலையில் உலகின் எந்த சடவாதத் தத்துவங்களாலும் கொள்கைகளாலும் அவனை ஆறுதல்படுத்த முடியாது!

விளாதிமிர் இவானுவிச் லெனின். 20ம் நூற்றாண்டு கண்ட மாபெரும் வீரமிக்க புரட்சியாளன்! அவன் பக்க வாத நோயினால் பீடிக்கப்படுகின்றான். தனது புரட்சித் தோழன் ஸ்டாலினிடம் தனது வாழ்வை முடித்துக் கொள்ள பொட்டாசியம் சயனைட்டைத் தருமாறு கேட்கின்றான்! ஆனால், இறைவனை நம்புகின்ற ஓர் இறை நம்பிக்கையாளனைப் பொறுத்தவரை அவன் இந்நிலையில்கூட எல்லாவற்றையும் இறைவனிடம் பொறுப்புச் சாட்டுவான். இதன் மூலம் மனஅமைதி பெற்றவனாகத் தனக்குள்ளே இப்படிச் சொல்வான்:

"கண்கள், காதுகள், மூக்கு, நா, அவயவங்கள், சுகதேகம், வாழ்வு அனைத்தையும் எனக்குத் தந்தவன் இறைவன். தனது அருளால் எனக்குத் தந்த அருளை அவன் இப்போது எடுத்துக் கொண்டான். எனது இப்போதைய நிலை வெறுமனே ஒரு சோதனையும் இறைவனின் நாட்டமும் ஆகும். நான் இந்நிலையில் எனது நம்பிக்கையில் தளர்வேனாயின் இந்த சோதனையில் நான் தோல்வியடைந்து விடுவேன். பொறுமையாக இருந்து இதனை சகித்துக் கொண்டால் மறுமையில் வெற்றியாளர்களில் ஒருவனாக மாறுவேன். எனது இந்த வெற்றியின் காரணமாக எனக்கு சுவனம் கிடைக்கும். சுவர்க்கத்தில் எந்த நோயும் கிடையாது."

### குழந்தையை இழந்த பெற்றோர்

இந்த உதாரணத்தைப் பாருங்கள். பெற்றோருக்கு ஒரே ஒரு பிள்ளை இருக்கிறது. அன்பாகப் போற்றி வளர்த்த, எல்லோரது அன்பையும் பெற்ற அந்தக் குழந்தை நான்கு அல்லது ஐந்து வயதில் திடீரென ஒருநாள் இறந்து விடுகிறது! இத்தகைய அனுபவத்தைப் பெற்ற பெற்றோரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கத்தையும் துயரத்தையும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

"குடும்பம் என்பது வெறுமனே முதலாளித்துவம் கண்டுபிடித்த ஒன்றே தவிர, முதன்மைக் கம்யூனிச யுகத்தில் குடும்பம் என்ற ஒன்றே கிடையாது. பெண்கள் அன்று யாருடைய தனிச் சொத்தாகவும் இருக்கவில்லை. யாருடனும் தொடர்பு வைத்துக் கொள்வதற்கு அவர்களுக்குப் பூரண சுதந்திரம் இருந்தது. குழந்தைக்கு தம் தந்தை யார் என்றே தெரியாதிருந்தது..." என்றெல்லாம் அடுக்கிக் கொண்டே சென்றார் கார்ள் மாக்ஸ். ஆயினும், அவரது அருமை மகன் சிறுவயதில் திடீரென இறந்த போது கார்ள் மாக்ஸ் ஆடிப்போய் விட்டார்!

1855இல் மிகவும் புத்திகூர்மையான அவரது அருமை மகன் பாரதூரமாக நோய்வாய்ப்பட்டான். எட்கார் (Edgar) எனப்படும் அந்த எட்டு வயது பாலகனின் படுக்கையில் பல இரவுகளைக் கண்விழித்துக் கழித்தார் கார்ள் மாக்ஸ். தனது கடுமையான துயரத்தை நண்பர் ஏங்கல்ஸுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றார்:

"இதயம் நெருப்பாய் கொதிக்கிறது. சிரசோ அனலாய்த் தகிக்கிறது."

தான் செல்லமாய் முஷ் (Mush) என்று அழைத்த எட்கார் இறந்தபோது மீண்டும் ஏங்கல்ஸுக்கு இப்படி எழுதினார்:

"எனது அருமை முஷ் என்னை விட்டும் பிரிந்து விட்டார். எனது துயரத்தின் ஆழத்தை நீங்கள் அறிவீர்கள். கடுமையான துன்பத்திற்கு நான் ஆளாகியிருக்கின்றேன். ஆயினும், துக்கமென்றால் என்னவென்று இப்போது தான் முதன் முதலில் உணர்கின்றேன்."

இத்தகைய சூழ்நிலையில் விதியை நம்புகின்றவர்கள் தம்முடைய மனதைத் தேற்றிக் கொள்கின்றனர். அவர்கள் தமது மனதோடு பேசுகின்றனர்:

"அருளாளனாகிய அல்லாஹ்தான் எனக்கு குழந்தையை வெகுமதியாய் தந்திருந்தான். அவனே மீண்டும் அதனைத் தன்னிடம் அழைத்துக் கொண்டான். இவை அனைத்தும் அவனது மாற்ற முடியாத நாட்டத்தின்படியே நடைபெறுகின்றன. என்னை விட மிகவும் அருளாளனும் அன்பாளனும் பாதுகாக்கக் கூடியவனுமாகிய இறைவனிடம் நான் எனது மகனை திரும்பக் கொடுத்திருக்கின்றேன். எனவே, நான் பொறுமை இழப்பது அர்த்தமற்றதும் தேவையற்றதுமாகும். நான் இப்போது இந்த இழப்பைத் தாங்கிக் கொண்டு பொறுமை காத்தால் எனக்கு இதற்குப் பகரமாக சுவனம் கிடைக்கும். அந்த நிலையான சுவனத்தில் எனது மகன் என்னை வரவேற்று அழைத்துச் செல்ல புன்முறுவல் பூத்த முகத்துடன் காத்திருப்பான்."

விதியில் நம்பிக்கையில்லாதவர்கள் இவ்வாறான துன்பங்களையும் இடர்களையும் சந்திக்கும்போது பொறுமையிழந்து மனக் கொதிப்புக்கும் மன உளைச்சலுக்கும் ஆளாகிறார்கள். அவர்கள் நீண்ட முறைப்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். எந்த ஆறுதல் வார்த்தைகளும் அவர்களை ஆசுவாசப்படுத்தக் கூடியதாக இல்லை. அவர்களது கவலைகளை எதனாலும் நீக்க முடியாது. இதற்கு மாற்றமாக இறை நம்பிக்கையாளர்கள் உடனடியாக ஆறுதல் அடைகின்றார்கள். தமது பொறுமையோ பொறுமையின்மையோ பௌதிக நிலைமைகளில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது என்பதை அவர்கள் புரிந்து கொள்கிறார்கள். பொறுமையின்மை அவர்களது துயரத்தை மேலும் பன்மடங்கு அதிகமாக்கி விடும் என்பதையும் அவர்கள் அறிந்திருக்கின்றார்கள். மாற்றமாக பொறுமையானது அவர்களுக்கு உடனடியாக அமைதியைக் கொடுக்கிறது. அதன் பிரதிபலனாக மறுமையில் அவர்களுக்கு மாபெரும் வெகுமதி கிடைக்க இருக்கிறது. பொறுமையிழத்தல் மாபெரும் தவறு என்பதை அவர்கள் நன்கு புரிந்து கொள்கிறார்கள்.

இஸ்லாத்தின் கண்ணோட்டத்தின்படி முழு வாழ்க்கையுமே ஒரு சோதனையாகும். அருட்கொடைகளைத் தருவதன் மூலமும் அதனைத் தடுப்பதன் மூலமும் இறைவன் எமது வாழ்க்கையை சோதிக்கின்றான். இதன் உண்மையான பெறுபேறு என்ன என்பது மறுமை நாளில் தான் தெரிய வரும். எங்களுக்கு சார்பான நிலைமைகளில் அளவுக்கு மிஞ்சிப் பூரித்துப் போய்விட வேண்டாம் என்றும் எங்களுக்கு இக்கட்டான கட்டங்களில் அழகிய பொறுமையைக் கைக்கொள்ளுமாறும் இறைவன் கற்றுத் தருகின்றான். இவ்வாறு நடந்து கொள்பவர்களுக்கே மறுமையில் வெற்றி உண்டென நன்மாராயம் கூறப்படுகின்றது. இந்த விடயம் பின்வரும் அல்குர்ஆன் வசனத்தில் விளக்கப்படுகின்றது:

*"மேலும் சிறிதளவு அச்சத்தாலும், பசியாலும், உடைமைகள், உயிர்கள் மற்றும் விளைபொருட்கள் ஆகியவற்றில் இழப்பை ஏற்படுத்தியும் திண்ணமாக நாம் உங்களை சோதிப்போம். (இந்த நிலைகளில்) பொறுமையை மேற்கொள்கின்றவர்களுக்கு நீர் நற்செய்தி கூறுவீராக! அவர்கள் தங்களுக்கு ஏதேனும் துன்பம் நேரிடும்பொழுது நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள். மேலும் நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்லக் கூடியவர்களாக இருக்கின்றோம் என்று சொல்வார்கள். அத்தகையோர் மீது அவர்களின் இறைவனிடமிருந்து நல்வாழ்த்துக்களும் நல்லருளும் உண்டாகும். இன்னும் அத்தகையோர்தாம் நேர்வழி பெற்றவர்கள்."* **(2:155-157)**

(55ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன் முறையாக 2002இல் **Mobile Phone Course** இனை அறிமுகப்படுத்திய
உங்கள் பிரபல ஆசிரியர் M.R.M. RIZVI இன் மற்றுமோர் அறிமுகம்



ஏமாற்றமற்ற திருப்தியான ஒரே பயிற்சி வகுப்பு

ஒரு பிரிவில் 4 பேர் மாத்திரம்

# BASIC + ADVANCE MOBILE PHONE REPAIRING COURSE

(இலங்கை வரலாற்றில் பாடத்திட்டம் குறிப்பிட்ட ஒரே பயிற்சி நெறி)

12 DAYS COURSE




I PHONE, BLACKBERRY, SAMSUNG GALAXY, HTC, ANY CALL .... போன்ற Phone களை Unlocking / Flashing செய்தல் பற்றி விசேடமாக கற்பிக்கப்படும்.

Troubleshooting முறைப்படி சகலவிதமான Phone களையும் திருத்தும் முறை, Bypass/Jumper முறை, Forum மூலம் தீர்வுகாணும் முறை என்பன விரிவாக கற்பிக்கப்படும்.

**NOTE :** பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்றும் மாணவர்கள் பழுதடைந்த Phone களை கொண்டுவரலாம். எமது நிறுவனத்தாலும் திருத்த Phone தரப்படும்

யாருடைய தயவுமின்றி சுயமாக உழைக்கக்கூடிய சுயதொழில், உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெறுத்தரக்கூடியதும் **அதிக இலாபத்தை** ஈட்டித்தரக்கூடியதுமான பயிற்சி வகுப்புக்கள்

# KINGTECH

**No. 231 1/2, 1st Floor, Santhos Plaza, Main Street, Colombo - 11.**
**0723402243 / 0727402243 / 0112334058**

---

"ஓர் உம்ரா மறு உம்ரா வரையிலுள்ள பாவங்களுக்குப் பரிகாரமாகும்" (புகாரி:1773)

**நபி வழியில் உம்ரா செய்து இபாதத்களை திருப்தியுடன் நிறைவேற்ற**



# TGL TRAVELS

உங்கள் பயணத்தில்

- கொழும்பு - ஜித்தா நேரடி விமான சேவை (சவூதி எயர்லைன் - SV 789, 11.45 A.M)
- மக்கா மதீனா ஆகிய இரு ஹரம்களிலும் ஜும்ஆ தொழுவதற்கான சந்தர்ப்பம்.
- இரு ஹரம்களுக்கு அருகாமையில் தங்குமிடம்
- இலங்கை முறைப்படி மூன்று வேளை உணவு
- இஸ்லாமியப் புனிதத் தலங்களைத் தரிசிக்கும் வாய்ப்பு
- உங்கள் அமல்களை உரிய முறையில் செய்யவும் வழிகாட்டவும் உங்களுடன் இணைகின்ற தகைமை மற்றும் அனுபவமிக்க உலமா

இன்ஷா அல்லாஹ் **ஏப்ரல் 16ம்** திகதி எமது குழு பயணமாகும்

குழந்தைகள், சிறுவர்களுக்கு விஷேட கட்டணம்...

எமது அடுத்த உம்ரா குழுக்கள் புறப்படும் திகதி
ஏப்ரல் - 24, மே - 14

இறுதி நேர சிரமங்களிலிருந்து விடுபட இப்போதே பதிவுகளுக்கு முந்துங்கள்.

தொடர்புகளுக்கு

**Ash. Arshad 0777630288**
**Al Haj Rizmy 0777801262 Hijaz Sanoos 0777800388**

TGL Since 1990

## TGL TRAVELS & TOURS (PVT) LTD.

Airline Ticketing Agent & Hajj - Umrah Operators

90, Chatham Street, Colombo 01. Tel: 0115341134 Fax: 0115371410
www.tglhajjumrah.com E-mail: umrah-haj@tgl.lk

IATA Accredited Agent

WAZ ADS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07 ஆண்டுகளுக்கு மேல் 1500 மாணவர்களுக்கு மேல் உருவாக்கிய IRO College..**




நான் IRO வில் Mobile Phone Repairing பாடநெறியை கற்றேன். கற்றதன் பின்னர் இன்று நான் அதன் மூலம் போதிய வருமானத்தையும் பெறுகிறேன். இதற்கு உதவிய IRO விற்கு எனது மனமார்ந்த நன்றிகள்....

பாடநெறிக்கு செலுத்திய கட்டணத்தை
**முதல் மாதத்திலே**
சம்பாதித்துக்கொள்ள முடியுமான முதலீடு..

Most Trusted 7 years... **IRO College**
We build your future

# Mobile Phone
## Repairing Course

**Registration Now process Hurry Up !**

**Free!**
- Toolkit
- Software CD
- 100 Secrets
- The Guide to Success Book
- Hostel (Colombo)

**Hot Line 0774447110**

பாடநெறி சம்பந்தமான மேலதிக தகவல்கள் உள்ளடக்கிய ஒரு புத்தகத்தை இலவசமாக உங்கள் வீட்டிற்கே பெறுவதற்கு இப்பொழுதே அழையுங்கள்!!!


**4 Days Course**
(Full Time Time)

- பாடநெறிக்கான முழுக்கட்டணம் 9000/- மட்டுமே..
- நவீனமயமான Mobile Phone Repair பண்ணும் முறைகள்...
- பாடநெறிக்கு பிறகு தரம் வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்.
- Software, Hardware, Soldering க்காக நவீன உபகரணங்களை உள்ளடக்கிய Lab இல் பயிற்றுவிக்கப்படும்.

| Colombo | Jaffna | Kandy | Batticaloa | Trinco | Hatton | Puttalam |
|---|---|---|---|---|---|---|
| April 14-17 | April 7-10 | April 14-17 | April 21-24 | April 21-24 | April 28-may 01 | April 28-may 01 |

## Secrets of Learning Course

**Just in 5 days**



**கற்றலின் இரகசியங்கள் பாடநெறி**

"எனது மகனின் maths performance இலேயும் படிப்பிலேயும் அறவே போதாமல் இருந்தது. IRO வின் 5 days secrets of learning நடக்கிறது என்று கேள்விப்பட்டதும் அதற்கு அனுப்பினேன். 5 days க்கு பிறகு மகனுடைய attitude இல் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டு இருந்தது. பொதுவாக படிக்கிற விஷயத்தில் பெரிய ஆர்வம் உண்டாகி இருக்கிறது கண்டோம். Maths ஐ விருப்பமான subject ஆக பார்க்கிறான். இப்போது தனக்கு maths இஷ்டம் என்று சொல்கிறான். IRO வின் secrets of learning பாடநெறி மகனின் வாழ்க்கையில் ஒரு பாரிய மாற்றத்தை உண்டாக்கி விட்டது என்று தான் சொல்ல வேண்டும்.."

Chairman -White house restaurant - Kandy

Most Trusted 7 years... **IRO College**

- காலையில எழும்பனும்.. படிக்கனும்.. என்று நெனச்சிட்டு தூங்குவேன். ஆனா.. Late ஆ.... தான் எழும்புறன். ஒன்னுமே புரியல்லயே...
- படிக்கனும் என்று Book அ திறப்பன். அதே வேகத்தில தூங்கிறுவன்...
- படிப்பு சரியான Boar அடிக்கிது.. விருப்பமே இல்ல!
- படிக்கிறேன்! படிக்கிறேன். எல்லாமே மறக்குதே! நான் என்ன தான்.. செய்ய?
- Maths என்றாலே தலைவலி! அத பத்தி பேசாதீங்க...
- Exam..மா? நெனச்சாலே பயமா இருக்குது!

உங்கள் பிள்ளைகளிடம் இப்படியான புலம்பல்களை கேட்டு கேட்டு அலுத்து விட்டீர்களா? இவற்றுக்கு சரியான தீர்வுகளை பெற்றுக் கொண்டால் மட்டுமே பிள்ளைகள் ஆர்வத்தோடு சிறப்பாக கற்பார்கள்.

| | |
|---|---|
| Grade | 02 to 13 |
| Medium | Tamil, English, Sinhala |
| Course Date | April / May (School Holidays) |
| Course fee | 3500/- |

| | |
|---|---|
| ஓட்டமாவடி | கல்முனை |
| காத்தான்குடி | புத்தளம் |

**0774447110**




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஸீறா...

(49ஆம் பக்கத் தொடர்)

பின் மறுபுறத்திலுள்ளவரைப் பார்த்தும் அவ்வாறே வினவினார். அவர் "நான் அம்ர் இப்னு ஆஸ்" எனப் பதிலளித்தார். ஹுதைபா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தனது புத்திசாதுரியத்தால் இக்கட்டான நிலையிலிருந்து தப்பித்துச் சென்றார்கள். அம்ர் இப்னு ஆஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய பின்னர் இந் நிகழ்வை எண்ணி ஒரு வருட காலமாக சிரித்ததாக குறிப்பிடுகிறார்கள்.

06. எதிரிப்படை பின்வாங்கியது. அவர்கள் தோல்வியுடனும் ஏமாற்றத்துடனும் திரும்பினார்கள். இதன்பின் அவர்களால் முஸ்லிம்களை அழிப்பதற்கான எம்முயற்சியையும் மேற்கொள்ள முடியாது என்பதை பின்வருமாறு குறித்துக் காட்டினார்கள்.

"இப்போது நாம் அவர்களுடன் போரிடுவோம்; அவர்கள் எங்களுடன் போரிட மாட்டார்கள். நாமே அவர்களை நோக்கிப் புறப்படுவோம்."

ஹந்தக் முடிவடைந்து ஆயுதத்தை தரிக்கும் முன் தமது உடன்படிக்கையை முறித்து மோசடிசெய்த பனூகுறைழாக்களுடன் யுத்தம் புரியுமாறு வஹி அருளப்பட்டது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் 3000 வீரர்களுடன் பனூகுறைழா பூமியை நோக்கிப் புறப்பட்டார்கள். அவர்களில் 36 குதிரை வீரர்கள் இருந்தனர். பனூகுறைழா பூமியை முஸ்லிம்கள் 25 இரவுகள் முற்றுகையிட்டனர். இறுதியில் அவர்கள் தமது தவறை உணர்ந்து சரணடைந்தனர். ஸஃத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் பனூகுறைழாக்களுக்கு தீர்ப்பளிக்குமாறு நபியவர்கள் வேண்டினார்கள். அதற்கு அவர், "அவர்களில் போரிட்டோர் கொலை செய்யப்பட வேண்டும். ஏனையோர் கைதுசெய்யப்பட வேண்டும். செல்வங்கள் முஸ்லிம்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்" எனத் தீர்ப்பளித்தார்கள். நபியவர்களும் ஸஃத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் தீர்ப்பில் திருப்தி கண்டார்கள். அவர்களில் 400 பேர் இருந்தனர். மூவர் இஸ்லாத்தைத் தழுவி பாதுகாப்புப் பெற்றார்கள். அதன் பின்னர் ஸஃத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் வபாத்தானார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவரைக் கட்டித்தழுவி "ஸஃத் மரணித்து விட்டார். அவரது மரணத்தால் ரஹ்மானுடைய அர்ஷ் ஆட்டம் கண்டது. 70,000 மலக்குகள் அவரது ஜனாஸாத் தொழுகைக்காக இறங்குகிறார்கள்."

**பாடங்களும் படிப்பினைகளும்**

1. முடியுமான பலத்தைத் திரட்டிக் கொள்ளுங்கள்.
2. படைத் தளபதி, வீரர்களுக்கு மத்தியில் நீதி, சமத்துவம் பேணப்படல்
3. முஃமின்கள் மீது அன்பு செலுத்துதல்
4. கொள்கைக்கு அர்ப்பணம், தியாகம் அவசியம்.

(தொடரும்)


## சிறுநீரக மாற்று சிகிச்சைக்கு உதவி கோருகிறார்

அனுக்கண, ஹெட்டிப்பொல எனும் முகவரியில் வசிக்கும் எம்.ஜே.ஏ. ரஹ்மான் என்பவர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு தற்போது இரு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையிலுள்ளார். இவருக்கு அவசரமாக சிறுநீரக மாற்று சத்திரக சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமென வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கூலித் தொழில் புரியும் இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவருக்கு A+ சிறுநீரகம் தேவைப்படுகிறது. சிறுநீரக தானம் செய்ய விரும்புவோர் 0777109936, 0375715736 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். பண ரீதியில் உதவி செய்ய விரும்புவோர் பின்வரும் வங்கிக் கணக்கில் வைப்பிலிட முடியும்.

M.J.A. Rahman
H.N.B.
Hettipola Branch
Acc No: 15202002 1075
மேலதிக தொடர்புகளுக்கு:
0777109936, 0375715736

## ஈரல் கரையும் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுமிக்கு உதவுங்கள்

464\1, ஹிஜ்ரா மாவத்தை, திஹாரி எனும் முகவரியில் வசித்துவரும் சிறுமி பாத்திமா அப்ரா (15 வயது) ஈரல் கரையும் நோயினால் (Liver Cirrhosis) கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார். இவருக்கு வெளிநாட்டில் உடனடியாக சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இதற்கு 70 இலட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சாதாரண முச்சக்கர வண்டி ஓட்டுனரான நோயாளியின் தந்தை சத்திர சிகிச்சைக்கு செலவாகும் பணத்தை திரட்டுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றார். ஆகவே, தாராளமனம் படைத்தவர்களின் உதவிகளை எதிர்பார்க்கின்றார்.

மேலதிக விபரங்களுக்கு:
0777 243 546
Fathima Afra
Bank A/C No: 75772313,
B.O.C, Bambalapitiya Branch




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வளமிக்க பஜ்ருடன்...**

(6ஆம் பக்கத் தொடர்)

தொடராக ஃபஜ்ருக்கும் இஷாவுக்கும் ஜமாஅத்துடன் தொழுகையை நிறைவேற்ற பள்ளிவாசலுக்குச் சென்றோர் வரையறுக்கப்படாத, குறைவில்லாத பூரண ஒளியில் இருப்பார்கள்.

*10.* உலக சொத்து, சுகங்கள் அனைத்தையும் விட பஜ்ரின் முந்திய சுன்னத்துத் தொழுகை மேலானது.

அப்படியாயின் பஜ்ரின் மகோன்னத நிலைதான் என்ன? நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். "பஜ்ரின் இரண்டு நபிலான ரக்அத்துகள் இந்த உலகம், அதில் உள்ளவை அனைத்தையும் விட மேலானதாகும்." (முஸ்லிம்)

புத்திகூர்மையும் ஞானமும் உள்ள ஒரு முஸ்லிம் நபியவர்கள் விரும்பியதையே தனக்கும் விரும்புவான். அவை இரண்டும் இந்த உலகத்திலுள்ள அனைத்தையும் விட எனக்கு விருப்பத்துக்குரிவையாகும்." (முஸ்லிம்)

*11.* பஜ்ரின் அகீதா

பஜ்ரின் முந்திய சுன்னத், தெளிவான பஜ்ர் பொழுதில் தெளிவான அகீதாவுடன் விடியச் செய்கிறது. இறைத்தூதரின் ஓர் அலாதியான நுபுவ்வத்தின் ஞான நிறைவில் தனது இயக்க ஊழியர்களை தன்னோடு செய்து கொண்ட கொள்கைவழி உடன்படிக்கையில் வழிநடத்தும் ஏற்பாடு இது. பஜ்ரின் சுன்னத் தொழுகையில் முதல் ரக்அத்தில் ஸூரதுல் காபிரூனையும் இரண்டாவது ரக்அத்தில் ஸூரதுல் இஹ்லாஸையும் ஓதுமாறு பணித்தார்கள் நபியவர்கள். இந்தப் பயிற்றுவிப்பு அகீதாவை ஆழ வேரூன்றச் செய்து, விசாலமான கிளைகளையும் நிறைவான விளைவையும் உண்டு பண்ணுகிறது. அகீதாவின் முழுமைத் தன்மையுடன் அதன் மீது ஆழ்ந்த பற்றும் உறுதியும் கொண்ட நிலையோடு குப்ருக்கு சவால் விடுக்கும் உயர்ந்த ஆளுமைகளின் தயார்படுத்தலே பஜ்ரின் சுன்னத்துத் தொழுகையாகும்.

பஜ்ர் தொழுகையை உணர்வுபூர்வமாகவும் சரியாகவும் ஜமாஅத்துடன் நிறைவேற்றுவதன் மூலம் ஒரு வெற்றிகரமான முஸ்லிமாக எம்மை ஆக்கிக் கொள்ள முற்படுவோம். ஸூரதுல் பஜ்ரின் தர்பிய்யாவுக்கான முதலாவது முறையியலை இங்கு சுருக்கமாக நோக்கியுள்ளோம்.

**விதி பற்றிய...**

(51ஆம் பக்கத் தொடர்)

இந்த அல்குர்ஆன் வசனத்தை ஏற்றுக் கொள்பவர் கள் மனச்சாந்தி அடைந்தவர்களாகவும் எவ்வித அச்சமற்றவர்களாகவும் தமது விதியுடன் மிகவும் திருப்தியடைந்தவர்களாகவும் இருப்பார்கள். தமக்கு விதிக்கப்பட்டது தமக்கு சார்பாக இருப்பினும் சார்பற்றதாக இருப்பினும் அதனை அப்படியே ஏற்றுக் கொள்வார்கள். பயம், முறைப்பாடுகள், துக்கம், புலம்பல்கள் இவற்றால் ஒருவரின் விதியை மாற்றியமைக்கவே முடியாது. எனவே, அவர்கள் தமது இழப்பையோ நஷ்டத்தையோ கூறிக் கூறிப் புலம்பிக் கொண்டிருக்க மாட்டார்கள். மாறாக, அமைதியடைந்த உள்ளத்துடன் இறைவனின் அருளை ஆதரவு வைத்தவர்களாக நல்ல செயல்களில் தொடர்ந்தும் ஈடுபடுவார்கள். கடந்து சென்ற தோல்வியான நேற்றுக்களை எண்ணி எண்ணிப் பெருமூச்சு விடுபவர்களாக அவர்கள் இருக்க மாட்டார்கள். மாற்றமாக, கடந்த காலத் தவறுகளில் இருந்து பாடம் படிப்பவர்களாகவும் அவற்றை நிகழ்கால, எதிர்கால செயற்பாடுகளில் பிரயோகிக்கக் கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

இந்த வகையில் விதி பற்றிய உண்மையான நம்பிக்கை நல்ல செயல்களைச் செய்வதற்குத் தூண்டுகின்றது. அத்துடன் உள்ளத்தை சாந்தப்படுத்தக் கூடிய ஊற்றாக உள்ளது. விதியைப் பற்றிய நம்பிக்கை இல்லாமல் இருப்பது ஒருவனை இயங்காது முடங்கிவிடச் செய்துவிடும். இதனால் அவன் செயற்பாடற்ற ஒருவனாக மாறிவிடுவான். இஸ்லாம் இந்நிலையை ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை.

**கிரீமியா...**

(20ஆம் பக்கத் தொடர்)

ஆர்ப்பாட்டங்களை அடக்கி, உரிமைகளை ஒடுக்க இராணுவ, பொலிஸ் நடவடிக்கைகளே சரி; மக்கள் விருப்பத்தை ஏற்று, ஆர்ப்பாட்டக்காரர்களைக் கொன்று குவிக்காது, அரசியல் தீர்வு வழங்குவது பிழை என்ற கொள்கையின் அடிப்படையில் ஆட்சியாளர்கள் இனியும் சர்வதிகாரப் போக்கை கடைபிடிக்க முயற்சித்தால், கதாபிக்கு நேர்ந்த கதியே நடக்கும். உக்ரைனில் யினோகோவிச் ஆர்ப்பாட்டக்காரர்களை ஆயுத முனையில் தாக்கியதால், இன்று ரஷ்யாவுக்கு தப்பியோட நேரிட்டுள்ளது. இன்று ஏற்பட்டுள்ள தனி மனித மாற்றம் தாமதித்தாலும் நிச்சயம் நாளை ஒரு நாள் சமூக மாற்றத்திற்கு வழிகோலியே தீரும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டார்...

(16ஆம் பக்கத் தொடர்)

மேலும், சர்வதேச இஸ்லாமிய அறிஞர்கள் ஒன்றியத்தின் தலைமையகம் டோஹாவில் அமைந்துள்ளமை இன்னுமோர் முக்கிய அம்சமாகும். மாத்திரமன்றி, கலாநிதி தாரிக் ரமழான் தலைமை வகிக்கும் இஸ்லாமிய சட்டவாக்கத்திற்கும் பண்பாட்டிற்குமான ஆய்வு மையம் கட்டாரை தலைமையகமாகக் கொண்டே இயங்கி வருகிறது. அதனை விட மிக சுவாரஷ்யமான அம்சம் என்னவென்றால், பலஸ்தீனின் ஹமாஸ் அமைப்பின் தலைமையகமும் அதன் முன்னணி உறுப்பினர்களும் டோஹாவிலேயே இயங்கி வருகின்றனர். மேலும், எகிப்திய இராணுவப் புரட்சியின் பின்னர் பல இஃவானுல் முஸ்லிமூன் இயக்கத்தைச் சேர்ந்த முன்னணி உறுப்பினர்கள் கட்டாரிலேயே தஞ்சம் புகுந்துள்ளனர். காஸாவுக்கு நீதி உதவி செய்வதிலும் அதன் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடைக்கு எதிராக சர்வதேச ரீதியில் குரலெழுப்புவதிலும் கட்டார் முன்நிற்கிறது.

இவ்வாறு கட்டார் பின்பற்றும் வித்தியாசமான கொள்கைகள் அதனை மத்திய கிழக்கின் மறுக்க முடியாத ஒரு சக்தியாக வலுப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதனை ஏனைய வளைகுடா நாடுகளால் சகிக்க முடியவில்லை. இதுவே தற்போது GCCக்கும் கட்டாருக்கும் மத்தியில் தொடரும் முறுகல் நிலையின் பின்புலமாகும். GCC நாடுகள் கட்டார் விடயத்தில் அச்சப்படும் முக்கியமான இன்னோர் அம்சம் என்னவென்றால், கட்டார் தனக்கிருக்கும் பிராந்திய வலிமையைப் பயன்படுத்தி துருக்கி, ஈரான் மற்றும் ஓமான் உள்ளடங்கலான ஒரு புதிய கூட்டணியை ஆரம்பிக்கலாம். அவ்வாறு புதியதொரு வலுச்சமநிலை உருவாக்கப்படும் சந்தர்ப்பத்தில் வளைகுடா நாடுகளின் ஒத்துழைப்புக்கான அமைப்பின் பிராந்திய ஆதிக்கம் வலுவிழப்பதோடு, அது எதிர்காலத்தில் அரசியல் வலிமையற்ற அமைப்பாகவும் மாறலாம்.


**மௌலவியா ஹிதாயா இப்றாஹீம் அவர்கள் எழுதிய நவீன முறையில் கணிதம் கற்போம், நவீன முறையில் தமிழ் மொழி கற்போம் ஆகிய இரு நூல்களையும் பெற விரும்புவோர் பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்:**

**0771 998 165, 0774 647 465**

# DIPLOMA IN PRE SCHOOL TEACHER TRAINING

AMI METHOD

பெண்களுக்கான ஒரு மாத வதிவிட பயிற்சிநெறி

- Child psychology
- English
  - Writing skills
  - Communication skills
  - Reading skills
- Maths
  - Preliminary
- Art and Craft
  - Hand Work Display and Materials Used
- Introduction to Sensorial Education
  - Presented with Necessary Equipments
  - Developing the Talents of Children Accordingly



பாலர் பாடசாலையொன்றினை ஆரம்பித்து நடாத்துவதற்கான விசேட முகாமைத்துவ பயிற்சிகளும் வழங்கப்படும்.

நவீன கற்பித்தல் முறைகள்
நிபுணத்துவமிக்க ஆசிரியர் குழாம்
சிறந்த பாடத்திட்டம்
சிறந்த உணவு மற்றும்
பாதுகாப்பான தங்குமிட வசதி

skill academy | QCHE

38/2, Kandy Road, Welamboda

விபரங்களுக்கு 0777 967667 | 0772 383555




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல தனியார் வைத்தியசாலையில் பின்வரும் ஊழியர் வெற்றிடங்கள் உள்ளன.

1. Cashier
2. Receptionist
3. Pharmacy Assistant
4. Nurse
5. Accounts Executive
6. Accounts Assistant

தகுதி உடையோர் தமது Bio Dataவை பின்வரும் முகவரிக்கு தபால் மூலம் அல்லது மின் அஞ்சல் மூலம் அனுப்பவும்.

**Address**

**Royal care Hospital Pvt Ltd.**
322/1, Mahakumburawela Road,
Akurana 07.
E-mail: akurana.carehospital@gmail.com


# MAJESTIC COLLEGE

MCBT
Asian Campus



MAWANELLA - SRI LANKA

## DIPLOMA IN SPOKEN ENGLISH



*One Month Residential Program*
Enrolments Open now........
Spoken English.......



ஒரு மாத கால முழு நேர வதிவிட பயிற்சிநெறி.
- உணவு தங்குமிட வசதி!
- தகுதிவாய்ந்த விரிவுரையாளர்கள்
- கற்றலுக்கான ஆரோக்கியமான சூழல்
- நவீன கற்பித்தல் முறை
- நியாயமான கட்டணம்

Knowledge is Power.

**Call us: 077 23 83 555**

MCBT - Majestic College of Business & Technology
Mawanella, Sri Lanka.

## ஹலால்!! ஹலால்!! ஹலால்!!

HALAL

உங்கள் கையடக்க தொலைபேசிக்கு

"மனிதர்களே! பூமியிலுள்ள பொருட்களில், அனுமதிக்கப்பட்டவற்றையும், பரிசுத்தமானவற்றையும் உண்ணுங்கள்: ஷைத்தானின் அடிச்சுவடுகளை பின்பற்றாதீர்கள் - நிச்சயமாக அவன் உங்களுக்கு பகிரங்கமான பகைவனாவான்." (அல்குர்ஆன் 2 : 168)

சேவைகள் :-
- ஹலால், ஹராம், மஸ்பூஹ், **E-CODE** பற்றிய விழிப்புணர்வு
- உணவு வகைகளில் கலக்கப்படும் இரசாயனப் பதார்த்தங்கள்.
- எந்த **E-CODE** எந்த பதார்த்தத்தில் கலக்கப்படுகிறது. சம்மந்தமான தகவல்கள்

சேவையைப் பெற :-

**REG** < இடைடிவெளி > **Halal** என **TYPE** செய்து உங்கள் **Dialog** தொலைபேசியில் இருந்து **77001** க்கு அனுப்புங்கள்

மாதம் Rs. 30 + வரி மட்டுமே

"ஹலால் உணவில் மட்டுமல்லாது வாழ்க்கையின் சகல விடயங்களிலும் பேணப்பட வேண்டும்!"

தபால் மூலக் கல்வி

## Dip in Montessori Teaching

Syllabus:
1. Sensorial Development
2. Practical Life
3. Child Psychology
4. Beginning Math
5. Language Development

Medium: English, Duration: 6 Months,
Fees: Rs 6000.00 (Payable in 2 Installment)

அனைத்து பாடங்களும் தபால் மூலம் கற்பிக்கப்படும், இறுதியில் சர்வதேச அங்கீகார Certificate வழங்கப்படும். Application Form, மேலதிக விபரங்கள் பெற கீழ்வரும் கையடக்க தொலைபேசிக்கு பெயர், முகவரியை SMS செய்யுங்கள். 0729881033

INSTITUTE OF SOCIAL & TECHNICAL STUDIES
400 First Floor, Main Street, Maruthamunai 3,
Kalmunai. http://istsedu.net84.net
வெளிநாட்டில் உள்ளோர்: ists999@gmail.com
affiliated with: IAO - U.S.A

Internationally Recognized Certificate



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த விஞ்ஞான பட்ட தாரியான அரச மகளிர் பாடசாலை ஒன்றில் விஞ்ஞான ஆசிரியையாகக் கடமையாற்றும் மணமகளுக்கு (வயது 27 உயரம் 5' 2") பொருத்தமான மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மாலை 5.00 மணி முதல் இரவு 10:30 வரை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு: 0720527276**

கண்டியைச் சேர்ந்த தற்போது கொழும்பில் வசித்து வரும் உயர் தரம் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்று திருமணமாகி இரண்டு மாதங்களில் பஸ்ஹு முறைப்படி விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு (வயது 27 உயரம் 5' 2") படித்த மார்க்கப்பற்றுள்ள மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 0773673840**

கம்பளை பிரதேசத்தைச் சேர்ந்த திருமணமாகி ஒரு வருட காலத்திற்குள் விவாகரத்துப் பெற்ற தரம் 10 வரை கல்வி கற்ற ஆங்கிலம் பேச முடியுமான மார்க்கப்பற்றுள்ள அழகிய மணமகளுக்கு (வயது 19) நற்குணமும் மார்க்கப்பற்றுமுள்ள தொழில் புரியும் 32 வயதுக்குக் குறைந்த மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 0779684574, 0815688487**

மேல் மாகாணத்தை விதிவிடமாகக் கொண்ட க.பொ.த. சாதாரண தரம் வரை கற்ற முன்பள்ளி டிப்ளோமா தராதரமுடைய தையல், கைவேலை தெரிந்த மணமகளுக்கு (வயது 27 உயரம் 5' 2") நல்லொழுக்கமுள்ள, படித்த மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 0718680563**

சப்ரகமுவ மாகாணத்தைச் சேர்ந்த மார்க்கப்பற்றும் நற்குணமும் நல்லொழுக்கமுமுள்ள பயிற்றப்பட்ட ஆசிரியையாகக் கடமையாற்றும் மணமகளுக்கு (வயது 28) அரச, தனியார் துறைகளில் சேவையாற்றும் தகுந்த மணமகனை குடும்பத்தினர் எதிர்பார்க்கின்றனர். மணமகளுக்கு சொந்தமான வீடு உண்டு. கேகாலை, கண்டி, குருணாகல் மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 0777702919**
**(இரவு 8.00- 10.00 வரை தொடர்பு கொள்ளவும்)**

கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த கௌரவமான, வசதியான குடும்பத்தைச் சேர்ந்த பயிற்றப்பட்ட ஆசிரியையாகப் பணியாற்றும் மணமகளுக்கு (வயது 30) பொருத்தமான துணை தேவை. கம்பஹா, கேகாலை, கொழும்பு மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அரச, தனியார் துறைகளில் பணியாற்றுவோர் அல்லது சொந்த வியாபாரம் செய்வோர் விண்ணப்பிக்கவும்.

**தொடர்புகளுக்கு: 0716143725**

மாவனல்லை பிரதேசத்தைச் சேர்ந்த க.பொ.த. உயர் தரம் சித்தியடைந்த மௌலவியா மணமகளுக்கு (வயது 28) பொருத்தமான, மார்க்கப்பற்றுள்ள மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 0718 203626**

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த கௌரவமான குடும்பப் பின்னணியுடைய, தகுந்த காரணங்களுக்காக பஸ்ஹு முறைப்படி விவாகரத்துப் பெற்ற மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கு (வயது 29 உயரம் 5' 3" பிள்ளைகள் இல்லை) பொருத்தமான மார்க்கப்பற்றுள்ள துணையை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 071 8369333, 033 2290819**

## மணமகள் தேவை

கொழும்பில் வசிக்கும் BCS கல்வித் தகைமையுடைய பிரபல தனியார் கம்பனி ஒன்றில் Networking Engineerஆக கடமையாற்றும் மணமகனுக்கு (வயது 28 உயரம் 5' 9") பொருத்தமான படித்த மார்க்கப்பற்றுள்ள மணமகனை குடும்பத்தினர் எதிர்பார்க்கின்றனர். கொழும்பு மற்றும் கொழும்பை அண்டிய பகுதியிலுள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 0766519895**

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த அரச பாடசாலையில் கடமையாற்றும் அரபு, ஆங்கிலம் மற்றும் கணனி துறையில் தேர்ச்சிபெற்ற நளீமியா பட்டதாரியான மணமகனுக்கு (தகுந்த காரணங்களுக்காக விவாகரத்துப் பெற்றவர்) சிறந்த, இஸ்லாமியப்பற்றுள்ள நற்குணமுள்ள குறைந்தபட்சம் க.பொ.த. உ/த வரை கற்ற 30முதல் 36 வயதிற்குட்பட்ட பொருத்தமான துணையைத் தேடுகின்றார். குறுகிய காலத்தில் விவாகரத்துப் பெற்றோரும் (பிள்ளைகள் அற்றவர்கள்) கவனத்திற் கொள்ளப்படுவர்.

**தொடர்புகளுக்கு: 072 1230277, 0757580253**
E.mail- youthtowards.help@gmail.com

**நிகாஹ் விளம்பரங்களை தகுந்த ஆவணங்களைப் பெற்று சேவை நோக்கிலேயே பிரசுரம் செய்கின்றோம். இரு தரப்பாரும் விளம்பரங்கள் தொடர்பில் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறோம். (ஆசிரியர்)**

அல்ஹஸனாத் இதழுக்கு சந்தாக்கள் அனுப்ப நாடுவோர் ALHASANATH என்ற பெயருக்கு Money Order எடுத்து தபாலகம் DEMATAGODA எனக் குறிப்பிட்டு அனுப்பவும். வங்கியில் வைப்பிலிட நாடுவோர் Srilanka Jamath - E-Islami AC NO: 1320009182, Commercial Bank, Maradana அல்லது Srilanka Jamath - E-Islami AC NO: 372132, B.O.C, Maradana எனும் வங்கிக் கணக்கில் குறித்த தொகைப் பணத்தை வைப்பிலிட்டு பற்றுச்சீட்டை அனுப்பவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LEARN & GET JOBS in Middle - East Countries

- **CAD & BS**
  (Advanced Engineering Draughtsmanship with Building Construction Technology)
- **AutoCAD 2D & 3D**
  with Manual Drafting Practice
- **MEP Drafting**
- **MEP QS Practice**
- **3D Studio Max**
- **Primavera** Project Management
- **Computer** Applications

Register Now for New Batches

**the aCADDemy**
College of Architectural Engineering Technology

340/1,D.S.Senanayake Road, Kandy
0773 66 58 38

22, Kaburady Road, Kattankudy-01
0776 32 34 34

34, Main Street, Sainthamaruthu-05
0778 444 110

Web: www.acaddemy.lk | Email: theacaddemy@gmail.com

Registered under:
TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION
Ministry of Youth Affairs and Skills Development



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துரித தொழில்சார் பாடநெறிகள் IBSல் ஆரம்பமாகின்றன!!

# SYSTEM ENGINEER
## FIRST TIME IN SRI LANKA

- Sonicwall security
- Door access controlling
- CCTV Camera
- Networking
- Hardware
- skill development

- CCNA
- MCSA
- Linux
- PBX
- IT
- WEB

**ATTRACTIVE JOB OPPORTUNITIES BOTH LOCALLY & OVERSEAS**

ஆசிரியப் பயிற்சி நெறியில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழுடன்
ஆசிரியராகும் உங்கள் கனவைப் பூர்த்தி செய்யுங்கள்!

**Diploma in Training Skills**

**National Certificate in Pre-School Teaching**

**Diploma in Montessori Training (AMI)**

**Diploma in Child Psychology**

பெண்களுக்கு மட்டுமேயான விஷேட வகுப்புக்கள்

City & Guilds

TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION

AMI

O/L பரீட்சையை எழுதிய மாணவர்களுக்காக விஷேடமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறி

## Degree Foundation Studies in Business & IT

- Information Technology
- Web Designing
- Graphic Designing
- & English
- Business Management
- Accounting & Book Keeping
- Hardware with Networking

ஒவ்வொரு கற்கை நெறிக்கும் தனித்தனியான சான்றிதழோடு,
கற்கை நெறியைப் பூர்த்தி செய்த சான்றிதழும் வழங்கப்படும்.

## IBS Campus (Pvt) Ltd

67, Kawdana Road, Dehiwala
Tel: 011 2712149, 077 427 1384

89, Mulgampola Road, Kandy
Tel: 081 223 2282, 077 165 8678

Email: info@ibslanka.com, Web: www.ibslanka.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LAW

## LLB (Hons) From University of Wolverhampton

The BTEC HND in Law delivered by BCAS Campus is awarded by the Edexcel, UK. Major portion of the curriculum is contextualized on existing legal system in Sri Lanka. The student is assessed through Examination( Open and Closed books) , Time Controlled Assessment, scenario based course works , written and viva voce examinations plus presentations.

On successful completion of the HND, the students are accepted for LLB (Hons) top-up which is again delivered locally for the University of Wolverhampton, UK. This degree awarded by the said university has been recognized by the Council of Legal Education, Sri Lanka making way for the students for direct entry to the Sri Lanka Law College.

The flying faculty of the UK University is substantially involved in the delivery process while the assessments and examinations are exclusively conducted by the university itself. This set-up gives the local students a harmonious blend of local and international learning experience as the students enjoy lectures delivered by the flying faculty with the online library facility made available.

## BTEC HND - edexcel

**Semester 1**

+ Legal System
+ Law of Contract
+ Criminal Law
+ Law of tort

**Semester 2**

+ Constitutional Law
+ Company Law
+ Family Law
+ Employment Law

**Semester 3**

+ Evidence
+ Law of Property
+ Human Rights Law
+ Interpretation of Statutes

**Semester 4**

+ Commercial Law
+ International Law
+ Jurisprudence
+ Project on Legal Research

## LLB (Hons) – 3rd Year Structure

**Year Long Modules**

+ Research Methods & Project
+ Equity & Trusts

**Semester 1**

+ International Trade & finance Law
+ Counter Terrorism Law Policy & Practice

**Semester 2**

+ Contemporary Issues on European Law
+ Law of Criminal Evidence

BCAS Awarded "Performance Excellence" for the years 2010 & 2011 by Edexcel - UK

Ranked as No.1 Higher Education Provider (Private Sector) - Survey by LMD

15 YEARS

**Hotline : 077 311 4105**

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

**Colombo Campus :**
32, Dharmarama Road, Colombo 06.
Tel : (+94) 11 250 1145 , (+94) 11 255 9255
Email : info@bcas.lk www.bcas.lk

**Kandy Campus :**
344, Peradeniya Road, Kandy. Tel : 081 222 4731

**Batti Campus :**
294, 1/4 Trinco Road, Batticalo. Tel : 065 222 8451

**Wayamba Campus :**
103, Dambulla Road, Kurunegala. Tel : 037 2221144

**Jaffna Campus :**
16, Point Pedro Road, Jaffna. Tel : 077 710 2131

www.MacroAdz.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in GPO/QD/12/NEWS/2014 Printed by AJ Prints (Pvt) Ltd. 44, Station Road, Dehiwela.

ISO 9001 : 2008 CERTIFIED IT INSTITUTE

TURNKEY IT CAMPUS No.1

# இலங்கையின் மிகப்பெரிய ஹாட்வெயார் நெட்வர்க் பயிற்சி நிலையம்

IT துறையில் அதிகூடிய ஊதியம் பெறக்கூடிய NETWORK துறையில் இன்றே இணையுங்கள்.

Great offer for CISCO & Microsoft exam takers at TURNKEY Test Center

PEARSON VUE-Authorised Test Centre

PROMETRIC TEST CENTER

## Do You Want to be an Internationally Recognized Network Engineer!!

DACHNP

Diploma in Advanced Certified Hardware & Network Professional

Six Recognized Certifications

- CISCO CCNA — Cisco Certified Network Associate (CCNA 200 - 120 New Syllabus)
- Microsoft Certified — Microsoft Certified Solution Associate (MCSA 70 - 410)
- DLNA — Diploma in Linux Network Administration with Security
- DWNA — Diploma in Windows Network Administration (Server 2012)
- DHEN — Diploma in Hardware Engineering with Networking (PC & Laptop)

MCSA — Windows 8

MCSA — Server 2012

MCSE — Server 2012

CCNA — Voice, Security

CCNP — IP Routing, IP Switch, IP Tshoot

CCIE — Routing & Swithing written Exam 350 - 001

CompTIA A+ N+

C|EH

## TURNKEY
ஏன் தெரிவு செய்ய வேண்டும்?

- இலங்கையில் Hardware & Network துறையில் அதிகமான வல்லுனர்களை உருவாக்கிய முதன்மை நிறுவனம்.
- Authorized Test Centre for CISCO & Microsoft Examinations
- வெளிநாட்டு தூதரகங்களிலும் தொழில் வாய்ப்பு வழங்குனர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச சான்றிதழ்.
- CISCO, Microsoft & Network பாடநெறிகளுக்கு உயரதரமிக்க பரிசோதனைக் கூடம்.
- மறைமுகக் கட்டணங்கள் இல்லை.

Our Accreditations

Microsoft Partner

ISO 9001: 2008 CERTIFIED COMPANY

10% SPECIAL DISCOUNT on any Microsoft Online Exams for TURNKEY students

TURNKEY IT TRAINING

Dedicated for Professional Coaching

2 581581

**COLOMBO**
562/15B, Lower Bagathale Road,
(Road adjoining Premadasa Jewellers-Sea side) Colombo 03.
Tel: 2 581581, 2 595336, 077 2286988

**KANDY**
504/1, Peradeniya Road, Kandy. Tel: 081 2205678, 077 5077456

Email: info@turnkey.lk

HOTLINE 0772 286 988

Now register for any course online @ www.turnkey.lk

An Institution registered with Tertiary and Vocation Education Commission of Sri Lanka. Reg No. PO1/200

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org